# 2017
වාර්ෂික වාර්තාව
ஆண்டறிக்கை
Annual Report




SPMC

ශ්‍රී ලංකා රාජ්‍ය ඖෂධ නිෂ්පාදන සංස්ථාව

இலங்கை அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம்

**State Pharmaceuticals Manufacturing Corporation of Sri Lanka**

## සමරු ඵලකයේ සටහන

අත්‍යවශ්‍ය ඖෂධ නිපදවීම සඳහා වූ මෙම ඖෂධ සංයෝග මධ්‍යස්ථානය ශ්‍රී - ලංකා ජපාන මිත්‍රත්වයේ සංකේතයක් ලෙසින් ජපන් රජය විසින් ශ්‍රී - ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය වෙත කරන ලද පරිත්‍යාගයකි.

1987

## நுழைவாயிலில் இருக்கும் பதக்கப் பலகை

இம் முக்கியமான மருந்துகள் தயாரிக்கும் மருந்தாக்கல் கலவைகள் நிலையம் யப்பான்
நாட்டிற்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும்
இடையே இருக்கும் நட்புறவு மற்றும் ஒருமைப்பாட்டின் அடையாளமாக
யப்பான் நாட்டினால்
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கு வழங்கப்பட்ட நன்கொடையாகும்.
1987

## Plaque at the Entrance

This Pharmaceuticals Formulation Centre for the essential drugs is an outright gift by the
Government of Japan to the Democratic Socialist Republic of Sri Lanka as a
token of friendship and co-operation between Japan & the
Democratic Socialist Republic of Sri Lanka.
1987

# ஆண்டறிக்கை - 2017

இலங்கை அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம்

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| எமது நோக்கும் பணியும் | 3 |
| கூட்டிணை நிறுவனத் தகவல்கள | 5 |
| அ.ம.உ.கூ. தாபிக்கப்பட்டமையும் அதன் பிரதான குறிக்கோள்களும் | 6 |
| தலைவரின் மீளாய்வு | 7 |
| பணிப்பாளர்கள் | 9 |
| பணிப்பாளர்களின் அறிக்கைகள் | 12 |
| கணக்காய்வுக் குழுவின் அறிக்கை | 14 |
| கூட்டிணை நிறுவன ஆளுகை அறிக்கை | 15 |
| எமது உற்பத்திக் கலவைகள் | 17 |
| பணிப்பாளர்களின் பொறுப்புகள் பற்றிய கூற்று | 18 |
| நிதியியல் நிலைமை பற்றிய கூற்று | 21 |
| முழுமையான வருமானக் கூற்று | 22 |
| உரிமை முதல் கூற்றில் மாற்றங்கள் | 23 |
| காசுப்பாய்ச்சல் கூற்று | 24 |
| நிறுவனத் தகவல்களும், கணக்கீட்டுக் கொள்கைகளும் | 25 |
| கணக்குகளுக்கான குறிப்பு | 33 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 46 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை பற்றிய தலைவரின் கருத்துக்கள் | 65 |
| வரைபட மீள்நோக்கு | 80 |
| கடந்த 10 ஆண்டுகளின் நிதி தொடர்பான முக்கிய தகவல்கள் | 83 |

## எமது நோக்கு

தெற்காசியாவில் மருந்தாக்கல்
மற்றும் சுகாதார பொருட்களை உற்பத்தி
செய்து சந்தைப்படுத்தும் சர்வதேச அங்கீகாரம்
பெற்ற மாதிரி நிறுவனமாகத் திகழ்தல்

## எமது பணி

சர்வதேச தரத்திலான
உயர்ந்த ரக பாதுகாப்பானதும்
பயனுறுதியானதும் விலை குறைவானதுமாக
மருந்துப் பொருட்களை உள்நாட்டு மற்றும்
வெளிநாட்டுச் சந்தைகளுக்காக
உற்பத்தி செய்தல



# கூட்டிணைவுத் தகவல்கள்

**நிறுவனத்தின் பெயர்**
இலங்கை அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம்

**சட்ட அமைப்பு**
1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் 1987ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது.

**கூட்டிணைக்கப்பட்ட திகதி**
ஜூன் 04, 1987

**பதிவு செய்யப்பட்ட அலுவலகம்**
இல.11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை,
கந்தவல எஸ்ரேட், இரத்மலானை, இலங்கை

**இயக்குனர் சபை**

| | |
|---|---|
| டாக்டர்.எஸ்.ஜீ.சமரசுந்தர | - தலைவர் |
| பொ.சுந்தரலிங்கம் | - நிர்வாக இயக்குனர் |
| டாக்டர்.சுசி பெரேரா | - இயக்குனர் |
| டாக்டர்.டி.வெங்கதேஸ்வரன் | - இயக்குனர் |
| மியுரு பாசித லியனகே | - இயக்குனர் |
| ஷ்ஃபீக் ரஜப்தீன் | - இயக்குனர் |
| கே.டி.எஸ்.ருவன்சந்ர | - இயக்குனர் |

**கணக்காய்வாளர்கள்**
கணக்காய்வாளர் தலைமைஅதிபதி, இல.306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை.

**வங்கிகள்**
இலங்கை வங்கி
மக்கள் வங்கி
தேசிய சேமிப்பு வங்கி

**முகாமைத்துவக் குழு**

| | |
|---|---|
| எஸ்.டபிள்யு.ஜயசுந்தர | - பொது முகாமையாளர் |
| கே.டி.ஏ.குருப்பு | - பிரதி பொது முகாமையாளர் (தரக்கட்டுப்பாடு) |
| ஏ.ஜி.டி.எஸ்.அதுரலிய | - பிரதி பொது முகாமையாளர் (நிதி) |
| எஸ்.பி.ஜயவீர | - பிரதி பொது முகாமையாளர் (உற்பத்தி) |
| ஆர்.எம்.ஆர்.எம்.ரனசிங்க | - பிரதி பொது முகாமையாளர் (வடிவமைப்பு,ஆ மற்றும் அ) - பதிற்கடமை |
| பி.டி.ஜயசுந்தர | - பிரதி பொது முகாமையாளர் (பொறியியல்) |
| ஆர்.தர்மதாச | - பிரதி பொது முகாமையாளர் (திட்டமிடல், மற்றும் கொள்வனவு) |
| எஸ்.டபிள்யு.சி.மொஹொட்டி | - பிரதி பொது முகாமையாளர் (மனித வளங்கள்) |
| வி.பி.முத்துக்குட | - முகாமையாளர் (உற்பத்தி) |
| வி.ஜே.பண்டாரவத்த | - உள்ளகக் கணக்காய்வாளர் |
| சி.டி.மகினாராச்சி | - முகாமையாளர் (மனித வளங்கள்) |
| ஏ.சி.பி.ஆனந்தகுமார | - முகாமையாளர் (திட்டமிடல், மற்றும் கொள்வனவு) |
| எச்.கே.பி.ஏ.சேனாதீர | - முகாமையாளர் (தரக்கட்டுப்பாடு) |
| அமில நுவன் ஹேவகம | - முகாமையாளர் (உற்பத்தி) |
| டி.எச்.ஜே.குணவர்தன | - முகாமையாளர் (பொறியியல்) |
| ஏ.எம்.ரி.பி.குலசேகர | - முகாமையாளர் (விற்பனை மேம்பாடு) |
| பு.தந்தநாராயண | - முகாமையாளர் (உற்பத்தி) |
| ஜே.எம்.எஸ்.ஜயசுந்தர | - முகாமையாளர் (நிதி) |
| பி.வி.எச்.பி.எஸ்.குமார | - முகாமையாளர் (பொறியியல்) |

**கணக்காய்வுக் குழு**

| | |
|---|---|
| கே.டி.எஸ்.ருவன்சந்ர | - தலைவர் |
| மியுரு பாசித லியனகே | - உறுப்பினர் |
| ஷ்ஃபீக் ரஜப்தீன் | - உறுப்பினர் |

# அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் தாபிக்கப்பட்டமையும் அதன் பிரதான குறிக்கோள்களும்

அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்கக் கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் கீழ் 1987ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது.

அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் 2017ஆம் ஆண்டில் இலங்கை மக்களின் சுகாதார நலன்களுக்குத் தேவையான முக்கியமான மருந்து வகைகளை வர்த்தக ரீதியில் உற்பத்தி செய்வதில் 30 வருடங்களைப் பூர்த்தி செய்கின்றது. அ.ம.உ.கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகள் 72 வகையான மாத்திரைகள் மற்றும் கூட்டுக் குளிகைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இந்த உற்பத்திகளில் 40 உற்பத்திகள் இவ்வாண்டில் முனைப்பாக மேற்கொள்ளப்பட்டன. இலங்கையில் மருந்தாக்கற் பொருட்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள ஒரேயொரு அரச கூட்டுத்தாபனம் அ.ம.உ.கூ. ஆகும்.

அதன் பிரதான நடவடிக்கைகள்:

1) மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்தல், பதனிடல், களஞ்சியப்படுத்தல், பொதி செய்தல் மற்றும் சம்பந்தபட்ட மருந்துகளை பொதி செய்தல்.

(2) மேற்கூறப்பட்ட தொழிற்பாடுகளுக்கான தொழில்நுட்ப அறிவை வழங்குதல்.

(3) மருந்தியல் பொருட்கள் மற்றும் மருந்தாக்கற் பொருட்கள் சம்பந்தமான ஆராய்ச்சி மற்றும் மருந்துகளை நியமப்படுத்தல்.

4) அவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட மருந்துப் பொருட்களைச் சந்தைப்படுத்தல்.

சந்தைக்கு விடப்படும் எல்லா உற்பத்திகளும் எமது உள்ளக (SPMC) தரக்கட்டுப்பாடுகளுக்கு அமைவாக உள்ளதுடன் பிரித்தானிய மருந்தகவியல் ( BP ) / ஐக்கிய அமெரிக்க மருந்தகவியல் (USP) தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்கின்றன.

தற்போதைய சிறந்த உற்பத்தி நடவடிக்கைகளின் (cGMP) ஒழுங்கு விதிகளையும் நடவடிக்கை முறைகளையும் நடைமுறைப்படுத்தல் ஒழுங்கான தரக்கட்டுப்பாட்டு ஆய்வின் மூலமும் தொழிற்சாலை மேற்பார்வை மூலமும் கிரமமாகக் கண்காணிக்கப்படுகின்றன.

# தலைவரின் செய்தி



2017 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையையும் ஐந்தொகை, வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுகளை உள்ளடக்கிய கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் மற்றும் கணக்காய்வாளரின் அறிக்கை போன்றவற்றையும் பணிப்பாளர் சபையின் சார்பில் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் (SPMC) 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் தரமானதும் பயனுறுதியானதும் பாதுகாப்பானதுமான மருந்துப் பொருட்களை நியாயமான விலையில் உற்பத்தி செய்து பொதுமக்களுக்கு வழங்கும் நோக்குடன் 1987ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. அ.ம.உ.கூ இலங்கையில் உள்ள மிகப் பாரிய முன்னணி மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்தி நிறுவனமாகும். தற்போது, பரந்த அளவிலான மருந்தாக்கவியல் உற்பத்திகளை உள்ளிட்ட 72 மருந்துப் பொருட்களை அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் உற்பத்தி செய்கின்றது. அ.ம.உ. கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்படும் எல்லா உற்பத்திகளும் பிரித்தானிய மருந்தகவியல் (BP), ஐக்கிய அமெரிக்க மருந்தகவியல் (USP) மற்றும் அ.ம.உ.கூட்டுத்தாபனத்தின் நியமங்கள் ஆகியவற்றினால் தேவைப்படுத்தப்படும் நியமங்களுக்கு அமைவானவையாகும். தற்போதைய சிறந்த உற்பத்தி நடைமுறைகள், ஒழுங்கு விதிகள் மற்றும் நடவடிக்கைகள் ஆகியவற்றின் நடைமுறைப்படுத்தல் உள்ளக தர ஆய்வு மற்றும் தொழிற்சாலை பரிசீலனை ஊடாக கிரமமாகக் கண்காணிக்கப்படுகின்றது.

அ.ம.உ.கூட்டுத்தாபனத்தின் மருந்தாக்கற் பொருட்களின் உற்பத்தி வசதி நவீன ஜப்பானிய, ஜேர்மன் மற்றும் கொரிய இயந்திரங்களைக் கொண்டுள்ளது. உற்பத்தி வசதிகள் அதீத தூய சுற்றாடலைக் கொண்டுள்ளதுடன் உலக சுகாதாரத் தாபனத்தின் (WHO) சிறந்த உற்பத்தி நடைமுறைகளுக்கு (GMP) அமைவானதாகும். அ.ம.உ.கூட்டுத்தாபனத்தின் உற்பத்திப் பொருட்கள் மருத்துவர்கள், மருந்தாளர்கள் மற்றும் சுகாதாரத் துறையிலுள்ள ஏனைய வல்லுனர்களால் மதிக்கப்பட்டு விரும்பப்படுகின்றன. துரமான மருந்தாக்கற் பொருட்களை உற்பத்தி செய்வோர் என நாம் பிரபல்யமாகி இருப்பதே எமது வெற்றிக்குப் பின்னால் உள்ள மிக முக்கியமான உந்து சக்தியாகும்.













## செயலாற்றம்

அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் 2017 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க வகையில் வரிக்கு பிந்திய தேறிய இலாபம் ரூபா.223 மில்லியனை இவ் ஆண்டில் பதிவு செய்துள்ளது.

### உற்பத்திவெளியீடு

2017ஆம் ஆண்டில் மொத்த உற்பத்தி வெளியீடு 1523 மில்லியன் அலகுகள் குளிகைகள் / கூட்டுக் குளிகைகளாகும்.

### புரள்வு

2017 ஆம் ஆண்டுக்கான மொத்தப் புரள்வு ரூபா 3,174 மில்லியன் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் ஈட்டப்பட்ட அதிகூடிய புரள்வாகும். மொத்த விற்பனைகளில், 78.25% சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவுக்கு(MSD) மேற்கொள்ளப்பட்டதுடன் மீதி விற்பனைகள் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்துக்கு (SPC) 0.34% மற்றும் எம்மிடம் பதிவு செய்துள்ள தனியார் மருந்தகங்களுக்கும் வழங்கப்பட்டவை ஆகும்.

திறைசேரியின் எவ்வித உதவியும் இன்றி அ.ம.உ.கூ அதன் சொந்த வளங்களைப் பயன்படுத்தி நன்றாக முகாமைத்துவம் செய்யப்பட்டது என்பதைத் தெரிவிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். அ.ம.உ.கூ ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் என்ற வகையில் 2017 இல் திறைசேரிக்கு ரூபா 45 மில்லியனைப் பங்களிப்புச் செய்து தனது பொறுப்பை நிறைவேற்றியுள்ளது.

### அபிவிருத்திப் பணிகள்

### தொழிற்சாலைஅபிவிருத்தி

2017 இல் அ.ம.உ.கூட்டுத்தாபனம் 1523 மில்லியன் குளிகைகள் மற்றும் கூட்டுக்குளிகைகள் உற்பத்தி செய்துள்ளது. மேலதிக நியூமேடிக் பவுடர்களை பரிமாற்றம் செய்யும் அமைப்பு உற்பத்தி திணைக்களத்தின் வேலைப்பழுவை குறைப்பதற்காக இவ்வாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

### விரிவாக்கல் கருத்திட்டம்

தொழிற்சாலையின் விரிவாக்கத்துக்கான நிதியீட்டத்தினை அ.ம.உ. கூட்டுத்தாபனம் ‘ஜைக்கா’ நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொண்டது. இந்தப் பணி 2018ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உத்தேச விரிவாக்கல் பூர்த்தியடைந்ததும் உற்பத்தி 3200 மில்லியன் அலகு குளிகைகள் மற்றும் கூட்டுக்குளிகைகளாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த விரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் புதிய இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கும் தற்போதுள்ள கட்டிடங்களைப் புதுப்பிப்பதற்கும் மூலப்பொருட்களையும் முடிவுப் பொருட்களையும் களஞ்சியப்படுத்துவதற்கு புதிய கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கும் அ.ம.உ. கூட்டுத்தாபனம் திட்டமிட்டுள்ளது.

### ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்

2017 ஆம் ஆண்டில், ஆறு உற்பத்திக்கு வடிவமைப்புக்கான அங்கீகாரமும் மூன்று உற்பத்திகளுக்கு உற்பத்தி உரிமமும் வழங்கப்பட்டன. அதற்கு மேலதிகமாக டில்டியசம் குளிகைகள் BP 30மி.கி தயாரிப்பதற்கு பதிவு செய்ய தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

### மனிதவளங்கள் அபிவிருத்திமற்றும் சேமநலன்

2017.12.31இல் இருந்தவாறு அ.ம.உ.கூ சிரேஷ்ட முகாமைத்துவத்தின் வழிகாட்டலின் கீழ் தொழிலின் போது பயிற்சியில் ஈடுபட்டுள்ள 15 பயிலுனர்கள் இரண்டு முறை மாற்றுக் கடமையின் (shift) சுமுகமான தொழிற்பாட்டுக்காக 279 ஊழியர்களைக் கொண்டிருந்தது. உள்நாட்டு நிறுவனங்களால் நடத்தப்படும் பல நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக 113 ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டதுடன் 15 ஊழியர்கள் வெளிநாட்டுப் பயிற்சியைப் பெற்றனர்.

அ.ம.உ. கூட்டுத்தாபன ஊழியர்களால் கோரப்பட்ட அடிப்படை சேமநலன் வசதிகளை தொடர்ந்தும் வழங்கியது. அவர்கள் வருடாந்த சுற்றுலா/ஒன்றுகூடல், சிங்கள புதுவருட கொண்டாட்டங்கள் மற்றும் விளையாட்டு விழா போன்ற சமூகசேமநலன் நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்கும் ஊக்குவிக்கப்பட்டனர்.

### உபாயத்திட்டமும் வாய்ப்புவளங்களும்

எமது பிரதானகுறிக்கோள் சுகாதார அமைச்சின் மருத்துவவழங்கல்(MSD) பிரிவு, அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்(SPC), மருந்தகங்கள் மற்றும் மருத்துவ உயர்தொழில் துறையைச் சேர்ந்தவர்கள் ஆகியோருக்குத் தேவையான மருந்தாக்கற் பொருட்களை தடங்கலின்றி வழங்குவதாகும். இந்த நடவடிக்கைக்கு வசதியளிப்பதற்காக உற்பத்திக்கான கட்டிட கொள்ளளவு, களஞ்சியப்படுத்தல் இடவசதி மற்றும் நிர்வாக அலகு ஆகியவற்றை நாம் ஏற்கனவே விரிவுபடுத்தியுள்ளோம்.

மிகுந்த உபகரணங்களைக் கொண்ட ஆய்வுகூட இடப்பரப்பு இலங்கையின் வறிய மக்களுக்கு நியாய விலையில் உயர் தரத்திலான மருந்துப் பொருட்களை வழங்குவதை உறுதிப்படுத்தும்.

இந்த விரிவாக்கல், உற்பத்தியை மேம்படுத்துவதற்கும் விற்பனை வருமானத்தை அதிகரிப்பதற்கும் உற்பத்தி வகைகளை விரிவாக்குவதற்கும் புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதற்கும் அ.ம.உ. கூட்டுத்தாபனத்தின் கூட்டிணைந்த நற்பெயரை உருவாக்குவதற்கும் ஆதரவளிக்கும்.

### நன்றிநவிலல்

பணிப்பாளர் சபை சார்பாக, இலங்கையில் மருந்தாக்கற் பொருட்கள் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயலாற்றிய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன அவர்களுக்கு நன்றியறிதல்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். பெறுமதிமிக்க வழிகாட்டலையும் ஆதரவையும் வழங்கிய கௌரவ சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜிதசேனாரத்ன அவர்களுக்கும் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். சுகாதார அமைச்சின் செயலாளர் திரு. அனுர ஜயவிக்கிரம அவர்களும் சுகாதார அமைச்சின் அதிகாரிகளும் வழங்கிய வழிகாட்டுதல்களையும் நாம் பெரிதும் மதிக்கின்றோம். பொதுத் திறைசேரியின் பல்வேறு திணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகளின் பங்களிப்பும் பாராட்டத்தக்கவையாகும்.

எமது கூட்டுத்தாபனத்தின் வெற்றிக்கு பாரிய பங்களிப்புகளை மேற்கொண்ட அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் (SPC), மருத்துவவழங்கல் பிரிவு (MSD), மருந்தகங்கள் மற்றும் மருத்துவ உயர் தொழில் துறையைச் சேர்ந்தவர்களுடன் உன்னதமான ஒரு தொடர்பை பேணிவந்தோம் என்பதை நன்றியறிதலுடன் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

அ.ம.உ.கூட்டுத்தாபனத்தின் பொதுமுகாமையாளர், சிரேஷ்ட முகாமையாளர்கள், நிறைவேற்றுப் பணியாளர்கள் மற்றும் எல்லா மட்டங்களிலும் உள்ள ஊழியர்கள் 2017ஆம் ஆண்டில் சாதகமான பெறுபேறுகளை அடைவதற்கு வழங்கிய அர்ப்பணிப்பை நாம் வெகுவாகப் பாராட்டுகின்றோம்.

இறுதியாக கூட்டுத்தாபனத்தை வழி நடத்திச் செல்வதற்கு பெறுமதி வாய்ந்த பங்களிப்புகளை நல்கிய பணிப்பாளர் சபைக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

**டாக்டர். எஸ்.ஜி.சமரசேகர**
**தலைவர்**
**இலங்கை அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம்**
**2018 பெப்ரவரி 28.**

# பணிப்பாளர்கள்

**டாக்டர்.சயுறு சமரசுந்தர**

**-தலைவர்**

டாக்டர்.சயுறு சமரசுந்தர அவர்கள் லரிவா/ரிகா ஸ்ரடின்ஸ் பல்கலைக்கழகத்தின் மருத்துவ கலைக்கழகத்தில் மருத்துவ வைத்தியர் கல்வியையும் , மஸ்கோ பல்கலைக்கழக புதுமை தொழில்நுட்ப நிறுவனத்தில் முனைவர்/டாக்டர் பட்டத்தையும் (Ph.D) கொண்டுள்ளார்.

அதேபோல் இலங்கை அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் சேவையாற்றுகிறார்.

தேசிய நீர்வாழ் வள ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவன தலைவராகவும் , மீன்பிடி அமைச்சின் திட்ட அமுல்படுத்தற் பிரிவின் பணிப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார்.

மேலும் இவர் கடல்சார் பல்கலைக்கழகத்தின் அரச குழுவின் (வாரிய) உறுப்பினராகவும் , தேசிய கடல்வள அபிவிருத்தி அதிகார சபை உறுப்பினராகவும் , சர்வதேச நிலமேற்பரப்பின் நீர் பற்றிய விபர அமைப்பின் இலங்கை பிரதி நிதியாக 2012 முதல் 2015 காலப்பகுதிகளில் கடமையாற்றினார்.

**பொ.சுந்தரலிங்கம்**

**- நிர்வாக பணிப்பாளர்**

திரு.சுந்தரலிங்கம் அவர்கள் 26 ம் திகதி தை மாதம் 2015 இல் நிர்வாக பணிப்பாளராக பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்டார்.

திரு.சுந்தரலிங்கம் அவர்கள் சிரேஷ்ட வங்கியாளராக பல்வகைப்பட்ட வங்கித்துறை அனுபவத்தை 42 வருடத்திற்கு மேலாக கொண்டுள்ளார். இலங்கை வங்கியின் ஆதரவில் 36 வருடங்களையும் இ யூனியன் வங்கியில் 6 வருட அனுபவத்தையும் பெற்றவர் ஆவார். மேலும் இவர் வங்கிதுறை , மூலோபாய/வியூக திட்டம் , மீள் பொறியியல் வணிக முறை , விற்பனை நிர்வாகம் , சேனல் நிர்வாகம் , திட்ட நிர்வாகம் , கூட்டிணை ஆட்சிமுறை இ இணக்க மற்றும் தகவல் நிர்வாக முறை (MIS) போன்ற பல துறைகளின் பரவலான அனுபவம் மற்றும் நிபுணத்துவத்தை கொண்டுள்ளார்.

பரவலான தொழில் புரிந்த காலப்பகுதியில் இவர் யூனியன் வங்கியில் உதவி துணை தலைவராகவும் , யூனியன் வங்கியின் இணக்க தலைவராகவும் , இலங்கை வங்கியின் நிர்வாக தகவல்கள் அமைப்பின் (MIS) தலைவராகவும் , இலங்கை வங்கி மற்றும் யூனியன் வங்கியின் சில்லறை மற்றும் உள்நாட்டு வங்கி வணிக பிரிவுகளில் பல்வேறு நிர்வாக பதவிகள் என பல முக்கிய பதவிகளை வகித்துள்ளார்.

வங்கி துறையிலிருந்து விடைபெற்ற பின்னர் இவர் கடற்தொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் திட்ட ஒருங்கிணைப்பாளர்/கண்காணிப்பு பிரிவின் தலைவராக 4 வருடங்கள் சேவையாற்றனார்.

திரு.சுந்தரலிங்கம் அவர்கள் 1991 இல் இந்திய நிறுவனத்தினால் நடத்திய கணணி மூலமான தகவல் அமைப்பின் செயல்முறை திட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டில் தேசிய பல்கலைக்கழகத்தில் கணக்கியல் மற்றும் நிதி திட்ட செயல்முறை திட்டத்தையும் வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளார்.

**டாக்டர்.சுசி பெரேரா - பணிப்பாளர்**

டாக்டர்.சுசி பெரேரா அவர்கள் தற்போது சுகாதார அமைச்சின் அபிவிருத்தி அமைப்பின் பணிப்பாளராக கடமையாற்றுகிறார்.

இவர் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பட்டப்படிப்பினையும் மற்றும் மாஸ்டர் பட்டப்படிப்பினையும் மற்றும் சமூக மருத்துவத்தில் முனைவர்/டாக்டர் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

இவர் கொழும்பு மருத்துவ பட்டப்படிப்பு நிறுவனத்தின் சமூக மருத்துவ கல்வி கற்கை குழுவின் உறுப்பினராகவும் பதவி வகிக்கின்றார். மேலும் இவர் கடந்த காலத்தில் சமூக மருத்துவ கல்லூரியின் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார்.

மேலும் இவர் சுகாதார பாதுகாப்பு நிகழ்ச்சி நிரல் , இலங்கை சுகாதார இடம்பெயர்வு அபிவிருத்தி கொள்கை , தேசிய நீண்டகால தொடர்பு அல்லாத நோய் அபிவிருத்தி கொள்கை போன்றவற்றில் முதன்மை பங்களித்துள்ளார். அத்துடன் இவர் இலங்கை சமூக மருத்துவ கல்லூரி மற்றும் பொது தொழில் பயில்வோர் கல்லூலியின் கௌரவ மனிதராகவும் திகழ்ந்தார்.

### டாக்டர்.டி.வெங்கதேஸ்வரன்

### - பணிப்பாளர்

டாக்டர்.டி.வெங்கதேஸ்வரன் அவா்கள் தற்போது வஹி கட்டுமான தனியாா் குழுமத்தில் நிா்வாக பணிப்பாளராக இணைக்கப்பட்டுள்ளாா்.

சுந்தைப்படுத்தல் பகுதியில் 21 வருட அனுபவத்தையும் கொண்டுள்ளாா்.

இவா் B.Com பட்டத்தையும், கௌரவ டாக்டா் பட்டத்தையும் பெற்றுள்ளாா்.

### ஷ.ஃபிக் ரஜாப்தீன்

### - பணிப்பாளர்

திரு.மொகமட் ச.ஃபிக் ரஜாப்தீன் அவர்கள் தற்போது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உப தலைவராக கடமையாற்றுகின்றார்.

இவர் ரஜாப்தீன் மற்றும் சன்ஸ் தலைவராகவும் சேவையாற்றினார். ஆத்துடன் இவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராகவும் , மேற்கு ஆலோசனை சபை மற்றும் கொழும்பு நகராட்சி சபையின் முன்னாள் உறுப்பினராகவும் கடமையாற்றினார்.

### மியுறு பாஷித லியனகே

### - பணிப்பாளர்

திரு.மியுறு பாஷித லியனகே அவர்கள் தற்போது கௌரவ அமைச்சர் மைத்திரிபாலசிறிசேன அவர்களின் இணைப்புச் செயலாளராகவும் சரச கம்பனிகள் குழுமத்தின் தலைவராகவும் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் பத்திரிகைத்துறை ஆலோசகராகவும பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவு (வெளிவிவகார) ஆலோசகராகவும் சேவையாற்றிக் கொண்டிருக்கின்றார்.

அவர் பொதுசனதொடர்பாடலில் விசேட பட்டத்தையும், பெல்வூட்டில் இருந்து கவின் கலைகளில் உயர் டிப்புளோமா பட்டத்தையும் என்.ஐ.பீ.எம். இல் வணிக முகாமைத்துவ டிப்புளோமா பட்டத்தையும் இலங்கை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்திலிருந்து எழுதுனர்துறை மற்றும் பொதுசன தொடர்பாடலில் டிப்புளோமா பட்டத்தையும் கொழும்பு பல்கலைக் கழகத்தில் (2012) பத்திரிகைத் துறையில் டிப்புளோமா பட்டத்தையும் இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் எழுதுனர் துறை மற்றும் வெகுசன தொடர்பாடலில் (மாஸ்டர்) கற்கைநெறிச் சான்றிதழையும் பெற்றுள்ளதுடன் தற்போது கொழும்பு பல்கலைக் கழகத்தில் பத்திரிகைத் துறை மற்றும் வெகுசன ஊடகக் கற்கைகள் துறையில் பட்டப்படிப்பின் டிப்புளோமா மற்றும் மாஸ்டர் கல்வி நெறியையும் மேற்கொண்டுள்ளார்.

அவர் ஒரு பத்திரிகையாளராகவும் தொலைக்காட்சி மற்றும் வானொலியில் நிகழ்ச்சி வழங்குனராகவும் (presenter)

பணிபுரிந்துள்ளார்.

## கே.டி.எஸ்.ருவன்சந்த்ர- பணிப்பாளர்

திரு.கே.டி.எஸ்.ருவன்சந்த்ர அவர்கள் தற்போது தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் இணை செயலாளராக பதவி வகிக்கின்றார்.

இவர் பொது கொள்கைகள் முதுநிலை பட்டத்தையும் (சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம்), பொது நிர்வாகத்தில் BSc பட்டத்தையும் (ஸ்ரீ ஜயவர்தன புர பல்கலைக்கழகம்), கணக்கியலில் அதியுயர் தேசிய டிப்ளோமா பட்டத்தை பெற்றுள்ளதுடன் மேலாண்மை கணக்காளர் பட்டய நிறுவனத்தின் (ACMA) இணை உறுப்பினருமாவார்.

மேலும் இவர் தேசிய வரவு செலவு திட்ட திணைக்களம் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையிலும் பணிப்பாளராக சேவையாற்றியுள்ளார். அத்துடன் இவர் தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் மேலதிக இணை செயலாளராகவும் , சட்ட மற்றும் ஒழுங்கு அமைச்சு , பாதுகாப்பு மற்றும் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகம் மற்றும் பொது நிர்வாக சீர்திருத்த அமைச்சகத்திலும் அமைச்சராகவும் பணியாற்றினார். பெய்ஜிங்கில் ஸ்ரீ லங்கா தூதரகத்தின் ஆலோசகர் மற்றும் வெளிவிவகார அமைச்சக பணிப்பாளர்/ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார். ஸ்ரீ லங்கா நிர்வாக அபிவிருத்தி இன்ஸ்டிடியூட்டிற்கு ஆலோசகராகவும் தனது பதவிக்காலத்தில் பதவி வகித்துள்ளார்.

# பணிப்பாளர்களின் அறிக்கை

2017 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான தமது அறிக்கையையும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கைகளையும் சமர்ப்பிப்பதில் பணிப்பாளர் சபை மகிழ்ச்சியடைகின்றது. கணக்குகள் 33 - 45 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

### பிரதான செயற்பாடுகள்

கூட்டுத்தாபனத்தின் பிரதான செயற்பாடுகள் பின்வருமாறு:

- மருந்துப்பொருட்களின் உற்பத்தி, பதனிடல், களஞ்சியப்படுத்தல், பொதியிடல் மற்றும் மீள்பொதியிடல்
- மேலே குறிப்பிட்ட செயற்பாடுகளுக்கான தொழில்நுட்ப அறிவை வழங்குதல்
- மருந்தகவியல் மற்றும் மருந்தாக்கல் ஆராய்ச்சி மற்றும் மருந்துப்பொருட்களின் தரத்தை உயர்த்துதல் மற்றும்
- அவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட மருந்துப் பொருட்களைச் சந்தைப்படுத்தல்

இவ்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளின் தன்மையில் குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் இடம்பெறவில்லை

### வணிக மீளாய்வு

2017 டிசம்பர் 31 அன்று கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளின் நிலைமை 21 ஆம் பக்கத்தில் உள்ள ஐந்தொகையில் தரப்பட்டுள்ளது.

இந்த நிதியாண்டில் கூட்டுத்தாபனத்தின் ஒரு மதிப்பீடு 7-8 ஆம் பக்கத்தில் உள்ள தலைவரின் மீளாய்வில் தரப்பட்டுள்ளது.

### புரள்வும் விளைவுகளும்

இவ்வாண்டுக்கான புரள்வும் விளைவுகளும் 22 ஆம் பக்கத்தில் உள்ள வருமானக் கூற்றிலும் உரிமைப்பங்கில் மாற்றம் பற்றிய கூற்று 23 ஆம் பக்கத்திலும் தரப்பட்டுள்ளன.

### எதிர்கால அபிவிருத்தி

வணிகத்தில் எதிர்கால அபிவிருத்திகள் 7-8 ஆம் பக்கத்தில் உள்ள தலைவரின் மீளாய்வில் தரப்பட்டுள்ளன.

### நன்கொடைகள்

இவ்வாண்டில், கூட்டுத்தாபனத்தினால் எவ்வித நன்கொடைகளும் வழங்கப்படவில்லை.

### ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள்

இவ்வாண்டில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மாற்றம் 33 ஆம் பக்கத்தில் உள்ள நிதியியல் கூற்றின் குறிப்பு 1இல் தரப்பட்டுள்ளது.

### பங்கிலாபம் / பங்களிப்பு

பொதுத் திறைசேரியின் திரண்ட நிதிக்கு பணிப்பாளர்களின் விதப்புரையின் பிரகாரம் பங்கிலாபம் மூலமாக ரூபா 45,000,000.00 வழங்கப்பட்டது.

### ஒதுக்கங்கள்

கூட்டுத்தாபனத்தின் ஒதுக்கங்களும் அவற்றின் ஆக்க அமைவும் 23 ஆம் பக்கத்தில் உள்ள நிதிக்கூற்றில் உரிமைப்பங்கு மாற்றங்கள் பற்றிய கூற்றில் தரப்பட்டுள்ளன.

### பணிப்பாளர்கள்

பணிப்பாளர் சபை சுகாதார அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஆறு பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. சுகாதார அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர்களில் ஒருவர் நிதி அமைச்சுப் பிரதிநிதியும் மற்றுமொருவர் சுகாதார அமைச்சின் பிரதிநிதியும் ஆவர். பணிப்பாளர் சபையின் புதிய உறுப்பினர்கள் 2015 மே மாதம் முதல் நியமிக்கப்பட்டனர். இந்தக் காலப்பகுதியல், பணிப்பாளர்கள் பன்னிரண்டு கூட்டங்களை நடத்தினர். சம்பந்தப்பட்ட காலப்பகுதியில் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக தலைவரும் பணிப்பாளர் சபையும் பொறுப்புமிக்கவர்களாவர்.

| | |
|---|---|
| டாக்டர்.எஸ்.ஜீ.சமரசுந்தர | - தலைவர் |
| பொ.சுந்தரலிங்கம் | - நிர்வாக இயக்குனர் |
| மியுறு பாஷித லியனகே | - பணிப்பாளர் |
| டாக்டர்.டி.வெங்கதேஸ்வரன் | - பணிப்பாளர் |
| ஷ∴பீக் ரஜப்தீன் | - பணிப்பாளர் |
| டாக்டர்.சுசி பெரேரா | - பணிப்பாளர் - சுகாதார அமைச்சுப் பிரதிநிதி |
| கே.டி.எஸ்.ருவன்சந்த்ர | - பணிப்பாளர் - நிதி அமைச்சுப் பிரதிநிதி |

**கணக்கீட்டுக் கொள்கைகள்**

கூட்டுத்தாபனத்தின் பிரதான கணக்கீட்டுக் கொள்கைகள் 25-33 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

**சுற்றாடல் பாதுகாப்பு**

சுற்றாடலுக்குப் பாதிப்பில்லா விதத்தில் செயற்படுவதும் நாம் தொழிற்படும் சமூகத்தில் உள்ள எமது வாடிக்கையாளர்களுக்கு பயன்மிக்க தாக்கத்தைக் கொண்ட உயர் தரத்திலான உற்பத்திகளை வழங்குவதும் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பாகும்.

**நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்**

அரசாங்கத்துக்கும் ஊழியர்களுக்குமான எல்லா நியதிச் சட்டக் கொடுப்பனவுகளும் ஐந்தொகைத் திகதியில் செலுத்தப்பட்டுள்ளன.

**ஐந்தொகைத் திகதியின் பின்னர் நடைபெற்ற நிகழ்வுகள்**

நிதிக்கூற்றுகளில் திருத்தங்களை அல்லது வெளிப்பாட்டைத் தேவைப்படுத்தும் எவ்வித நிகழ்வும் ஐந்தொகைத் திகதியிலிருந்து இடம்பெறவில்லை.

**நடைபெற்றுக் கொண்டிருக்கும் அக்கறை**

நடைபெற்றுக்கொண்டிருக்கும் அக்கறை எண்ணக்கருவின் அடிப்படையில் நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்படுகின்றன. எதிர்வுகூறக்கூடிய காலத்தில் கூட்டுத்தாபனத்தில் தொழிற்பாடுகளைத் தொடர்வதற்கு போதிய வளங்களைக் கூட்டுத்தாபனம் கொண்டுள்ளது என பணிப்பாளர் சபை திருப்தியடைகின்றது.

**கணக்காய்வாளர்களை நியமித்தல்**

1971ஆம் ஆண்டின் நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், கணக்காளர் தலைமை அதிபதி கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வா 7 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான கூட்டுத்தாபனத்தின் நிதியியல் செயற்பாடுகளின் கணக்காய்வை அவர் மேற்கொண்டார்.

**டாக்டர்.எஸ்.ஜீ.சமரசுந்தர**
**தலைவர்**
**இலங்கை அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம்**

# கணக்காய்வுக் குழுவின் அறிக்கை - 2017

2010.12.14ஆம் திகதி PED 55ஆம் இலக்க அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்காய்வுக் குழு அமைக்கப்பட்டது.

ஏற்புடைய இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏனைய பிரயோகிக்கத்தக்க சட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக நிதியியல் அறிக்கையிடல் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் தொடர்ச்சியாக மீளாய்வு செய்து கண்காணித்து இணங்கி ஒழுகாமை பற்றி சபைக்கு விதப்புரைகளை மேற்கொண்டு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட எல்லா ஏற்புடைய விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கைகள் இணங்கி ஒழுகப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்கும் உள்ளக ∴ புற கணக்காய்வு அறிக்கைகள், முகாமைத்துவக் கடிதங்கள் மற்றும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (COPE) விதப்புரைகளை மீளாய்வு செய்தல் பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சபைக்கு உதவுதல் போதிய உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றுக்காக மேற்பார்வை செய்யும் பணியில் கணக்காய்வுக் குழு சபைக்கு உதவுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நான்கு நிறைவேற்றுத்துறை சாராத பணிப்பாளர்களை உள்ளடக்கிய கணக்காய்வுக் குழுவுக்கு திறைசேரியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளர் தலைமை வகிக்கின்றார்.

மேலே சொல்லப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்கள பிரதிநிதி அவதானிப்பாளராகப் பங்குபற்றியதுடன் சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளரும் சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரினால் நியமிக்கப்பட்டவாறு ஓர் அவதானிப்பாளராகப் பங்குபற்றினார்.

2017ஆம் நிதியாண்டில் நான்கு (04) கணக்காய்வுக் கூட்டங்கள் நடைபெற்றன.

இக்குழு 2017 ஆம் ஆண்டில்,

- பிரச்சினைகளின் தன்மைகள், திணைக்களத் தலைவர்களின் பதில் நடவடிக்கைகள் மற்றும் அவதானிக்கப்பட்ட குறைபாடுகளை நிவர்த்திப்பதற்கு முகாமைத்துவம் மேற்கொண்ட நடவடிக்கைகள் ஆகியவற்றை உள்ளிட்ட உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளைப் பரிசீலித்தது.
- கூட்டுத்தாபனத்தின் சுமுகமான தொழிற்பாட்டுக்காக களஞ்சியங்கள் மற்றும் தொக்குகள், நிலையான சொத்துக்கள், கொள்முதல், விற்பனைகள், நிதி, திணைக்களங்களுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் மனித வளங்கள் ஆகிய விடயப் பரப்புகளில் பல்வேறு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் பற்றி மீளாய்வு செய்து பொருத்தமான விதப்புரைகளை மேற்கொண்டது.
- குழுவின் விதப்புரையின் பிரகாரம் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களினால் மேற்கொள்ளப்பட்ட பின்தொடர் நடவடிக்கைகளை மீளாய்வு செய்தது.
- நிலையான சொத்துக்கள், உதிரிப்பாகங்கள், வடிவமைப்பு,ஆ மற்றும் அபிவிருத்தி திணைக்கள முடிவுப்பொருட்கள் மற்றும் மூலப்பொருட்கள், பொதி செய்தல், நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை, முடிவுப்பொருட்கள் மூலப்பொருட்கள் உள்ளிட்ட சேதமடைந்த மற்றும் பயன்படுத்தப்படாத சொத்துக்களை அகற்றுவதற்கான/அழிப்பதற்கான நடைமுறை பற்றி மதிப்பாய்வு செய்து பொருத்தமான விதப்புரைகளை மேற்கொண்டது.
- நிதி அறிக்கை மற்றும் ஒட்டுமொத்த உட்கட்டுப்பாட்டு அமைப்புகளின் போதுமான தன்மையை மதிப்பாய்வு செய்தது.
- கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எழுப்பப்பட்ட விடயங்கள் பற்றிய கூட்டுத்தாபனத்தின் தலைவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்துரைகளைப் பரிசீலித்தது.
- பொறுப்புமுயற்சி வள திட்டமிடல் முறைமையினால் (ERP) உருவாக்கப்பட்ட தகவல்களைக் கண்காணிப்பதற்கு உரிய கவனம் செலுத்தியதுடன் தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக ஆலோசனை வழங்குனரை அனுகி பொறுப்புமுயற்சி வள திட்டமிடல் முறைமை பற்றி மேலும் கவனம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- பொறுப்புமுயற்சி வள திட்டமிடல் முறைமையின் (ERP) பாதுகாப்பு தேவை பற்றி கருத்தில் கொள்ளப்பட்டது.
- உள்ளகக் கணக்காய்வு துறையால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையை மீளாய்வு செய்து பொருத்தமான பரிந்துரைகளை வழங்கியது.

எல்லா சாதன அம்சங்களிலும் உள்ள விடயங்களைக் கணக்காய்வுக் குழுவின் விசாரணை நியதிகள் உள்ளடக்குகின்றன என கணக்காய்வுக்குழு கருதுகின்றது.

கணக்காய்வுக் குழு உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| கே.டி.எஸ்.ருவன்சந்த்ர | - தலைவர் | - பணிப்பாளர் அ.ம.உ.கூ.∴திறைசேரிப் பிரதிநிதி |
| மியுறு பாஷித லியனகே | - உறுப்பினர் | - பணிப்பாளர் அ.ம.உ.கூ |
| ச.∴பீக் ரஜாப்டீன் | - உறுப்பினர் | - பணிப்பாளர் அ.ம.உ.கூ |
| டாக்டர்.சுசி பெரேரா | - உறுப்பினர் | - பணிப்பாளர் அ.ம.உ.கூ |

**கே.டி.எஸ்.ருவன்சந்த்ர**
**தலைவர் - கணக்காய்வுக் குழு**
**04.10.2018**

# கூட்டிணை நிறுவன ஆளுகை அறிக்கை

மிகுந்த வெளிப்படைத்தன்மை, சிறந்த மற்றும் உரிய காலத்தில் நிதி அறிக்கை செய்தல் என்பவற்றை உறுதிப்படுத்தி பங்கீடுபாடு உடையவர்களின் (முதலீட்டாளர்கள், ஊழியர்கள், விநியோகஸ்தர்கள், வாடிக்கையாளர்கள், அரசாங்கம் மற்றும் பொதுமக்கள்) அதிசிறந்த அக்கறையைக் கவனத்தில் கொண்டு துணை கம்பனிகள் முகாமைத்துவத்தினால் வழிப்படுத்தப்பட்டுக் கட்டுப்படுத்தப்படும் முறைமையே கூட்டு நிறுவன ஆளுகையாகும்.

பணிப்பாளர்கள் சபை கூட்டுத்தாபனத்தின் ஆளுகைக்குப் பொறுப்பாக உள்ளது.

## பணிப்பாளர்கள்

பணிப்பாளர்கள் சபை முகாமைத்துவம், மருந்தியல், மருத்துவம், சந்தைப்படுத்தல், நிதியியல் மற்றும் நிர்வாகத் துறைகளைச் சேர்ந்த நிபுணத்துவ மற்றும் அனுபவம் மிக்க ஆட்களைக் கொண்டுள்ளது.

பணிப்பாளர் சபை இரு நிறைவேற்றுப் பணிப்பாளராக இருக்கும் ஒரு தலைவரையும் முகாமைத்துவ பணிப்பாளரையும் கொண்டுள்ளதுடன் ஐந்து நிறைவேற்றுத்துறை சாராத பணிப்பாளர்களையும் கொண்டுள்ளது.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் அல்லது கௌரவ அமைச்சரினால் பணிப்பாளர் சபை நியமிக்கப்படாவிட்டாலன்றி, சபை மாதாந்த இடைவேளைகளில் கூடுவதுடன் அதற்கு மேலதிகமாக தேவைக்கேற்றவாறு விசேட கூட்டங்களும் ஒழுங்கு செய்யப்படுகின்றன.

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் எட்டு பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடைபெற்றன.

## முகாமைத்துவக் குழு

கூட்டு நிறுவன முகாமைத்துவக் குழு கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கீழ் இயங்குகின்றது. செயற் குழு கூட்டுத்தாபனத் திணைக்களங்களின் தலைவர்களையும் பிரதித் தலைவர்களையும் கொண்டுள்ளது.

முகாமைத்துவக் குழு கூட்டுத்தாபனத்தின் நாளாந்த தொழிற்பாடுகள் பற்றிய தீர்மானங்களை மேற்கொண்டு, கொள்கைத் தீர்மானங்களையும் உபாயத்திட்டக் குறிக்கோள்களையும் நடைமுறைப்படுத்துவதுடன் கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அவசியமானவாறு பணிப்பாளர் சபைக்கு விதப்புரைகளை மேற்கொள்கின்றது.

முகாமைத்துவக் குழு மாதாந்த இடைவேளைகளில் கூடுகின்றது.

## கணக்காய்வுக் குழு

கணக்காய்வுக்குழு ‘சிறந்த ஆளுகைக்கான அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் வழிகாட்டல்’ மற்றும் பொது நிதிச் சுற்றறிக்கைக் ஆகியவற்றின் பிரகாரம் அமைக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படும் கணக்காய்வுக் குழு கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுத்துறை சாராத நான்கு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. நிதி அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளர் குழுவுக்குத் தலைமை வகிக்கின்றார்.

கணக்காய்வுக் குழு கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை சுயாதீனமாகப் பரிசீலித்து மதிப்பிடுகின்றது. “உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின்” பிரகாரம் மேற்கொள்ளப்படும் உள்ளக கணக்காய்வுச் செயற்பாடு கணக்காய்வுக் குழுவினால் அங்கீகரிக்கப்படுவதுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அறிவிக்கப்படுகின்றது.

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் நான்கு கணக்காய்வுக் கூட்டங்கள் நடைபெற்றன.

கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 14 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

## முதலீட்டாளர்களின் தொடர்பும் அரசாங்க வகைகூறலும்

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பொதுமக்கள் சார்பாக அரசாங்கத்தினால் தாபிக்கப்பட்டு, உடைமையாக்கப்பட்டுத் தொழிற்படுத்தப்படுகின்றது.

எனவே, கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் சபையும் முகமையாளர்களும் பொறுப்பு முயற்சியை முகாமைத்துவம் செய்வதில் மத்திய அரசாங்க அமைச்சு என்ற வகையில் சுகாதார அமைச்சுக்கும் நிதி அமைச்சின் பொது திறைசேரிக்கும் பொறுப்புமிக்கவர்களாவர்.

ஆண்டறிக்கை, வருடாந்தக் கணக்குகள், வருடாந்த வரவு செலவுத் திட்டங்கள், காலாண்டுச் செயலாற்ற அறிக்கைகள் ஆகியவற்றை அதே அதிகாரிகளுக்கு அனுப்பி வைப்பதன் மூலம் மேலே சொல்லப்பட்ட பொறுப்புகள் நிறைவேற்றப்படுகின்றன.

ஜனநாயக உலகம் முழுவதிலும் மக்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றம் அரசாங்க நிதியின் இறுதிப் பொறுப்புமிக்கதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

கூட்டுத்தாபனத்தின் செயலாற்றம், நிதியியல் கூற்றுகள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய ஆண்டறிக்கை பாராளுமன்ற உறுப்பினர்களின் மீளாய்வுக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

ஓர் அரசாங்கப் பொறுப்பு முயற்சி என்ற வகையில், கூட்டுத்தாபனம் பாராளுமன்றத்தின் “அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்கும்” (COPE) பொறுப்புமிக்கதாகும்.

## ஊதியக் கொள்கை

கூட்டுத்தாபனத்தின் ஊதியக் கொள்கை பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் விதப்புரைகளின் பிரகாரம் வகுக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர்களின் படிகள் மற்றும் முன் நிபந்தனைகள் ஆகியவை பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்ட

கூட்டுத்தாபனப் பணிப்பாளர்களின் படிகள் மற்றும் முன் நிபந்தனைகள் தொடர்பான பிரயோகிக்கத்தக்க சுற்றறிக்கைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்பட்டுச் செலுத்தப்படுகின்றன.

ஊழியர்களின் சம்பளங்கள் பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் பொதுநிர்வாக சம்பள அளவுத்திட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட சம்பள அளவுத்திட்டத்தின் அடிப்படையில் செலுத்தப்படுகின்றன.

வெகுமதிகளை நேரடியாக செயலாற்றத்துடன் தொடர்புபடுத்துவதற்காக ஒரு செயலாற்ற ஊக்குவிப்புத் திட்டம் நடைமுறையில் உள்ளது.

## உள்ளகக் கட்டுப்பாடு

கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படும் எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பொருத்தமானவாறு அதிகாரம் அளிக்கப்படுவதையும் பதிவுசெய்யப்படுவதையும் அறிக்கை செய்யப்படுவதையும் நியாயமான அளவு உத்தரவாதம் அளிக்கும் விதத்தில் வகுக்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையைக் கூட்டுத்தாபனம் பேணுவதை உறுதிப்படுத்தும் பொறுப்பு பணிப்பாளர் சபைக்கு உண்டு.

செயற்பாட்டு நிறுவனக் கட்டமைப்பு நடைமுறையில் உள்ளது. உற்பத்தி, தரக்கட்டுப்பாடு, பராமரிப்பு, நிதி, திட்டமிடல் மற்றும் வடிவமைப்பும் ஆராய்ச்சியும், அபிவிருத்திச் செயற்பாடுகள், சந்தைப்படுத்தல் போன்ற வரைவிலக்கணப்படுத்தப்பட்ட செயற்பாடுகளுடன் திணைக்களங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு திணைக்களத் தலைவரும் கூட்டுத்தாபனத்தின் பிரதான செயற்பாட்டு அதிகாரியாகிய பொது முகாமையாளரிடம் நேரடியாக அறிக்கை செய்கின்றனர்.

பொது முகாமையாளர் முகாமைத்துவப் பணிப்பாளருக்கும் தலைவருக்கும் பணிப்பாளர் சபைக்கும் அறிக்கை செய்கின்றார்.

உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை உள்ளகக் கணக்காய்வு செயற்பாட்டினால் பேணப்படுகின்றது. உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் நேரடியாக கூட்டுத்தாபனத் தலைவருக்கும் கணக்காய்வுக் குழுவுக்கும் அறிக்கை செய்யப்படுவதன் மூலம் உள்ளகக் கணக்காய்வளரின் சுயாதீனத்தன்மை வலுவூட்டப்படுகின்றது.

கொடுக்கல் வாங்கல்களின் வெளிப்படைத் தன்மையைப் பேணுவதற்காக கொள்வனவு நடவடிக்கைகளில் போட்டித்தன்மையான கேள்விப்பத்திர நடவடிக்கை முறை கூட்டுத்தாபனத்தினால் பேணப்படுவதன் மூலம் அக்கறையுள்ள தரப்புகளுக்கு சமமான சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

மூலதனச் செலவின வரவு செலவுத் திட்டத்தை உள்ளடக்கிய வருடாந்த வரவு செலவுத் திட்டம் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு சுகாதார போஷாக்கு மற்றும் தேசிய மருத்துவதுறை மற்றும் நிதி அமைச்சுகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றது.

# எமது உற்பத்திக் கலவை

இன ரீதியான உற்பத்தி அளவு - குளிகைகள் / கூட்டுக் குளிகைகள் மில்லியன் அலகுகளில்

| உற்பத்திகள் | அளவு மில்லியன் அலகுகள் | உற்பத்திகள் | அளவு மில்லியன் அலகுகள் |
|---|---|---|---|
| அலுமீனியம் ஐதரோ. குளிகை BP 500மிகி | 0.912 | க்ளிக்ளசைட் குளிகைகள் BP 40மிகி | 114.000 |
| அமொக்சிசிலின் குளிகை USP 125மிகி | 8.837 | கிளிக்ளசைட் குளிகைகள் BP 80மிகி | 63.000 |
| அமொக்சிசிலின் குளிகை BP 250மிகி | 118.758 | லொசார்டன் பொட்டாசியம் குளிகை 50மிகி | 9.600 |
| அமொக்சிசிலின் கூ.கு. BP 500மிகி. | 22.750 | மெபென்டசோல் குளிகை USP 500மிகி | 0.640 |
| அஸ்கோர்பிக் அசிட் குளிகை BP 100மிகி | 29.700 | மெற்∴போர்மின் குளிகை BP 500மிகி | 22.750 |
| அரோவஸ்ரடின் குளிகைகள் BP 10 மிகி | 18.000 | பரசிடமோல் குளி. BP 500மிகி | 259.200 |
| அரெனொலொல் குளிகைகள் BP 50மிகி | 1.000 | பெனொக்சிமெதைல் பெனிசிலின் குளிகை BP 250மிகி | 28.716 |
| பென்செக்சோல் குளிகை BP 2மிகி | 66.000 | | |
| காபமெசபைன் குளிகை BP 200 மிகி | 26.000 | பெனொக்சிமெதைல் பெனிசிலின் குளிகை BP 125மிகி | 0.900 |
| சிமெற்றிடைன் குளிகை BP 200மிகி | 7.280 | | |
| க்ளரித்ரோமைசின் குளிகை 250மிகி | 6.400 | பிரெட்னிசொலோன் குளிகை BP 5மிகி | 215.600 |
| குளொக்சசிலின் கூ.கு. BP 250மிகி | 58.100 | புறப்றனலோல் குளிகை BP 40மிகி | 18.000 |
| குளொக்சசிலின் கூ.கு. BP 500மிகி | 42.700 | சல்பியூடமோல் குளிகை BP 2மிகி | 151.200 |
| சிப்ரோ∴பிலொக்சின் குளிகைகள் USP 500மிகி | 4.800 | சல்பியூடமோல் குளிகை BP 4மிகி | 12.000 |
| | | ஸ்பிரனோலக்டோன் குளிகை USP 25மிகி | 6.900 |
| கோ-ட்றைமொக்சசோல் குளிகை BP 480மிகி (வளர்ந்தோர்) | 0.750 | தியோபில்லின் குளிகை ER USP 125மிகி | 30.800 |
| | | ட்றைபுளோபரைசின் குளிகை BP 5மிகி | 4.500 |
| டைக்ளொ∴பெனெக் சோடியம் குளிகை USP 50மிகி | 22.100 | டொல்பியூடமைட் குளிகை. 500மிகி | 3.780 |
| | | வெரபமில் குளிகை BP 40மிகி | 28.050 |
| டிலிடியாசம் HCL குளிகை 60மிகி | 24.750 | விற்றிமின் B குளிகை CHF | 50.400 |
| டைதைல்கார்பமசபின் குளிகை BP 50மிகி | 13.500 | விற்றிமின் B குளிகை வலுவானது | 8.000 |
| பெமோரிடைன் குளிகைகள் USP 20மிகி | 8.100 | | |
| புரூஸ்மைட் குளிகை BP 40மிகி | 28.500 | | |

**வெளியிடப்படவுள்ள உற்பத்திகள் - 2018**

- சிற்ரசின் குளிகைகள் BP 10மிகி
- க்ளொபிடோகிரேல் பிசல்∴பேற் குளிகைகள் USP 75மிகி
- சிப்ரோ∴பிலொக்சின் குளிகைகள் USP 250மிகி
- பிரெட்னிசொலோன் குளிகை BP 1மிகி
- ∴போலிக் அசிட் குளிகை BP 400மிகி
- அரோவஸ்ரடின் குளிகைகள் BP 20 மிகி
- டிலிடியாசம் குளிகை BP 30 மிகி
- செ∴பெலெக்சின் கூ.கு BP 250 மிகி
- லெவோதிரோக்சின் குளிகைகள் BP 50மிகி

# பணிப்பாளர்களின் பொறுப்புகள் பற்றிய கூற்று

நிதியியல் கூற்றுகள் தொடர்பாக பணிப்பாளர்களின் பொறுப்புகள் கணக்காய்வாளரின் பொறுப்புகளிலிருந்து வேறுபடுகின்றன. அவை பற்றிய விபரம் 46-64 ஆம் பக்கங்களில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் தரப்பட்டுள்ளது.

1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் கீழ், ஓர் அரச கூட்டுத்தாபனமானது வருமானமும் செலவினங்களும் சொத்துகளும் பொறுப்புகளும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் ஏனைய எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய கணக்குகளைப் பேணுதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் தொடர் பாக அத்தகைய வடிவில் அத்தகைய விபரங்களைக் கொண்ட வருடாந்தக் கூற்றையும், கணக்குகளையும் ஓர் அரசாங்கக் கூட்டுத்தாபனம் தயாரித்தல் வேண்டும்.

அரசாங்கத்தினதும் பங்கீட்டாளர்களினதும் சார்பாகத் தொழில் முயற்சியொன்றை நடத்தும் நியதிச்சட்டப் பொறுப்பு பணிப்பாளர் சபைக்கு உண்டு. நியாயமான அளவு செம்மையாக கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமையைக் காட்டுவதற்கும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துவதற்கும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தினால் தேவைப்படுத்தப்படும் தகவல்களை வழங்குவதற்கும், போதியளவு கணக்குப் பதிவுகளைப் பேணுவதை உறுதிப்படுத்துவதற்கும் அவர்கள் பொறுப்புமிக்கவர்களாவதுடன் நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பதில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதே அடிப்படையைப் பணிப்பாளர்கள் தொடர்ந்தும் கடைப்பிடித்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் சொத்துகளைப் பாதுகாப்பதற்கும், இது தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு, உள்ளகசரிபார்த்தலும், நிதியியல் மீளாய்வுகளும், மோசடிகள் மற்றும் ஒழுங்கீனங்களைக் கண்டறிதல் என்பவை உள்ளிட்ட தகுந்த உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் சமர்ப்பிக்கப்படுவதில் கவனம் செலுத்துவதற்கும் பணிப்பாளர்கள் பொறுப்பைக் கொண்டுள்ளனர்.

1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் எல்லா நிதியியல் பதிவுகள், அவை தொடர்பான தரவுகள் ஆகியவற்றுடன் பணிப்பாளர் சபையினால் கிடைக்கச் செய்யப்பட்ட நிதிக் கூற்றுகள் யாவும் கணக்காய்வாளர் நாயகத்தினால் பரிசீலிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் அபிப்பிராயம் இவ்வறிக்கையின் 46-64 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

# நிதி அறிக்கைகள்

2017.12.31 முடிவடைந்த ஆண்டு

# நிதியியல் நிலைமை பற்றிய கூற்று

2017.12.31இல் உள்ளவாறு

(எல்லா தொகைகளும் இலங்கை ரூபாவில் உள்ளன)

| | குறிப்பு | 31.12.2017 ஆம் ஆண்டுக்கானது | 31.12.2016 ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|---|
| **சொத்துகள்** | | | |
| **நடைமுறை அல்லாத சொத்துகள்** | | | |
| ஆதனங்கள், பொறிகள், மற்றும் உபகரணங்கள் | 01 | 802,775,316 | 798,657,06 |
| கட்புலனாகாச் சொத்துகள் | 02 | 1,720,952 | 1,128,78 |
| ஏனைய நடைமுறை அல்லாத சொத்துகள் | 05 | 1,302,233 | 438,09 |
| குத்தகை முன்கொடுப்பனவு | 04 | 3,380,221 | 3,429,20 |
| நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை | | 85,299,340 | 21,586,46 |
| **நடைமுறைச் சொத்துகள்** | | | |
| இருப்புகள் | 06 | 799,112,524 | 751,873,00 |
| வியாபார மற்றும் ஏனைய வரவேண்டியவை | 07 | 434,523,866 | 139,049,94 |
| முற்கொடுப்பனவு | 08 | 17,520,999 | 8,735,56 |
| ஏனைய நிதிச் சொத்துகள் | 09 | 926,461,067 | 1,175,754,42 |
| கையிலும் வங்கியிலும் உள்ள காசு | 10 | 1,374,564 | 1,631,48 |
| | | 2,178,993,021 | 2,077,044,42 |
| **மொத்த சொத்துகள்** | | **3,073,471,082** | **2,902,284,04** |
| **உரிமை முதலும் பொறுப்புகளும்** | | | |
| அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம் | | 850,000,000 | 850,000,00 |
| சொல்லப்பட்ட மூலதனம் | 11 | 690,079,000 | 690,079,00 |
| வைத்திருப்பு வருவாய் | | 2,051,566,519 | 1,869,310,35 |
| **மொத்த உரிமை முதல்** | | 2,741,645,519 | 2,559,389,35 |
| **நடைமுறை அல்லாத பொறுப்புகள்** | | | |
| ஊழியர் பயன் பொறுப்புகள் | | 41,213,529 | 40,862,40 |
| பிற்போடப்பட்ட வரிப்பொறுப்பு | 12 | 135,323,858 | 133,251,49 |
| | | 176,537,387 | 174,113,90 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| வியாபாரமும் ஏனைய செலுத்தவேண்டியவையும் | 13 | 112,291,372 | 96,565,52 |
| செலுத்த வேண்டியவை | | 42,996,805 | 72,215,26 |
| | | 155,288,177 | 168,780,78 |
| **மொத்த உரிமை முதலும் பொறுப்புகளும்** | | **3,073,471,082** | **2,902,284,04** |

இந்த நிதிக்கூற்றுக்களின் முழு பகுதி மற்றும் கணக்கீட்டு கொள்கைகள் பக்கம் 25 இலிருந்து 32 வரை காணப்படுகிறது. இந்த நிதிக்கூற்றுக்களின் நடவடிக்கை மற்றும் காட்சியமைப்பு பணிப்பாளர் குழுவின் பொறுப்பாகும். இந் நிதியியல் கூற்றுக்கள் பின்வருவோரால் ஒப்பமிடப்பட்டு கணக்காளர் பொது திணைக்கள பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு அளிக்கப்பட்டது

தலைவர் :.......................................... முகாமைத்துவ பணிப்பாளர் : ..........................................

பிரதிப் பொது முகாமையாளர் - நிதி : ...............................

திகதி : 28-02-2018

# முழுமையான வருமானக் கூற்று

**2017 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**
**(எல்லாத் தொகைகளும் இலங்கை ரூபாவில் உள்ளன)**

| | குறிப்பு | 31.12.2017 ஆம் ஆண்டுக்கானது | 31.12.2016 ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|---|
| வருமானம் | 14 | 3,174,612,664 | 2,434,508,479 |
| விற்பனை செலவுகள் | 15 | (2,666,683,665) | (1,888,256,150) |
| **மொத்த இலாபம்** | | 507,928,998 | 546,252,329 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 16 | 20,988,536 | 26,190,482 |
| நிர்வாகச் செலவுகள் | 17 | (204,579,086) | (165,788,553) |
| விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள் | 18 | (67,630,402) | (48,380,262) |
| ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள் | 19 | (11,926,527) | (4,497,428) |
| **தொழிற்பாட்டு இலாபம்** | | 244,781,520 | 353,776,567 |
| நிதிச்செலவு | 20 | (406,092) | (240,959) |
| நிதி வருமானம் | 21 | 77,607,094 | 87,629,279 |
| **வரிக்கு முந்திய இலாபம்** | | 321,982,521 | 441,164,887 |
| வரிச்செலவுகள் | 22 | (98,074,582) | (144,518,172) |
| **ஆண்டுக்கான இலாபம்** | | **223,907,939** | **296,646,714** |

| முழுமையான வருமானக் கூற்று | 31.12.2017 ஆம் ஆண்டுக்கானது | 31.12.2016 ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|
| ஆண்டுக்கான இலாபம் | 223,907,939 | 296,646,714 |
| (-) அனுபவித்த இலாபம்/ நட்டம் | 1,226,459 | 4,817,184 |
| குறித்த காலப்பகுதியில் ஊகித்த இலாபம்/நட்டம் மாற்றங்கள் | 2,121,769 | 24,048,388 |
| ஏனைய முழுமையான வருமானம் மீதான வருமான வரி | - | - |
| **ஆண்டுக்கான ஏனைய முழுமையான வருமானம் நிகர வரி** | 3,348,228 | 28,865,572 |
| **ஆண்டுக்கான மொத்த முழுமையான வருமானம் நிகர வரி** | **227,256,167** | **325,512,286** |

# உரிமை முதல் கூற்றில் மாற்றங்கள்

**2017 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கானது**
**(எல்லாத் தொகைகளும் இலங்கை ரூபாவில் உள்ளன)**

| | கூறப்பட்ட மூலதனம் | இலாபம் மற்றும் நட்டம் | மொத்தம் |
|---|---|---|---|
| 2016.01.01இல் உள்ளவாறு மீதி | 690,079,000 | 1,608,798,066 | 2,298,877,066 |
| ஆண்டுக்கான மொத்த இலாபம் | - | 296,646,714 | 296,646,714 |
| ஏனைய முழுமையான வருமானம் | - | 28,865,572 | 28,865,572 |
| மொத்த முழுமையான வருமானம் | **-** | 325,512,286 | 325,512,286 |
| திறைசேரிக்கான பங்களிப்பு | - | (65,000,000) | (65,000,000) |
| **2016.12.31இல் உள்ளவாறு மீதி** | **690,079,000** | **1,869,310,352** | **2,559,389,352** |
| | | | - |
| 2017.01.01இல் உள்ளவாறு மீதி | 690,079,000 | 1,869,310,352 | 2,559,389,352 |
| ஆண்டுக்கான மொத்த இலாபம் | - | 223,907,939 | 223,907,939 |
| ஏனைய முழுமையான வருமானம் | - | 3,348,228 | 3,348,228 |
| மொத்த முழுமையான வருமானம் | **-** | **227,256,167** | 227,256,167 |
| திறைசேரிக்கான பங்களிப்பு | - | (45,000,000) | (45,000,000) |
| **2017.12.31இல் உள்ளவாறு மீதி** | **690,079,000** | **2,051,566,519** | 2,741,645,519 |

# காசுப்பாய்ச்சல் கூற்று

**2017 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கானது**

**(எல்லாத் தொகைகளும் இலங்கை ரூபாவில் உள்ளன)**

| | 2017ஆம் ஆண்டுக்கானது | 2016ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|
| **தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| வரிக்கு முந்திய தேறிய இலாபம்/(நட்டம்) மற்றும் அசாதாரண இனங்கள் | 321,982,521 | 441,164,887 |
| திருத்தங்கள் : | | |
| அசையாச் சொத்துகளின் தேய்வு | 105,693,713 | 110,886,391 |
| நடைமுறை சேவை செலவினம் | 2,655,342 | 5,028,968 |
| ஊழியர் வட்டிச் செலவு | 3,881,928 | 5,446,805 |
| கையுதிர்ப்பு இலாபம் / நட்டம் | - | (4,909,777) |
| சேதமடைந்தவை மற்றும் பயன்படுத்தாதவற்றுக்கான செலவு | 324,902 | 1,632,478 |
| வங்கியிடமிருந்து கோரிய உத்திரவாதம் - DALAS | - | (7,525,587) |
| இரண்டு வருடங்களுக்கு மேல் செலுத்தப்படாத விலைகூறல் முறிகள் | - | (4,473,719) |
| கோரப்பட்ட தாமதமான கட்டணங்கள் | (12,971,037) | - |
| உரிமை கோரப்படாத பிடிமானம் | (4,952,389) | (4,187,151) |
| வட்டி வருமானம் | (73,534,273) | (85,783,178) |
| **செயற்படு மூலதன மாற்றத்துக்கு முன்னர் தொழிற்பாட்டு இலாபம்** | **343,080,706** | **457,280,117** |
| **செயற்படு மூலதன இனங்களில் மாற்றம்** | | |
| இருப்புகளில் (அதிகரிப்பு) / குறைவு | (47,239,523) | 20,989,038 |
| கடன் பெறுனர் மற்றும் பெறவேண்டியவற்றில் (அதிகரிப்பு) / குறைவு | (295,473,917) | (17,871,154) |
| வைப்புகள் மற்றும் முற்கொடுப்பனவுகளில் (அதிகரிப்பு) / குறைவு | (8,785,430) | 5,192,183 |
| பொறுப்புகளில் அதிகரிப்பு / (குறைவு) | 33,649,275 | 2,960,033 |
| **தொழிற்பாட்டிலிருந்து ஈட்டப்பட்ட காசு** | **25,231,111** | **468,550,217** |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (2,837,917) | (1,267,855) |
| செலுத்தப்பட்ட வரி வருமானம் | (125,220,683) | (184,182,270) |
| **தொழிற்பாட்டிலிருந்து ஈட்டப்பட்ட தேறிய காசு** | **(102,827,489)** | **283,100,093** |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| குறுகிய கால முதலீடு **(குறிப்பு அ)** | 264,882,293 | (143,596,270) |
| அசையாச் சொத்துகள் கொள்வனவு | (174,392,920) | (161,545,630) |
| விற்கப்பட்ட ஆதனங்களின் விற்பனை வருமானம் | - | 5,018,900 |
| பெற்ற வட்டி | 57,945,340 | 81,013,817 |
| ஏனைய நடைமுறையல்லாத சொத்துகள் | (864,140) | (67,033) |
| **முதலீட்டுச் செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | **147,570,572** | **(219,176,215)** |
| **நிதியீட்டச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| திறைசேரி பங்களிப்பு | (45,000,000) | (65,000,000) |
| **நிதியீட்டச் செயற்பாடுகளில் பயன்படுத்திய தேறிய காசு** | **(45,000,000)** | **(65,000,000)** |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவை தேறிய அதிகரிப்பு / (குறைவு)** | (256,917) | (1,076,122) |
| **ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை** | 1,631,481 | 2,707,603 |
| **காலப்பகுதியின் இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை (குறிப்பு ஆ)** | **1,374,564** | **1,631,481** |

| | | |
|---|---|---|
| **குறிப்பு அ - முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| குறித்த காலப்பகுதியில் காசு உட்பாய்ச்சல் | 5,945,552,908 | 7,709,395,948 |
| குறித்த காலப்பகுதியில் காசு வெளிப்பாய்ச்சல் | (6,210,435,201) | (7,565,799,678) |
| தேறிய காசுப்பாய்ச்சல் | **(264,882,293)** | **143,596,270** |

| | | |
|---|---|---|
| **குறிப்பு ஆ** | | |
| **காசும் காசுக்குச் சமமானவையும்** | | |
| இலங்கை வங்கி - இரத்மலானை கிளை | 41,084 | 54,043 |
| இலங்கை வங்கி - தொகுதிக் கிளை | 1,228,266 | 971,147 |
| மக்கள் வங்கி - இரத்மலானை கிளை | 40,698 | 249,278 |
| மக்கள் வங்கி - தொகுதிக் கிளை | 11,634 | 309,816 |
| காசு மீதி | 36,367 | 28,895 |
| சில்லறைக் காசு | 16,516 | 18,302 |
| | **1,374,564** | **1,631,481** |

# கூட்டிணைத் தகவல்களும் முக்கியமான கணக்கீட்டுக கொள்கைகளும்

## 1. கூட்டிணைத் தகவல்கள்

### பொது

அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளது. அது இல.11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இரத்மலானை என்னும் முகவரியில் அமைந்துள்ள அரச கூட்டுத்தாபனமாகும்.

கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்ட 2017 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதியியல் கூற்றுகள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.

### பிரதான செயற்பாடுகள்

பிரதான செயற்பாடுகள் பின்வருமாறு,

(அ) மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்தல், பதனிடல் களஞ்சியப்படுத்தல் மற்றும் மீள்பொதியிடல்.
(ஆ) மருந்துப் பொருட்களின் உற்பத்திக்கும் பதனிடலுக்கும் தொழில்நுட்ப உதவி வழங்கல்.
(இ) மருந்தியல் மற்றும் மருந்தாக்க ஆய்வுகளும் மருந்துகளின் தரம் உயர்த்தல்.
(ஈ) மருந்துப்பொருட்களின் சந்தைப்படுத்தல்.

## 2. தயார்படுத்தலின் அடிப்படை

### 2.1 இணங்கியொழுகுதல் பற்றிய கூற்று

நிதியியல் கூற்றுகள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் வழங்கப்பட்டவாறு இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLFRS/LKAS) சட்டத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.2 அளவீட்டு அடிப்படை

நிதிக்கூற்றுகள் வரலாற்று ரீதியான செலவினங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. கூட்டுத்தாபனத்தின் நிதியியல் கூற்றுகள் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளன.

## 3. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

### 3.1 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

மேந்தலைகளுக்கிடையிலான ஒதுக்கீடு 5.1.5 தவிர ஏனைய கீழே தரப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டில் பயன்படுத்தியவற்றை ஒத்தவையாகும்.

### 3.1.1 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவை ஆகுசெலவு, தேறிய திரண்ட தேய்வு மற்றும் திரண்ட செயலிழப்பு நட்டங்கள், ஏதேனும் இருப்பின், ஆகியவற்றில் கூறப்பட்டுள்ளன. அத்தகைய செலவினங்கள் ஆதனத்தின் பாகங்களின் கூறுகளைப் பதிலீடு செய்தல், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் அங்கீகார தகவுதிறன்கள் ஈடுசெய்யப்பட்டிருப்பின், நீண்டகால நிர்மாணக் கருத்திட்டங்களுக்கான கடன் பெறல் செலவுகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இடையிடையே ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் முக்கியமான பாகங்களைப் பதிலீடு செய்ய நேரிடின், கூட்டுத்தாபனம் பதிலீடு செய்யப்பட்ட பாகத்தை அங்கீகரிப்பதுடன் புதிய பாகத்தை அதன் சொந்த தொடர்பான பயன்பாட்டுக் காலம் மற்றும் தேய்மானத்துடன் அங்கீகரிக்கின்றது. அவ்வாறே, பாரிய பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டால், அங்கீகரித்தல் தகவுதிறன்கள் ஈடு செய்யப்படின், ஒரு பதிலீடாக அதன் ஆகுசெலவு பொறி மற்றும் உபகரணத்தின் கொண்டுசெல்லும் தொகையுடன் அங்கீகரிக்கப்படுகின்றது. ஏனைய எல்லா திருத்தங்கள் மற்றும் பராமரிப்புச் செலவுகள் வருமானக் கூற்றில் கூறப்பட்டதாக அங்கீகரிக்கப்படுகின்றன.

### 3.1.2 தேய்வு

தேய்வு LKAS 16 இல் உள்ள உடன்படிக்கையின் படி வழங்கப்படுகிறதுஇ நடைமுறை அல்லாத சொத்துக்கள் பாவிக்கப்படும் நாளிலிருந்து கணிப்பிட ஆரம்பிக்கப்படுகிறது. அதேவேளை விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்ட∴முடிவு செய்யப்பட்ட குறித்த திகதியிலிருந்து தேய்வு கைவிடப்படுவதோடு விற்பனை SLFRS 05 அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. நேர்கோட்டு முறை

அடிப்படையில் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் உத்தேச பயன்படு காலம் பின்வருமாறு:

| | |
|---|---|
| குத்தகைக் காணி | குத்தகைக் காலத்தில் (99 வருடங்கள்) |
| இயற்கை நிலக்காட்சியமைப்புச் செலவுகள் | குத்தகைக் காலத்தில் (99 வருடங்கள்) |
| கட்டிடங்கள் | 4 முதல் 30 வருடங்கள் |
| வாகனக் கொட்டில் | 4 வருடங்கள் |
| பொறிகள் மற்றும் இயந்திரங்கள் | 1 முதல் 25 வருடங்கள் |
| மோட்டார் வாகனங்கள் | 3 முதல் 15 வருடங்கள் |
| மோட்டார் சைக்கிள் | 4 முதல் 15 வருடங்கள் |
| துவிச்சக்கர வண்டி மற்றும் வண்டிகள் | 7 வருடங்கள் |
| உபகரணங்கள் | 2 முதல் 30 வருடங்கள் |
| கணினி உதிரிப்பாகங்கள் | 1 முதல் 10 வருடங்கள் |
| கணினி மென்பொருள் | 1 முதல் 6 வருடங்கள் |
| தளபாட பொருத்துக்கள் | 15 முதல் 20 வருடங்கள் |
| கருவிகள் | 1 முதல் 15 வருடங்கள் |
| நூலகப் புத்தகங்கள் | 5 வருடங்கள் |

### 3.1.3 அருவச் சொத்துகள்

பிரத்தியேமாகக் கொள்வனவு செய்யப்பட்ட அருவச் சொத்துகள் ஆரம்ப அங்கீகார ஆகுசெலவில் மதிப்பிடப்படுகின்றன. ஆரம்ப அங்கீகாரத்தைத் தொடர்ந்து, அருவச் சொத்துகள் திரண்ட கடன் தீர்த்தல் மற்றும் திரண்ட சேத இழப்புகள் ஏதேனும் இருப்பின் அவற்றைக் கழித்து ஆகுசெலவில் கொண்டுசெல்லப்படுகின்றன. மூலதனமாக்கப்பட்ட அபிவிருத்தி ஆகுசெலவுகள் நீங்கலாக, உள்ளக ரீதியாக உருவாக்கப்பட்ட அருவச் சொத்துகள் மூலதனமாக்கப்படாது, செலவு உறப்பட்ட ஆண்டின் வருமானக் கூற்றில் செலவினம் பிரதிபலிக்கின்றது.

### 3.1.4 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் சேதம்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொண்டு செல்லும் பெறுமதி, வருடாந்தம் அல்லது கொண்டு செல்லும் பெறுமதி மீண்டும் பெற முடியாதது என நிகழ்வுகள் அல்லது சூழ்நிலை மாற்றங்கள் குறித்துக் காட்டும்போது மீளாய்வு செய்யப்படுகின்றன. அத்தகைய குறித்துக்காட்டல்கள் இருக்குமாயின், கொண்டு செல்லும் பெறுமதி உத்தேச அறவிடக்கூடிய தொகையை விஞ்சுமாயின், சொத்துகள் அறவிடக்கூடிய தொகை குறைத்து எழுதப்படுகின்றன. சேத இழப்புகள் அதே சொத்துக்கான முன்னைய மீள் மதிப்பீட்டு மிகையை வழங்காதவிடத்து வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

### 3.1.5 நிதி சாரா சொத்துகளின் சேதம்

ஒரு சொத்து சேதமடையலாம் என்பதற்கான குறிகாட்டிகள் தென்படுகின்றனவா என ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் கூட்டுத்தாபனம் மதிப்பிடுகின்றது. ஏதேனும் குறிகாட்டிகள் தென்படின், அல்லது ஒரு சொத்தின் வருடாந்த சேத மதிப்பீட்டுச் சோதனை தேவைப்படுத்தப்படும்போது, கூட்டுத்தாபனம் சொத்தின் பெறக்கூடிய தொகையை மதிப்பிடுகின்றது. ஒரு சொத்தின் பெறக்கூடிய தொகை ஒரு சொத்தின் காசை உருவாக்கும் அலகுகளில் (CGU) இருந்து விற்பனைக்கான ஆகுசெலவைக் கழித்து வரும் தொகையில் கூடியது என்பதுடன் பயன்பாட்டிலுள்ள அதன் பெறுமதி ஏனைய சொத்துகளிலிருந்து அல்லது சொத்துகளின் தொகுதியிலிருந்து பெருமளவில் தங்கியிராத காசுப்பாய்ச்சலை சொத்து உருவாக்காதவிடத்து, ஒரு தனிப்பட்ட சொத்துக்கு நிர்ணயிக்கப்படுகின்றது. ஒரு சொத்தின் கொண்டு செல்லும் பெறுமதி அல்லது ஊபுரு அதன் அறவிடக்கூடிய தொகையை விஞ்சுமிடத்து, அந்த சொத்து சேதமடைந்ததாகக் கருதப்பட்டு அதன் அறவிடக்கூடிய தொகைக்கு குறைத்து எழுதப்படுகின்றது. பயன்பாட்டிலுள்ள பெறுமதியை மதிப்பிடும்போது, பணத்தின் காலப் பெறுமதியின் தற்போதைய சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கும் வரிக்கு முந்திய கழிவு வீதம் மற்றும் சொத்துக்கான குறித்த இடர் ஆகியவற்றைப் பயன்படுத்தி உத்தேச எதிர்கால காசுப்பாய்ச்சலுக்கு கழிவு வழங்கப்படுகின்றது. விற்பனைக்காக ஆகுசெலவைக் கழித்து நியாய விலையை நிர்ணயிக்கையில், அண்மைக்கால சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் கிடைக்கக்கூடியதாக இருப்பின் அவை கவனத்தில் கொள்ளப்படுகின்றன. அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் எதனையும் அடையாளம் காண முடியாதவிடத்து, ஒரு பொருத்தமான மதிப்பீட்டு மாதிரி பயன்படுத்தப்படுகின்றது.

### 3.1.6 வரி விதிப்பு

#### 3.1.6.1 நடைமுறை வரி விதிப்பு

நடைமுறை வரிச்சொத்துகள் மற்றும் பொறுப்புகள் தற்போதைய மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக வரி அறவிடும் அதிகாரிகளிடமிருந்து அறவிடுவதற்கு அல்லது அவர்களுக்குச் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகைகளைக் கொண்டதாகும். தொகைகளைக் கணிப்பதற்குப் பயன்படுத்தப்படும் வரி வீதம் மற்றும் வரிச் சட்டங்கள் நிதி நிலைமைக் கூற்றுத் திகதியளவில் சட்டவாக்கம் செய்யப்பட்ட அல்லது பெருமளவில் சட்டவாக்கம் செய்யப்பட்டவைகளாகும்.

அதன் பிரகாரம், வரி விதிப்புக்கான ஏற்பாடு 2000ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க அரசிறைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களின் பிரகாரம் வரி நோக்கங்களுக்காகத் திருத்தப்பட்டவாறாக அவ்வாண்டுக்கான இலாபத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. நடைமுறை ஆண்டின் வரி விதிப்புக்கான ஏற்பாடு சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்ட வீதத்துக்கு அமைவாக கணக்கீட்டு இலாபத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றது.

### 3.1.6.2 தாமதித்த வரி விதிப்பு

நிதியியல் நிலைமையில் அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு வகையான தற்காலிக வேறுபாடுகள் தொடர்பாக, தாமதித்த வரிப் பொறுப்பு மற்றும் சொத்துகளை நாம் கவனத்தில் கொண்டோம். எமது நிதிக் கூற்றில், ஓய்வு பெறல் பணிக்கொடை ஏற்பாட்டுக்காக நிலையான சொத்துகள் மற்றும் தாமதித்த வரிச் சொத்து ஆகியவற்றுக்கான புத்தக மற்றும் வரி குறைத்து எழுதப்பட்ட தாமதித்த வரிப்பொறுப்பை நாம் பிரதானமாக அங்கீகரித்தோம். தாமதித்த வரிச் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் ஆகியவை வருமான வரி வீதத்தில் அளவிடப்படுகின்றன.

### 3.2 சரக்கிருப்புகள்

‘முதலில் வந்து முதலில் செல்பவை’ என்னும் அடிப்படையில் மதிப்பிடப்படும் உபயோகத்தில் இல்லாத மற்றும் மெதுவாக விற்பனையாகும் பொருட்களுக்கான உரிய தொகையை ஒதுக்கிய பின்னர் ஆகுசெலவினம் மற்றும் தேறிய அங்கீகரிக்கக்கூடிய பெறுமதி ஆகியவற்றில் எது குறைவானதோ அதில் சரக்கிருப்புகள் மதிப்பிடப்படுகின்றன.

### 3.2.1 சரக்கிருப்புகளின் அளவீடு

சரக்கிருப்புகளின் ஆகுசெலவு

**மூலப்பொருட்கள்**

ஏதேனும் இடைநேர்விளைவான செலவினங்களுடன் ஆகுசெலவுகள்

**நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை**

மூலப்பொருட்களின் ஆகு செலவு மற்றும் உற்பத்திச் செலவினங்கள் முழுமையாக.

**முடிவுப் பொருட்கள்**

மூலப்பொருட்களின் ஆகு செலவு மற்றும் வேறுபடக்கூடிய உற்பத்திச் செலவினங்கள் முழுமையாக.

**ஏனைய இருப்புகள்**

ஆகு செலவு நிறையிடப்பட்ட சராசரி அடிப்படையில் கணிக்கப்படுகின்றது.

### 3.2.2 வியாபாரம் மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள்

வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டியவைகள் ஆரம்பத்தில் நியாய விலையிலும் அதனைத் தொடர்ந்து பயனுறுதியான வட்டி வீத முறையைப் பயன்படுத்தி சேதங்களுக்கான ஏற்பாடுகளைக் கழித்து கடன் தீர்த்தல் செலவினத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. 2016.12.31இல் உள்ளவாறு நீண்ட கால நிலுவைகள் எதுவும் இல்லாததால், வர்த்தகக் கடன்பட்டோருக்கு எவ்விதமான சேதங்களையும் கூட்டுத்தாபனம் ஏற்பாடு செய்யவில்லை.

### 3.2.3 காசும் காசுக்குச் சமமானவையும்

காசும் காசுக்குச் சமமானவையும் கையிலுள்ள காசு, வங்கி மீதி மற்றும் குறுகிய கால முதலீடுகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளன.

### 3.2.4 தொடர்பான தரப்பு கொடுக்கல் வாங்கல்கள

#### 3.2.4.1 பணிப்பாளர் சபையின் நட்ட ஈடு

**அரசு மற்றும் அரசு தொடர்பான அமைப்புகளுடன் கொடுக்கல் வாங்கல்கள்**

கூட்டுத்தாபனம் அதன் சாதாரண தொழிற்பாட்டு நடவடிக்கைகளில், தொடர்பான தரப்புகளுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்கின்றது. தொடர்பான தரப்புகள் என்பது இலங்கை அரசாங்கம் (கூட்டுத்தாபனத்தின் இறுதியான உரிமையாளர் அரசாங்கம் என்ற வகையில்) பல்வேறு அரச திணைக்களங்கள், அரச கட்டுப்பாட்டு அமைப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் வாய்ந்ததும் கூட்டாக முக்கியத்துவம் வாய்ந்ததும் ஆனால் தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் அல்லாதவையுமான அரச மற்றும் அரச கட்டுப்பாட்டு அமைப்புகளுடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஒழுங்குகளின் விபரம் பின்வருமாறு:

| **கொடுக்கல் வாங்கலின் தன்மை** | **2017** | **2016** |
|---|---|---|
| இலங்கை அரசாங்கப் பிணையங்களில் கூட்டுத்தாபன முதலீடு | 926,461,067 | 1,175,754,426 |
| இவ்வாண்டில் அரசாங்கத்துக்குச் செலுத்திய மிகை | 45,000,000 | 65,000,000 |
| சு.சே.தி,அ.ம.கூ மற்றும் விநியோகஸ்தர்களுக்கான விற்பனைகள் | 3,174,612,664 | 2,434,508,479 |
| | | |
| **நிலுவையாக உள்ள மீதி** | | |
| அ.ம.கூ இடமிருந்து பெறவேண்டியவை | 5,421,788 | 28,464,567 |
| சு.சே.தி இடமிருந்து பெறவேண்டியவை | 316,077,817 | 6,860,212 |

### 3.2.5 மூலதனம்

2017 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டில் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனத்தில் எவ்வித மாற்றமும் இல்லை.

### 3.2.6 நிதியியல் நிலைமைக் கூற்றுத் திகதிக்குப் பிந்திய நிகழ்வுகள்

நிதியியல் கூற்றுத் திகதிக்குப் பிந்திய எல்லா மூலப்பொருள் சார்ந்த நிகழ்வுகளும் கவனத்தில் கொள்ளப்பட்டு அவசியமானவிடத்து நிதியியல் கூற்றில் பொருத்தமான திருத்தங்களும் வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 3.2.7 ஆய்வுச் செலவு

புதிய விஞ்ஞான அல்லது தொழில்நுட்ப அறிவையும் புரிந்துணர்வையும் பெறும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுச் செயற்பாடுகள் மீதான செலவினம் ஏற்படுகின்றபோது அது இலாபம் அல்லது செலவில் அங்கீகரிக்கப்படுகின்றது.

## 4. பொறுப்புகளும் ஏற்பாடுகளும்

### 4.1 ஓய்வுப்பயன் கடப்பாடு

### 4.1.1 வரைவிலக்கணம் செய்யப்பட்ட பயன் திட்டம் - ஓய்வூதியப் பணிக்கொடை

1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், கூட்டுத்தாபனம் பணிக்கொடையைச் செலுத்தும் பொறுப்பைக் கொண்டுள்ளது. ஓர் ஊழியர் கூட்டுத்தாபனத்தில் தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் சேவையாற்றும்போதுதான் அவருக்குப் பணிக்கொடை செலுத்த வேண்டிய பொறுப்பு எழுகின்றது. இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்காக, நிதியியல் நிலைமைக் கூற்றில் ஒரு ஏற்பாடு முன் கொண்டு செல்லப்படுகின்றது. அதன் விளைவாக ஏற்படும் வருட ஆரம்பத்தில் முன் கொண்டுவரும் ஏற்பாட்டுக்கும் வருட இறுதியில் முன் கொண்டு செல்லும் ஏற்பாட்டுக்கும் இடையிலான வேறுபாடு தொடர்பாக வருமானக்கூற்றில் குறிப்பிடப்படுகின்றது.

கூட்டுறவு அறிவுரையின் படி 2017 ஆம் ஆண்டில் வாக்குறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய ஆதாயம், பணிக்கொடையின் தற்போதைய மதிப்பை அளவிட ஊக்குவிக்கப்பட்டது.

கணிப்பீட்டில் பயன்படுத்தப்படும் பிரதான ஊகங்கள் பின்வருமாறு

பொறுப்புகளுக்கு புற நிதியிடல் மேற்கொள்ளப்படுவதில்லை. இந்த விடயம் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை அல்லாத பொறுப்புகளின் கீழ் குழுவாக்கப்பட்டுள்ளது.

### 4.1.2 வரைவிலக்கணப்படுத்தப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

''ஊழியர் சேமலாப நிதியம்'' மற்றும் ''ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்'' ஆகியவற்றுக்குத் தகுதியான எல்லா ஊழியர்களுக்கும் சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதியின் பிரகாரம் உரிய பங்களிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகிய பங்களிப்புகளுக்கான கடப்பாடுகள் வருமானக் கூற்றில் செலவாகக் காட்டப்பட்டுள்ளன.

### 4.1.3 வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகள்

வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகள் ஆரம்பத்தில் நியாய விலையில் மதிக்கப்பட்டு அதன் பின்னர் பயனுறுதியான வட்டி வீத முறையிலிருந்து சேதத்துக்கான இழப்பைக் கழித்தல் முறையைப் பயன்படுத்தி கடன் தீர்த்த செலவில் அளவிடப்படுகின்றன. 2017.12.31இல் முக்கிய தாக்கம் உள்ளவாறு ஏதேனும் அதனைத் தொடர்ந்த அளவிடப்பட்ட செலவினத்துக்கு கூட்டுத்தாபனம் ஏற்பாடுகளை மேற்கொள்ளவில்லை.

### 4.1.4 ஏற்பாடு

#### பொது

கடந்த கால நிகழ்வுகளின் விளைவாக தற்போதைய கடப்பாடுகளை (சட்ட ரீதியான அல்லது நெருக்குதலான) கூட்டுத்தாபனம் கொண்டுள்ள போது ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. கடப்பாட்டைத் தீர்ப்பதற்கு பொருளாதாரப் பயனைக் கொண்ட வளத்தின் வெளிப்பாய்ச்சல் தேவைப்படுத்தப்படலாம். கடப்பாட்டுத் தொகையிலிருந்து நம்பத்தகுந்த மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படலாம். ஏற்பாடுகளில் சில அல்லது எல்லாம் மீளளிப்புச் செய்யப்படவேண்டும் என கூட்டுத்தாபனம் எதிர்பார்க்குமிடத்து, உதாரணமாக ஒரு காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ், மீளளிப்பு நடைமுறையில் நிச்சயமாக உள்ள போது மட்டுமே அது பிரத்தியேகமான சொத்தாகக் கருதப்படுகின்றது. ஏதேனும் ஏற்பாடு தொடர்பான செலவினம் வருமானக் கூற்றில் இடம்பெறுகின்றது.

பணத்தின் நேரப் பெறுமதி முக்கியமாயின், பொருத்தமானவிடத்து, பொறுப்புக்கான குறித்த இடர்களைப் பிரதிபலிக்கும் தற்போதைய வரிக்கு முந்திய வீதத்தைப் பயன்படுத்தி ஏற்பாடுகள் கழிவு வழங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. கழிவு வழங்கல் பயன்படுத்தப்படும்போது, காலப்போக்கில் ஏற்படும் ஏற்பாட்டின் அதிகரிப்பு நிதிச்செலவாக அங்கீகரிக்கப்படுகின்றது.

## 5. வரிக்கூற்று

வருமானக் கூற்றைச் சமர்ப்பிக்கும் நோக்கத்துக்காக, செலவுகள் முறைமை செயற்பாடு கூட்டுத்தாபனத்தின் செயலாற்றக் கூறுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதனால், அம்முறை கையாளப்படுகின்றது.

### 5.1.1 புரள்வு

அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் புரள்வு சுகாதார சேவைகள் திணைக்களம், அரசாங்க மருந்தகக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கான விற்பனைகளுடன் ஏற்றுமதிகளையும் உள்ளடக்குகின்றது.

### 5.1.2 வருமானத்தை அங்கீகரித்தல்

கொடுப்பனவுகள் எப்போது மேற்கொள்ளப்படுகின்றன என்பதைப் பொருட்படுத்தாது பொருளாதாரப் பயன்கள் கூட்டுத்தாபனத்துக்கு உட்பாய்வதுடன் வருமானத்தை நம்பத்தகுந்தவாறு அளவிட முடியும் என்பது சாத்தியமானதாகும் என்னும் அளவுக்கு வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது. ஒப்பந்த ரீதியாக வரைவிலக்கணப்படுத்தப்பட்ட கொடுப்பனவு நியதிகள் மற்றும் வரிகள் அல்லது தீர்வைகளைக் கழித்து, பெற்ற அல்லது பெறக்கூடிய நியாயப் பெறுமதியில் வருமானம் அளவிடப்படுகின்றது. வருமானம் பிரதானமாகவா அல்லது செயலாண்மையாகவா செயற்படுகின்றது என்பதை நிர்ணயிப்பதற்காக கூட்டுத்தாபனம் அதன் வருமான ஒழுங்குகளை குறித்த தகவுதிறன்களுக்கு எதிராக மதிப்பிடுகின்றது. அதன் எல்லா வருமான ஒழுங்குகளிலும் அது பிரதானமாகச் செயற்படுகின்றது என கூட்டுத்தாபனம் முடிவு செய்துள்ளது. வருமானத்தை அங்கீகரிப்பதற்கு முன்னர் பின்வரும் குறித்த அங்கீகார தகவுதிறன் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

#### பொருட்களின் விற்பனை

குறிப்பிடத்தக்க இடர்களும் உரிமை வழங்குதலும் வழக்கமாக பொருட்களை வழங்கியதும் கொள்வனவாளரைச் சேர்ந்தடைந்ததும் பொருட்களின் விற்பனை வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 5.1.3 செலவுகள்

வணிகத்தை நடத்துவதில் உறப்படும் எல்லா செலவுகளும் ஆண்டுக்கான இலாபத்தை வந்தடைந்ததும் வருமானத்தில் சாட்டப்படுகின்றது.

### 5.1.4 செலவினங்களுக்கு நிதியிடல்

நிதிச் செலவுகள் வங்கி மேலதிகப்பற்று வட்டி, நாணயப்பத்திர ஆரம்பச் செலவுகள் மற்றும் கடன் வசதி உடன்படிக்கைக் கட்டணங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

### 5.1.5 மேந்தலைகளுக்கிடையிலான ஒதுக்கீடு

நிதிக்கூற்றுகளில், மேந்தலை ஒதுக்கீட்டு முறைமை பின்வருமாறு:

**சலவுகள்**

(அ) வீதங்கள் மற்றும் வரிகள், மின்சாரம், நீர்க்கட்டணங்கள், காப்புறுதி, கருவிகளின் பராமரிப்பு – பொது, பராமரிப்பு – கட்டிடம், தேய்வு

(ஆ) சுகாதாரக் காப்புறுதித் திட்டத்தின் காப்புறுதி, பணியாளர் சேமநலன், சீருடை மற்றும் சப்பாத்துகள், போக்குவரத்துக் கட்டணங்கள்

(இ) பணிப்பாளர்களுக்கான கட்டணங்கள், ஏனைய ஊக்குவிப்புகள், மோட்டார் வாகன திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு, வாகனங்களுக்கான எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகள், தபால் செலவுகள் மற்றும் தொலைநகல், தொலைபேசிக் கட்டணங்கள், பாதுகாப்புக் கட்டணங்கள், வாகனங்கள் மற்றும் மருந்துகளுக்கான உரிமக் கட்டணங்கள், அச்சிடல் மற்றும் காகிதாதிகள், அலுலகச் செலவுகள், கணக்காய்வுக் கட்டணம், வாடகைக் கட்டணங்கள், விளம்பரங்கள், வர்த்தகம், மற்றும் பருவ இதழ்களுக்கான சந்தா, சட்ட மற்றும் விசாரணைச் செலவுகள், தொழில்சார் கட்டணங்கள், கழியாட்டம், வருடாந்த சந்தா, வருடாந்த மகாநாடுகள் மற்றும் கூட்டங்கள், முத்திரைக் கட்டணம், காகிதாதிகள், இருப்பெடுப்பு சீராக்கல்.

(ஈ) பணியாளர் பயன்களும் ஏனைய செலவினங்களும்

**ஒதுக்கீட்டு முறைமை**

(அ) உண்மையான செலவினம் உற்பத்திக்கும்,நிர்வாகத்திற்கும் நேரடியான தொடர்பை கொண்டிருப்பின் அவ் அடிப்படையில் பங்கிடப்படும் ஏனைய பொதுவான உண்மையான செலவினம் உற்பத்திக்கும் நிர்வாகத்துக்கும் 70% மற்றும் 30% என்னும் அடிப்படையில் பங்கிடப்படுகின்றது.

(ஆ) செலவினம் ஒவ்வொரு பிரிவிலும் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பங்கிடப்படுகின்றது.

(இ) உண்மையான செலவு முறைமை பயன்படுத்தப்படுகின்றது

(ஈ) உண்மையான செலவு முறைமை பயன்படுத்தப்படுகின்றது

## 6. நிதியியல் சாதனங்கள் - ஆரம்ப அங்கீகாரமும் அதனைத் தொடர்ந்த அளவீடும்

### 6.1 நிதியியல் சொத்துகள்

### 6.1.1 ஆரம்ப அங்கீகாரமும் அளவீடும்

டுமுயுளுு 39இன் நோக்கெல்லையினுள் வரும் நிதியியல் சொத்துகள் இலாபம் அல்லது நட்டம், கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள், முதிர்ச்சி வரை வைத்திருக்கும் முதலீடுகள் மற்றும் விற்பனைக்காக வைத்துள்ள நிதியியல் சொத்துகள், ஆகியவற்றின் ஊடாக பொருத்தமானவாறும் ஆரம்ப அங்கீகாரத்தில் அதன் நிதியியல் சொத்துகளின் வகைப்படுத்தல் நிர்ணயிக்கின்றவாறும் நியாயப் பெறுமதியில் நிதிச் சொத்துகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

எல்லா நிதிச் சொத்துகளும் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியிலும் நியாயப் பெறுமதியில் இல்லாத சொத்துகளைப் பொறுத்தவரை, நேரடியாக கொடுக்கல் வாங்கல் செலவுக்கு ஏற்றிக் கூறக்கூடிய இலாபம் அல்லது நட்டம் ஊடாகவும் அங்கீகரிக்கப்படுகின்றன.

கூட்டுத்தாபனத்தின் நிதிச் சொத்துகள் காசு மற்றும் குறுகிய கால திறைசேரி உண்டியல் முதலீடு, வர்த்தகம் மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள், பணியாளர் கடன்கள் மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளை உள்ளடக்கும்.

### 6.1.2 அடுத்துவரும் அளவீடு

நிதிச்சொத்துகளின் அடுத்துவரும் அளவீடு பின்வருமாறு அவற்றின் வகைப்படுத்தலைப் பொறுத்துள்ளது.

### 6.1.3 இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாய விலையில் நிதிச் சொத்துகள்

Financial assets at fair வியாபாரத்துக்காக வைத்திருக்கும் நிதிச்சொத்துகள், இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாய விலையில் ஆரம்ப அங்கீகாரத்தின் மீதமைவாக ஒதுக்கப்பட்ட நிதிச் சொத்துகள் ஆகியவற்றை இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாய விலையில் நிதிச்சொத்துகள் உள்ளடக்கும். நிதிச்சொத்துகள் அண்மையில் விற்பதற்காக அல்லது மீள்கொள்வனவுக்காக கொள்வனவு செய்யப்படின், வியாபாரத்துக்காக வைத்திருப்பவையாக வகைப்படுத்தப்படும்.

### 6.1.4 கடன்களும் பெறவேண்டியவைகளும்

கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள் செயலூக்க சந்தை ஒன்றில் விலை கூறப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகளுடனான வழிவராத நிதிச்சொத்துகளாகும். ஆரம்ப அளவீட்டின் பின்னர், அத்தகைய நிதிச்சொத்துகள் பயனுறுதியான வட்டி வீத முறைமையைப் (EIR) பயன்படுத்தி கடன் தீர்த்த செலவில் அதனைத் தொடர்ந்து அளவிடப்பட்டு அதில் இருந்து சேதத்தைக் கழித்து வருபவையாகும். கடன் தீர்த்த செலவினம் கொள்வனவு மீதான ஏதேனும் கழிவு அல்லது கட்டுப்பணத்துடன் EIRஇன் ஒருங்கிணைந்த பகுதியாகிய கட்டணம் அல்லது செலவினங்களைக் கவனத்தில் கொண்டு கணிக்கப்படுகின்றது. EIR கடன் தீர்த்தல் வருமானக் கூற்றில் நிதி வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது. சேதத்திலிருந்து எழும் நட்டங்கள் வருமானக் கூற்றில் நிதிச்செலவில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 6.1.5 முதிர்ச்சி வரை வைத்திருக்கும் முதலீடுகள்

நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகள் மற்றும் நிலையான முதிர்ச்சிகளுடனான வழிவராத நிதிச்சொத்துகள் கூட்டுத்தாபனம் சாதகமான நோக்கத்தையும் முதிர்ச்சிவரை அதனை வைத்திருக்கும் ஆற்றலையும் கொண்டிருக்கும் போது முதிர்ச்சி வரை வைத்திருப்பவையாக வகைப்படுத்தப்படுகின்றன. ஆரம்ப அளவீட்டின் பின்னர், முதிர்ச்சிக்காக வைத்திருக்கும் முதலீடுகள் பயனுறுதியான வட்டி முறைமையைப் பயன்படுத்தி சேதத்தைக் கழித்து கடன் தீர்த்த செலவினத்தில் அளவிடப்படுகின்றன. கடன் தீர்த்த செலவினம் கொள்வனவு மீதான ஏதேனும் கழிவு அல்லது கட்டுப்பணத்துடன் EIRஇன் ஒருங்கிணைந்த பகுதியாகிய கட்டணம் அல்லது செலவினங்களைக் கவனத்தில் கொண்டு கணிக்கப்படுகின்றது. EIR கடன் தீர்த்தல் வருமானக் கூற்றில் நிதி வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது. சேதத்திலிருந்து எழும் நட்டங்கள் வருமானக் கூற்றில் நிதிச்செலவில் அங்கீகரிக்கப்படுகின்றது. 2017 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டில் கூட்டுத்தாபனம் முதிர்ச்சிக்காக வைத்திருக்கும் முதலீடுகள் எதனையும் கொண்டிருக்கவில்லை.

### 6.1.6 விற்பனைக்காக கிடைக்கக்கூடிய நிதி முதலீடுகள்

விற்பனைக்காகக் கிடைக்கக்கூடிய நிதி முதலீடுகள் உரிமைப்பங்கு மற்றும் கடன் பிணையங்களை உள்ளடக்கியதாகும். விற்பனைக்காகக் கிடைக்கக்கூடியவையாக வகைப்படுத்தப்பட்ட உரிமைப்பங்கு முதலீடுகள் வியாபாரத்துக்காக வைத்திருப்பவையாக வகைப்படுத்தப்பட்டவையோ அல்லது இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாய விலையில் ஒதுக்கப்பட்டவையோ அல்ல. இந்த வகுதியைச் சேர்ந்த கடன் பிணையங்கள் நிச்சயமற்ற ஒரு காலப்பகுதிக்கு வைத்திருப்பதற்குக் கருதப்பட்டவையும் திரவத்தன்மைத் தேவைகளுக்கு பதில் நடவடிக்கையாக அல்லது சந்தை நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கான பதில் நடவடிக்கையாக விற்கக்கூடியவையாகும்.

ஆரம்ப அளவீட்டின் பின்னர், முதலீடு அங்கீகரிக்கப்படாத வரை விற்பனைக்காகக் கிடைக்கக்கூடிய ஒதுக்கத்தில் ஏனைய பூரண வருமானமாக அங்கீகரிக்கப்படாத வருமானங்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நட்டங்கள் ஆகியவற்றுடன் தொடர்ந்து நியாயப் பெறுமதியில் மதிப்பிடப்படும் வேளையில், திரண்ட இலாபம் அல்லது நட்டம் ஏனைய செயற்பாட்டு வருமானத்தில் அங்கீகரிக்கப்படுவதுடன் அவ்வேளையில், திரண்ட நட்டம் நிதிச் செலவில் வருமானக் கூற்றில் மீள்வகைப்படுத்தப்பட்டு விற்பனைக்காக் கிடைக்கக்கூடிய ஒதுக்கத்திலிருந்து அகற்றப்படுகின்றது. விற்பனைக்காகக் கிடைக்கக்கூடியதாக இருக்கும் கடன் பிணையங்கள் மீதான வட்டி வருமானம் பயனுறுதியான வட்டி முறைமையைப் பயன்படுத்தி கணிக்கப்படுவதுடன் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

விற்பனைக்காகக் கிடைக்கக்கூயதாக இருக்கும் நிதிச் சொத்துகளை அண்மித்த காலத்தில் விற்பனை செய்வதற்கான ஆற்றல் மற்றும் நோக்கம் தற்போதும் பொருத்தமானதா என நிர்ணயிப்பதற்கு கூட்டுத்தாபனம் அதனை மதிப்பிடுகின்றது. செயலூக்கமற்ற சந்தை காரணமாக கூட்டுத்தாபனம் இந்த நிதிச் சொத்துகளை விற்பனை செய்ய முடியாதுள்ளபோதும் அவ்வாறு செய்வதற்கான முகாமைத்துவத்தின் தீர்மானம் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் கணிசமான அளவு மாறுகின்ற போதும் கூட்டுத்தாபனம் அரிதான சூழ்நிலைகளில் இந்த நிதிச் சொத்துகளை மீள்வகைப்படுத்துதற்கு தீர்மானிக்கலாம். நிதிச் சொத்துகள் கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகளின் வரைவிலக்கணங்களை ஈடுசெய்கின்றபோதும் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலம் வரை அல்லது முதிர்ச்சி வரை இந்தச் சொத்துகளை வைத்திருப்பதற்கு கூட்டுத்தாபனம் நோக்கத்தையும் ஆற்றலையும் கொண்டுள்ளபோதும் கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகளை மீள்வகைப்படுத்தல் அனுமதிக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் நிதிச் சொத்துகளை வைத்திருப்பதற்கான ஆற்றலையும் நோக்கத்தையும் நிறுவனம் கொண்டுள்ள போது மட்டும் முதிர்ச்சி வரை வைத்திருக்கும் வகுதியை மீள்வகைப்படுத்தல் அனுமதிக்கப்படுகின்றது.

நிதிச் சொத்துகள் விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கும் வகுதிக்கு வெளியில் மீள்வகைப்படுத்துவதற்கு உரிமைப்பங்கில் அங்கீகரிக்கப்பட்ட அந்தச் சொத்து மீதான ஏதேனும் முன்னைய இலாபம் அல்லது நட்டம் நுஜசுஜப் பயன்படுத்தி முதலீட்டின் எஞ்சியுள்ள காலப்பகுதியில் இலாபம் அல்லது நட்டத்துக்கு தீர்க்கப்படுகின்றது. புதிய கடன் தீர்த்த செலவினத்துக்கும் எதிர்பார்க்கப்பட்ட காசுப்பாய்ச்சலுக்கும் இடையிலான ஏதேனும் வேறுபாடும் EIR ஐப் பயன்படுத்தி சொத்தின் எஞ்சிய காலப்பகுதியில் தீர்க்கப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து அந்த சொத்துகள் சேதமானவை என நிர்ணயிக்கப்படின், உரிமைப்பங்கில் பதிவு செய்யப்பட்ட தொகை வருமானக் கூற்றில் மீள்வகைப்படுத்தப்படுகின்றது. 2017 டிசம்பர் 31ஆம் திகதி முடிவுற்ற ஆண்டில் விற்பனைக்காகக் கிடைக்கும் ஏதேனும் நிதி முதலீடுகளை கூட்டுத்தாபனம் கொண்டிருக்கவில்லை.

### 6.1.7 அங்கீகரிக்காது விடல்

பின்வரும் சந்தர்ப்பங்களில் ஒரு நிதிச்சொத்து (அல்லது நிதிச்சொத்தொன்றின் ஒரு பாகம் அல்லது ஒத்த நிதிச்சொத்தின் குழுவொன்றின் ஒரு பாகம்) அங்கீகரிக்கப்படுவதில்லை:

i) சொத்திலிருந்து காசுப்பாய்ச்சலைப் பெறுவதற்கான உரிமை காலாவதியாதல்.

ii) கூட்டுத்தாபனம் சொத்திலிருந்து காசுப்பாய்ச்சலைப் பெறுவதற்காக அதன் உரிமைகளை மாற்றிக்கொடுத்தல் அல்லது 'கடந்து செல்லல்' ஏற்பாட்டின் கீழ் ஒரு மூன்றாம் தரப்புக்கு சாதன தாமதம் இன்றி காசுப்பாய்ச்சலை முழுமையாகப் பெறுவதற்கு பெற்ற காசைச் செலுத்துவதற்கான கடப்பாட்டை ஆரம்பித்தல். அத்துடன்,

(அ) கூட்டுத்தாபனம் கணிசமான அளவில் சொத்தின் எல்லா இடர்களையும் வெகுமதிகளையும் மாற்றிக்கொடுத்தல், அல்லது

(ஆ) கூட்டுத்தாபனம் கணிசமான அளவில் சொத்தின் எல்லா இடர்களையும் வெகுமதிகளையும் மாற்றிக்கொடுக்காமலும் வைத்திருக்காமலும் சொத்தின் கட்டுப்பாட்டை மாற்றிக் கொடுத்தல்.

### 6.1.8 நிதிச் சொத்துகளின் சேதம்

கூட்டுத்தாபனம் ஒவ்வொரு அறிக்கைத் திகதியிலும் ஒரு நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துகளின் குழு உண்மையாகவே சேதமடைந்துள்ளதா என்பதை மதிப்பிடுகின்றது. சொத்தின் ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர் நிகழ்ந்த ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சம்பவங்களின் விளைவாக சேதத்துக்கான உண்மையான சான்று இருப்பதுடன் அந்த இழப்புச் சம்பவம் நம்பத்தகுந்தவாறு மதிப்பிடக்கூடிய நிதிச் சொத்தின் அல்லது நிதிச் சொத்துகளின் குழுவின் உத்தேச எதிர்கால காசுப்பாய்ச்சலின் மீது தாக்கத்தைக் கொண்டிருந்தால் மட்டுமே ஒரு நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்தின் குழு சேதமடைந்ததாகக் கருதப்படும்.

கடனாளிகள் அல்லது கடனாளிகளின் ஒரு குழு கணிசமான நிதிப் பிரச்சினைகளை அனுபவித்தல், வட்டி அல்லது கடன் கொடுப்பனவில் தவணை தவறுதல் அல்லது நெறி பிறழ்தல், அவர்கள் வங்குரோத்து நிலைக்கு அல்லது ஏனைய நிதியியல் மீள் ஒழுங்கமைப்புக்கு உட்படுவார்கள் என்னும் சாத்தியம் மற்றும் தவணை தவறுதலுடன் தொடர்பான நிலுவைகளில் மாற்றம் அல்லது பொருளாதார நிலைமைகள் போன்ற உத்தேச எதிர்கால காசுப் பாய்ச்சலில் அளவிடக்கூடிய குறைவு ஆகியவற்றை அவதானிக்கக்கூடிய தரவுகள் குறித்துக் காட்டுதல் போன்ற ஆகிய குறிகாட்டிகளை சேதத்துக்கான சான்றுகள் உள்ளடக்கலாம்.

### 6.1.9 கடன் தீர்த்த செலவில் கொண்டு செல்லப்படும் நிதிச் சொத்துகள்

கடன் தீர்த்த செலவில் கொண்டு செல்லப்படும் நிதிச் சொத்துகளைப் பொறுத்தவரை, தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் வாய்ந்த நிதிச் சொத்துகள் அல்லது தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் வாய்ந்தவை அல்லாத நிதிச் சொத்துகளுக்கான உண்மையான சான்றுகள் உள்ளனவா என கூட்டுத்தாபனம் மதிப்பிடும். முக்கியத்துவம் வாய்ந்தவையாயினும் இல்லாவிடினும், தனிப்பட்ட முறையில் மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கான சேதத்துக்கு உண்மையான சான்று எதுவும் இல்லை என கூட்டுத்தாபனம் நிர்ணயித்தால், அது ஒத்த கடன் இடர் தன்மைகளுடனான நிதிச் சொத்தின் குழு ஒன்றை உள்ளடக்குவதுடன் அவற்றை சேதத்துக்காக கூட்டாக மதிப்பிடும். சேதத்துக்காக தனிப்பட்ட முறையில் மதிப்பிடப்பட்ட சொத்துகளில் சேத இழப்பு இருப்பின் அல்லது தொடர்ந்து காணப்படுவதாக அங்கீகரிக்கப்படின், அவை சேதத்துக்கான கூட்டான மதிப்பீட்டில் உள்ளடக்கப்படமாட்டாது.

சேத இழப்பு உறப்பட்டுள்ளதாக உண்மையான சான்றுகள் காணப்படுமாயின், இழப்பின் அளவு சொத்துகள் கொண்டு செல்லும் தொகைக்கும் உத்தேச எதிர்காலக் காசுப் பாய்ச்சலின் தற்போதைய பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடாக அளவிடப்படும். (இற்றை வரை உறப்படாத எதிர்பார்க்கப்படும் எதிர்கால கடன் இழப்புகள் நீங்கலாக). உத்தேச எதிர்கால காசுப் பாய்ச்சலின் தற்போதையப் பெறுமதி நிதிச்சொத்தின் ஆரம்ப பயனுறுதியான வட்டி வீதத்தில் கழிவாக்கப்படுகின்றது. கூட்டுத்தாபனம் ஒவ்வொரு கடன் வகுதிக்குமான குறித்த சேத மதிப்பீட்டை மேற்கொள்கின்றது.

# 2017 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் பற்றிய குறிப்புகள்

## குறிப்பு - 01

ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - தேய்வடையக்கூடிய சொத்துகள்

### 2017

கிரயம்

| | 01.01.2017இல் உள்ளவாறு கிரயம் | இவ் ஆண்டின் கொள்வனவுகள் | இவ் ஆண்டின் கையுதிர்ப்பு | 31.12.2017இல் உள்ளவாறு மீதி | சேதமடைந்தவை மற்றும் பாவிக்காதவற்றுக்கான சீராக்கம் (குறிப்பு-03) | 31.12.2017இல் சேதமடைந்தவை மற்றும் பாவிக்காதவற்றுக்கான சீராக்கத்தின் பின் மீதி |
|---|---|---|---|---|---|---|
| **தேய்வடையக்கூடிய சொத்துகள்** | | | | | | |
| நிலக்காட்சியமைப்புச் செலவு | 6,113,388 | - | - | 6,113,388 | - | 6,113,388 |
| காணி | 23,214,262 | 26,257,656 | - | 49,471,918 | - | 49,471,918 |
| கட்டிடம் | 395,490,614 | 66,169,293 | - | 461,659,907 | - | 461,659,907 |
| பொறிகளும் இயந்திரங்களும் | 950,838,612 | 1,129,132 | (93,800) | 951,873,944 | (31,688,139) | 920,185,805 |
| மோட்டார் வாகனங்கள் | 89,021,800 | - | | 89,021,800 | - | 89,021,800 |
| மோட்டார் சைக்கிள் | 298,640 | (0) | - | 298,640 | - | 298,640 |
| உபகரணங்கள் | 141,168,379 | 9,067,400 | - | 150,235,779 | (22,898,172) | 127,337,607 |
| கணனி உதிரிப்பாகங்கள் | 12,853,261 | 6,250,795 | - | 19,104,056 | (610,410) | 18,493,647 |
| தளபாட பொருத்தனைகள் உபகரணங்கள் | 26,584,254 | 676,098 | - | 27,260,352 | (511,373) | 26,748,979 |
| துவிச்சக்கர வண்டிகள் மற்றும் வண்டிகள் | 31,987 | 0 | - | 31,987 | - | 31,987 |
| கருவிகள் | 7,840,355 | (0) | - | 7,840,355 | (1,080,825) | 6,759,530 |
| **முழுமையாகத் தேய்ந்த சொத்துகள்** | | | | | | |
| நூலக நூல்கள் | 2,499,042 | - | - | 2,499,042 | - | 2,499,042 |
| வாகனம் நிறுத்தும் கொட்டில் | 1,170,063 | - | - | 1,170,063 | - | 1,170,063 |
| சொத்துகளின் மொத்தப் பெறுமதி | **1,657,124,656** | **109,550,375** | **(93,800)** | **1,766,581,231** | **(56,788,918)** | **1,709,792,313** |

தேய்வு

| | 01.01.2017இல் உள்ளவாறு திரண்ட தேய்வு | ஆண்டுக்கான தேய்வு | கையுதிர்ப்பு தொடர்பாக திரண்ட தேய்வு | சேதமடைந்தவை மற்றும் பாவிக்காதவற்றுக்கான சீராக்கம் | 31.12.2017இல் உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|---|
| **தேய்வடையக்கூடிய சொத்துகள்** | | | | | |
| நிலக்காட்சியமைப்புச் செலவு | 1,858,226 | 60,788 | - | - | 1,919,014 |
| காணி | - | - | - | - | - |
| கட்டிடம் | 189,566,201 | 26,573,183 | - | - | 216,139,384 |
| பொறிகளும் இயந்திரங்களும் | 428,731,194 | 65,103,005 | (71,845) | (279,274) | 493,483,080 |
| மோட்டார் வாகனங்கள் | 45,009,417 | 6,084,260 | - | - | 51,093,677 |
| மோட்டார் சைக்கிள் | 218,980 | 52,993 | - | - | 271,972 |
| உபகரணங்கள் | 102,403,615 | 3,344,428 | - | (146,195) | 105,601,848 |
| கணனி உதிரிப்பாகங்கள் | 8,660,561 | 1,467,623 | - | (20,937) | 10,107,247 |
| தளபாட பொருத்தனைகள் உபகரணங்கள் | 16,856,952 | 2,094,521 | - | (29,328) | 18,922,146 |
| துவிச்சக்கர வண்டிகள் மற்றும் வண்டிகள் | 28,788 | 3,199 | - | - | 31,987 |
| கருவிகள் | 5,476,368 | 301,268 | - | (100) | 5,777,536 |
| **முழுமையாகத் தேய்ந்த சொத்துகள்** | | | | | |
| நூலக நூல்கள் | 2,499,041 | - | - | - | 2,499,041 |
| வாகனம் நிறுத்தும் கொட்டில் | 1,170,063 | - | - | - | 1,170,063 |
| மொத்தம் | **802,479,405** | **105,085,269** | **(71,845)** | **(475,833)** | **907,016,995** |

குறைத்து எழுதிய பெறுமதி

| விபரம் | 31.12.2016இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| **தேய்வடையக்கூடிய சொத்துகள்** | |
| நிலக்காட்சியமைப்புச் செலவு | 4,194,374 |
| காணி | 49,471,918 |
| கட்டிடம் | 245,520,523 |
| பொறிகளும் இயந்திரங்களும் | 426,702,725 |
| மோட்டார் வாகனங்கள் | 37,928,123 |
| மோட்டார் சைக்கிள் | 26,667 |
| உபகரணங்கள் | 21,735,759 |
| கணனி உதிரிப்பாகங்கள் | 8,386,399 |
| தளபாட பொருத்தனைகள் உபகரணங்கள் | 7,826,833 |
| துவிச்சக்கர வண்டிகள் மற்றும் வண்டிகள் | 0 |
| கருவிகள் | 981,993 |
| **முழுமையாகத் தேய்ந்த சொத்துகள்** | |
| நூலக நூல்கள் | - |
| வாகனம் நிறுத்தும் கொட்டில் | - |
| **மொத்தம்** | 802,775,316 |

### 2016

கிரயம்

| | 01.01.2016இல் உள்ளவாறு கிரயம் | இவ் ஆண்டின் கொள்வனவுகள் | இவ் ஆண்டின் கையுதிர்ப்பு | 31.12.2016இல் உள்ளவாறு மீதி | சேதமடைந்தவை மற்றும் பாவிக்காதவற்றுக்கான சீராக்கம் (குறிப்பு-03) | 31.12.2016இல் சேதமடைந்தவை மற்றும் பாவிக்காதவற்றுக்கான சீராக்கத்தின் பின் மீதி |
|---|---|---|---|---|---|---|
| **தேய்வடையக்கூடிய சொத்துகள்** | | | | | | |
| நிலக்காட்சியமைப்புச் செலவு | 6,113,388 | - | - | 6,113,388 | - | 6,113,388 |
| காணி | 23,214,262 | - | - | 23,214,262 | - | 23,214,262 |
| கட்டிடம் | 386,762,540 | 8,728,074 | - | 395,490,614 | - | 395,490,614 |
| பொறிகளும் இயந்திரங்களும் | 826,156,709 | 124,681,903 | - | 950,838,612 | (31,294,389) | 919,544,222 |
| மோட்டார் வாகனங்கள் | 85,771,800 | 5,950,000 | (2,700,000) | 89,021,800 | - | 89,021,800 |
| மோட்டார் சைக்கிள் | 298,640 | - | - | 298,640 | - | 298,640 |
| உபகரணங்கள் | 136,965,700 | 4,213,730 | (11,050) | 141,168,379 | (22,691,337) | 118,477,043 |
| கணனி உதிரிப்பாகங்கள் | 9,789,553 | 3,063,708 | - | 12,853,261 | (487,105) | 12,366,156 |
| தளபாட பொருத்தனைகள் உபகரணங்கள் | 25,082,488 | 1,501,765 | - | 26,584,254 | (434,628) | 26,149,626 |
| துவிச்சக்கர வண்டிகள் மற்றும் வண்டிகள் | 31,987 | - | - | 31,987 | - | 31,987 |
| கருவிகள் | 7,840,355 | - | - | 7,840,355 | (1,080,725) | 6,759,630 |
| **முழுமையாகத் தேய்ந்த சொத்துகள்** | | | | | | |
| நூலக நூல்கள் | 2,499,042 | - | - | 2,499,042 | - | 2,499,042 |
| வாகனம் நிறுத்தும் கொட்டில் | 1,170,063 | - | - | 1,170,063 | - | 1,170,063 |
| சொத்துகளின் மொத்தப் பெறுமதி | **1,511,696,526** | **148,139,180** | **(2,711,050)** | **1,657,124,656** | **(55,988,183)** | **1,601,136,473** |

தேய்வு

| | 01.01.2017இல் உள்ளவாறு திரண்ட தேய்வு | ஆண்டுக்கான தேய்வு | கையுதிர்ப்பு தொடர்பாக திரண்ட தேய்வு | சேதமடைந்தவை மற்றும் பாவிக்காதவற்றுக்கான சீராக்கம் | 31.12.2017இல் உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|---|
| **தேய்வடையக்கூடிய சொத்துகள்** | | | | | |
| நிலக்காட்சியமைப்புச் செலவு | 1,796,474 | 61,751 | - | - | 1,858,226 |
| காணி | - | - | - | - | - |
| கட்டிடம் | 164,361,639 | 25,204,561 | - | - | 189,566,201 |
| பொறிகளும் இயந்திரங்களும் | 364,258,682 | 67,218,178 | - | (2,745,666) | 428,731,194 |
| மோட்டார் வாகனங்கள் | 39,826,146 | 7,774,148 | (2,590,877) | - | 45,009,417 |
| மோட்டார் சைக்கிள் | 165,986 | 52,993 | - | - | 218,980 |
| உபகரணங்கள் | 97,912,453 | 5,827,666 | (11,050) | (1,325,454) | 102,403,615 |
| கணனி உதிரிப்பாகங்கள் | 7,770,781 | 986,410 | - | (96,630) | 8,660,561 |
| தளபாட பொருத்தனைகள் உபகரணங்கள் | 14,068,679 | 2,867,592 | - | (79,319) | 16,856,952 |
| துவிச்சக்கர வண்டிகள் மற்றும் வண்டிகள் | 23,990 | 4,798 | - | - | 28,788 |
| கருவிகள் | 5,178,748 | 302,870 | - | (5,250) | 5,476,368 |
| **முழுமையாகத் தேய்ந்த சொத்துகள்** | | | | | |
| நூலக நூல்கள் | 2,499,041 | - | - | - | 2,499,041 |
| வாகனம் நிறுத்தும் கொட்டில் | 1,170,063 | - | - | - | 1,170,063 |
| மொத்தம் | **699,032,682** | **110,300,969** | **(2,601,927)** | **(4,252,319)** | **802,479,405** |

குறைத்து எழுதிய பெறுமதி

| விபரம் | 31.12.2016இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| **தேய்வடையக்கூடிய சொத்துகள்** | |
| நிலக்காட்சியமைப்புச் செலவு | 4,255,162 |
| காணி | 23,214,262 |
| கட்டிடம் | 205,924,413 |
| பொறிகளும் இயந்திரங்களும் | 490,813,028 |
| மோட்டார் வாகனங்கள் | 44,012,383 |
| மோட்டார் சைக்கிள் | 79,660 |
| உபகரணங்கள் | 16,073,428 |
| கணனி உதிரிப்பாகங்கள் | 3,705,595 |
| தளபாட பொருத்தனைகள் உபகரணங்கள் | 9,292,674 |
| துவிச்சக்கர வண்டிகள் மற்றும் வண்டிகள் | 3,199 |
| கருவிகள் | 1,283,262 |
| **முழுமையாகத் தேய்ந்த சொத்துகள்** | |
| நூலக நூல்கள் | - |
| வாகனம் நிறுத்தும் கொட்டில் | - |
| **மொத்தம்** | 798,657,068 |

# குறிப்பு - 02

## கட்புலனாகாச் சொத்துகள்

### 2017

**கிரயம்**

| விபரம் | 01.01.2017 இல் உள்ளவாறு கிரயம் | இவ் ஆண்டின் கொள்வனவுகள் | இவ் ஆண்டின் கையுதிர்ப்பு | 31.12.2017 இல் உள்ளவாறு மீதி | சேதமடைந்தவை மற்றும் பாவிக்காதவற்றுக்கான சீராக்கம் (குறிப்பு-03) | 31.12.2016இல் சேதமடைந்தவை மற்றும் பாவிக்காதவற்றுக்கான சீராக்கத்தின் பின் மீதி |
|---|---|---|---|---|---|---|
| கணனி மென்பொருள் | 16,786,901 | 1,129,673 | - | 17,916,574 | (67,500) | 17,849,074 |
| சொத்துகளின் மொத்தப் பெறுமதி | **16,786,901** | **1,129,673** | **-** | **17,916,574** | **(67,500)** | **17,849,074** |

**தேய்வு**

| விபரம் | 01.01.2017 இல் உள்ளவாறு திரண்ட தேய்வு | ஆண்டுக்கான தேய்வு | கையுதிர்ப்பு தொடர்பாக திரண்ட தேய்வு | சேதமடைந்தவை மற்றும் பாவிக்காதவற்றுக்கான சீராக்கம் | 31.12.2017 இல் உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|---|
| கணனி மென்பொருள் | 15,590,621 | 537,501 | - | - | 16,128,123 |
| **மொத்தம்** | **15,590,621** | **537,501** | **-** | | **16,128,123** |

**குறைத்து எழுதிய பெறுமதி**

| விபரம் | 31.12.2017 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| கணனி மென்பொருள் | 1,720,952 |
| மொத்தம் | **1,720,952** |

**குறிப்பு - 03**

**சேதமடைந்தவை மற்றும் பாவனைக்குட்படாதவற்றுக்கான சீராக்கம்** 2017

| விபரம் | 01.01.2017 இல் உள்ளவாறு மீதி | இவ் ஆண்டில் அடையாளம் காணப்பட்ட சேதமடைந்தவை மற்றும் பாவிக்காதவை | இவ் ஆண்டின் கையுதிர்ப்பு | 31.12.2017 இல் உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|
| பொறிகளும் இயந்திரங்களும் | 31,294,389 | 393,750 | - | 31,688,139 |
| உபகரணங்கள் | 22,691,337 | 206,835 | - | 22,898,172 |
| கணனி உதிரிப்பாகங்கள் | 487,105 | 123,305 | - | 610,410 |
| தளபாட பொருத்தனைகள் உபகரணங்கள் | 434,628 | 76,745 | - | 511,373 |
| கருவிகள் | 1,080,725 | 100 | - | 1,080,825 |
| கணனி மென்பொருள் | 67,500 | - | - | 67,500 |
| | 56,055,683 | 800,735 | - | 56,856,418 |

**குறிப்பு - 04**

**குத்தகை முற்கொடுப்பனவு**

**கிரயம்** 2017

| விபரம் | 01.01.2017 இல் உள்ளவாறு கிரயம் | இவ் ஆண்டின் கொள்வனவுகள் | இவ் ஆண்டின் கையுதிர்ப்பு | 31.12.2017 இல் உள்ளவாறு கிரயம் |
|---|---|---|---|---|
| குத்தகைக் காணி | 4,920,845 | - | - | 4,920,845 |
| **சொத்துகளின் மொத்தப் பெறுமதி** | **4,920,845** | **-** | **-** | **4,920,845** |

**தேய்வு**

| ப்பைசா | 2017"01"01னுாமப ரைங;கஃ் டயனா | த¾ஜா லைன டயனா | நெலநசு டளரி; லைன ரைங;கஃ் டயனா | 2017.12.31 னுாமப கலுயனா |
|---|---|---|---|---|
| குத்தகைக் காணி | 1,491,636 | 48,988 | - | 1,540,624 |
| **மொத்தம்** | **1,491,636** | **48,988** | **-** | **1,540,624** |

**குறைத்து எழுதிய பெறுமதி**

| விபரம் | 31.12.2017 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| குத்தகைக் காணி | 3,380,221 |
| **மொத்தம்** | **3,380,221** |

### 2016

**கிரயம்**

| விபரம் | 01.01.2016இல் உள்ளவாறு கிரயம் | இவ் ஆண்டின் கொள்வனவுகள் | இவ் ஆண்டின் கையுதிர்ப்பு | 31.12.2016இல் உள்ளவாறு மீதி | சேதமடைந்தவை மற்றும் பாவிக்காதவற்றுக்கான சீராக்கம் (குறிப்பு-03) | 31.12.2016இல் சேதமடைந்தவை மற்றும் பாவிக்காதவற்றுக்கான சீராக்கத்தின் பின் மீதி |
|---|---|---|---|---|---|---|
| கணனி மென்பொருள் | 16,417,961 | 368,940 | - | 16,786,901 | (67,500) | 16,719,401 |
| சொத்துகளின் மொத்தப் பெறுமதி | **16,417,961** | **368,940** | **-** | **16,786,901** | **(67,500)** | **16,719,401** |

**தேய்வு**

| விபரம் | 01.01.2016 இல் உள்ளவாறு திரண்ட தேய்வு | ஆண்டுக்கான தேய்வு | கையுதிர்ப்பு தொடர்பாக திரண்ட தேய்வு | சேதமடைந்தவை மற்றும் பாவிக்காதவற்றுக்கான சீராக்கம் | 31.12.2016இல் உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|---|
| கணனி மென்பொருள் | 15,054,904 | 535,717 | - | - | 15,590,621 |
| **மொத்தம்** | **15,054,904** | **535,717** | **-** | **-** | **15,590,621** |

**குறைத்து எழுதிய பெறுமதி**

| விபரம் | 31.12.2016 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| கணனி மென்பொருள் | 1,128,780 |
| மொத்தம் | **1,128,780** |

**குறிப்பு - 03**

**சேதமடைந்தவை மற்றும் பாவனைக்குட்படாதவற்றுக்கான சீராக்கம்** 2016

| விபரம் | 01.01.2016 இல் உள்ளவாறு கிரயம் | இவ் ஆண்டின் கொள்வனவுகள் | இவ் ஆண்டின் கையுதிர்ப்பு | 31.12.2016 இல் உள்ளவாறு கிரயம் |
|---|---|---|---|---|
| பொறிகளும் இயந்திரங்களும் | 27,116,800 | 4,177,589 | - | 31,294,389 |
| உபகரணங்கள் | 21,250,477 | 1,440,860 | - | 22,691,337 |
| கணனி உதிரிப்பாகங்கள் | 390,475 | 96,630 | - | 487,105 |
| தளபாட பொருத்தனைகள் உபகரணங்கள் | 270,159 | 164,469 | - | 434,628 |
| கருவிகள் | 1,075,475 | 5,250 | - | 1,080,725 |
| கணனி மென்பொருள் | 67,500 | - | - | 67,500 |
| | 50,170,886 | 5,884,797 | - | 56,055,683 |

**குறிப்பு - 04**

**குத்தகை முற்கொடுப்பனவு**

**கிரயம்** 2016

| விபரம் | 01.01.2016இல் உள்ளவாறு கிரயம் | இவ் ஆண்டின் கொள்வனவுகள் | இவ் ஆண்டின் கையுதிர்ப்பு | 31.12.2016 இல் உள்ளவாறு கிரயம் |
|---|---|---|---|---|
| குத்தகைக் காணி | 4,920,845 | - | - | 4,920,845 |
| **சொத்துகளின் மொத்தப் பெறுமதி** | **4,920,845** | **-** | **-** | **4,920,845** |

**தேய்வு**

| tpguk; | 01.01.2016இல் உள்ளவாறு திரண்ட தேய்வு | ஆண்டுக்கான தேய்வு | கையுதிர்ப்பு தொடர்பாக திரண்ட தேய்வு | 31.12.2016 இல் உள்ளவாறு கிரயம் |
|---|---|---|---|---|
| குத்தகைக் காணி | 1,441,931 | 49,706 | - | 1,491,636 |
| **மொத்தம்** | **1,441,931** | **49,706** | **-** | **1,491,636** |

**குறைத்து எழுதிய பெறுமதி**

| விபரம் | 31.12.2016 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| குத்தகைக் காணி | 3,429,209 |
| **மொத்தம்** | **3,429,209** |

**குறிப்பு - 05**

| ஏனைய நடைமுறையல்லாத சொத்துகள் | 31.12.2017 இல் உள்ளவாறு | 31.12.2016 இல் உள்ளவாறு |
|---|---|---|
| வைப்புகள் | 1,070,000 | 220,000 |
| பிணைய வைப்புகள் | 232,233 | 218,094 |
| | **1,302,233** | **438,094** |

**குறிப்பு - 06**

| பொருட்பதிவேடு | 31.12.2017 இல் உள்ளவாறு | 31.12.2016 இல் உள்ளவாறு |
|---|---|---|
| மூலப்பொருட்கள் | 449,694,018 | 235,929,691 |
| பொதியிடும் பொருட்கள் | 38,572,834 | 30,408,378 |
| முடிவுப் பொருட்கள் | 155,543,481 | 283,819,001 |
| நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை | 29,215,037 | 72,657,306 |
| வழிமாற்றற் சரக்குகள் - மூ/பொ | 6,427,489 | 16,676,440 |
| மூலப்பொருள் கடன் | 581,594 | 31,827 |
| இருப்புகள் - உருவாக்கல் ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் | 1,710,675 | 2,013,309 |
| உதிரிப் பாகங்கள் - பொறிகளும் இயந்திரங்களும் | 115,331,036 | 108,339,758 |
| எரிபொருள் மற்றும் உராய்வுநீக்கிகள் | 1,036,451 | 868,302 |
| பொருட்பதிவேடு - காகிதாதிகள் | 999,909 | 1,128,989 |
| | **799,112,524** | **751,873,001** |

**குறிப்பு - 07**

| வியாபாரக் கடன்பட்டோரும் பெறவேண்டியவைகளும் | | 31.12.2017 இல் உள்ளவாறு | 31.12.2016 இல் உள்ளவாறு |
|---|---|---|---|
| கடன்பட்டோர் - SPC | | 2,298,338 | - |
| கடன்பட்டோர் - DHS | | 316,077,817 | 6,860,212 |
| கடன்பட்டோர் - வினியோகங்கள் | | 69,522,656 | 90,119,524 |
| இடருதவிக் கடன்கள் | | 29,778,193 | 22,905,146 |
| கிடைக்க வேண்டியவை | குறிப்பு 28 | 1,246,780 | 7,646,356 |
| துவிசக்கர வண்டிக் கடன்கள் | | 1,821,765 | 1,964,306 |
| ஊழியர் கடன் | | 1,450,033 | - |
| பொருளாதார சேவைக்கட்டணம்-0.5% (Adv.Pay. of Income Tax) | | 11,288,784 | 8,655,104 |
| சம்பள முற்பணம் | | - | 4,000 |
| விழா முற்பணம் | | 531,000 | 541,000 |
| இறக்குமதி வைப்பு மீளளிப்புகள் | | 508,500 | 354,301 |
| | | **434,523,866** | **139,049,949** |

## குறிப்பு - 08

| முற்கொடுப்பனவுகள் | 31.12.2017 இல் உள்ளவாறு | 31.12.2016 இல் உள்ளவாறு |
|---|---|---|
| முற்பணம் கொடுப்பனவுகள் | 624,445 | 1,835,700 |
| முற்பணம் கொடுப்பனவுகள் - இயந்திரங்களும் உதிரிப்பாகங்களும் | 10,226,313 | 33,705 |
| முற்கொடுப்பனவுகள் | 1,876,120 | 2,894,993 |
| பணியாளர்களுக்கான முற்கொடுப்பனவுச் செலவு | 4,794,121 | 3,971,170 |
| | **17,520,999** | **8,735,569** |

## குறிப்பு - 09

| ஏனைய நிதியியல் சொத்துகள் | 31.12.2017 இல் உள்ளவாறு | 31.12.2016 இல் உள்ளவாறு |
|---|---|---|
| திறைசேரி உண்டியல்கள் | 843,731,264 | 1,144,738,018 |
| தேசிய சேமிப்பு வங்கியில் திறைசேரி உண்டியல்கள் | 61,306,765 | 10,845,063 |
| நம்பிக்கை நிதியங்களில் முதலீடுகள் | 21,423,039 | 20,171,345 |
| | **926,461,067** | **1,175,754,426** |

## குறிப்பு - 10

| வங்கியிலும் கையிலும் உள்ள காசு | 31.12.2017 இல் உள்ளவாறு | 31.12.2016 இல் உள்ளவாறு |
|---|---|---|
| இலங்கை வங்கி - இரத்மலானை கிளை | 41,084 | 54,043 |
| இலங்கை வங்கி - தொகுதிக் கிளை | 1,228,266 | 971,147 |
| மக்கள் வங்கி - இரத்மலானை கிளை | 40,698 | 249,278 |
| மக்கள் வங்கி - தொகுதிக் கிளை | 11,634 | 309,816 |
| கையிலுள்ள காசு | 36,367 | 28,895 |
| சில்லறைக் காசு | 16,516 | 18,302 |
| | **1,374,564** | **1,631,481** |

## குறிப்பு - 11

### சொல்லப்பட்ட மூலதனம்

சொல்லப்பட்ட மூலதனம் ஜப்பானிய யென் 2.564 மில்லியனை ரூபா 0.186 வீதத்தில் மாற்றப்பட்ட ரூபா 476,904,000.00 மற்றும் பொதுத் திறைசேரியினால் பங்களிப்புச் செய்யப்பட்ட ரூபா 208,375,000.00 மற்றும் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திடமிருந்து மாற்றப்பட்ட ரூபா 4,800,000.00 பெறுமதியான காணி ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

## குறிப்பு - 12

| பிற்போடப்பட்ட வரிப்பொறுப்பு | 31.12.2017 இல் உள்ளவாறு | 31.12.2016 இல் உள்ளவாறு |
|---|---|---|
| ஆண்டின் ஆரம்பத்தில் மீதி | 133,251,496 | 118,537,632 |
| இவ்வாண்டில் தாமதித்த வரியாக கட்டணம்/(திருப்பல்) | 2,072,361 | 14,713,865 |
| | **135,323,858** | **133,251,496** |

## குறிப்பு- 13

| வியாபாரமும் ஏனைய செலுத்தவேண்டியவைகளும் | 31.12.2017 இல் உள்ளவாறு | 31.12.2016 இல் உள்ளவாறு |
|---|---|---|
| கடன்பட்டோர் கட்டுப்பாடு - பொதியிடும் சாதனங்கள் | 3,426,222 | 7,751,662 |
| கடன்பட்டோர் கட்டுப்பாடு - மூலப்பொருட்கள் | 23,420,969 | 7,590,666 |
| கடன்பட்டோர் கட்டுப்பாடு - காகிதாதிகள் | 1,549,446 | 792,244 |
| கடன்பட்டோர் கட்டுப்பாடு - உபகரணங்களும் பொறிகளும் | 198,538 | 6,250,353 |
| கடன்பட்டோர் கட்டுப்பாடு - இரசாயனப் பொருட்கள் | 210,016 | 1,381,226 |
| கடன்பட்டோர் கட்டுப்பாடு - நலனோம்பல் | - | 8,000 |
| கடன்பட்டோர் கட்டுப்பாடு - பொது | 17,312,272 | 13,187,480 |
| கடன்பட்டோர் கட்டுப்பாடு - வங்கி | 34,661,676 | 25,459,755 |
| கடன்பட்டோர் கட்டுப்பாடு - ஊழியர்கள் | 2,770,210 | 2,651,168 |
| கடன்பட்டோர் கட்டுப்பாடு - சேவைகள் | 4,101,901 | 4,171,437 |
| கடன்பட்டோர் கட்டுப்பாடு - ஏனைய நிதி உதவிகள் | - | 18,614,927 |
| கடன்பட்டோர் கட்டுப்பாடு - கூட்டு முயற்சி | 18,187,600 | - |
| வைப்பாளர்களுக்கு - காசாளர்களுக்கு செலுத்தவேண்டியவை | 11,274 | 10,823 |
| களஞ்சிய உதவியாளர்களுக்கு செலுத்தவேண்டியவை | 220,959 | 207,271 |
| விலைகூறல் முறிகள் செலுத்த வேண்டியவை | 6,205,643 | 7,770,028 |
| செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரி 1/3 | - | 633,049 |
| செலுத்த வேண்டிய PAYE வரி | (166,155) | (41,199) |
| செலுத்த வேண்டிய E.P.F. & E.T.F. - 25% | - | 126,632 |
| மூலப்பொருட்களுக்காக பெறப்பட்ட கடன் | 180,802 | - |
| | **112,291,372** | **96,565,523** |

### குறிப்பு- 14

| வருமானம் | 2017 ஆம் ஆண்டுக்கானது | 2016 ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|
| விற்பனை - அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் | 10,774,300 | - |
| விற்பனை - சுதேச சேவைகள் திணைக்களம் | 2,484,217,605 | 1,901,261,853 |
| விற்பனை - விநியோகஸ்தர்கள் | 679,620,759 | 533,246,626 |
| | **3,174,612,664** | **2,434,508,479** |

### குறிப்பு - 15

| விற்பனைச் செலவுகள் | 2017 ஆம் ஆண்டுக்கானது | 2016 ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|
| விற்பனைச் செலவு - அ.ம.கூ. - புதியது | 8,172,816 | - |
| விற்பனைச் செலவு - அ.ம.உ.கூ. - புதியது | 407,543,593 | 335,576,654 |
| விற்பனைச் செலவு - சு.சே.தி - புதியது | 1,980,764,645 | 1,348,813,994 |
| விற்பனைச் செலவு - கடை - புதியது | 210,341 | 315,180 |
| விற்பனைச் செலவு - மூலப்பொருட்கள் | 581,873 | 803,566 |
| விற்பனைச் செலவு - விலைப்பட்டியல் வேறுபாடு | (5,604) | - |
| முடிவுப்பொருள் சீராக்கம் - இருப்பெடுப்பு | 3536 | - |
| முடிவுப்பொருள் சீராக்கம் - அ.ம.கூ | 269,412,465 | 202,746,756 |
| உற்பத்திச் செலவுகள் குறிப்பு - 23 | **2,666,683,665** | **1,888,256,150** |

### குறிப்பு - 16

| ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள் | 2017 ஆம் ஆண்டுக்கானது | 2016 ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|
| நானாவித வருமானம் குறிப்பு - 16 அ | 20,711,713 | 20,316,413 |
| முடிவுப் பொருட்கள், மூ.பொ. விற்பனை | 276,823 | 394,034 |
| ஐயக்கடன்களுக்கான மிகை ஏற்பாடு | - | 570,257 |
| கையுதிர்த்தல் காரணமாக இலபம் /நட்டம் | - | 4,909,777 |
| | **20,988,536** | **26,190,482** |

### குறிப்பு - 16 அ

| ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள் | 2017 ஆம் ஆண்டுக்கானது | 2016 ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|
| துணுக்கு விற்பனை | 1,314,495 | 3,261,587 |
| விநியோகத்தர்களை பதிவு செய்தல் | 214,000 | 233,500 |
| ஒப்பந்த ஆவண கட்டணம் | 279,882 | 464,800 |
| வங்கியிடமிருந்து கோரிய உத்திரவாதம் | - | 4,473,719 |
| இரண்டு வருடங்களுக்கு மேல் செலுத்தப்படாத விலைகூறல் முறிகள் | - | 7,525,587 |
| கோரப்பட்ட தாமதமான கட்டணங்கள் | 12,971,037 | - |
| உரிமை கோரப்படாத பிடிமானம் | 4,952,389 | 4,187,151 |
| பொது | 979,910 | 170,070 |
| | **20,711,713** | **20,316,413** |

## குறிப்பு - 17

| நிர்வாகச் செலவுகள் | | 2017 ஆம் ஆண்டுக்கானது | 2016 ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|---|
| சம்பளங்களும் வேதனங்களும் | | 29,765,783 | 24,097,230 |
| அமைய சம்பளங்கள் | | 13,104,068 | 13,097,099 |
| வாழ்க்கைச் செலவு | | 6,609,447 | 5,431,538 |
| போக்குவரத்து ஊக்குவிப்பு | | 7,663,336 | 3,948,912 |
| E.P.F. & E.T.F. - 15% | | 5,556,076 | 6,444,008 |
| மேலதிக நேர வேலை | | 8,138,628 | 4,816,754 |
| வருகை ஊக்குவிப்பு | | 4,469,285 | 3,149,274 |
| செயலாற்ற ஊக்குவிப்பு | | 8,069,379 | 5,598,191 |
| வருடாந்த மிகை ஊதியம் | | 1,442,728 | 1,145,581 |
| நடைமுறை சேவை செலவு | | 855,428 | 1,387,752 |
| பணியாளர் வட்டி செலவு | | 1,286,664 | 1,722,125 |
| சுழற்சி முறை வேலை ஊக்குவிப்பு | | 201,206 | 128,150 |
| பணியாளர் செலவு | | 795,841 | 218,459 |
| பணியாளர் மருத்துவச் செலவு | | 1,458,535 | 2,646,857 |
| வீடமைப்புக் கடன் மீளளிப்பு | | 2,429,940 | 1,677,357 |
| மேற்பார்வையாளர் கொடுப்பனவு | | 143,806 | 12,000 |
| கடினமான வேலை நிலை கொடுப்பனவு | | 179,508 | - |
| தொழில்முறை கொடுப்பனவு | | 192,000 | - |
| விசேட பதிற்கடமை ஊக்குவிப்பு | | 162,000 | 217,931 |
| ஓய்வூதிய ஆதாயம் | | - | 58,000 |
| தொலைபேசிப் பட்டியல் மீளளிப்பு | | 539,048 | 556,853 |
| சுகாதாரக் காப்புறுதி தவணைக் கட்டணம் | குறிப்பு -27 | 209,109 | 2,577,917 |
| பணியாளர் நலனோம்பல் | | 9,438,124 | 6,737,015 |
| பணியாளர் பயிற்சி | | 5,005,516 | 2,335,259 |
| சீருடைகளும் சப்பாத்துகளும் | | 733,761 | 416,909 |
| போக்குவரத்து - வெளிநாடு | | 13,282,712 | 9,275,865 |
| பணிப்பாளர்களுக்கான கட்டணம் | | 230,000 | 368,000 |
| ஏனைய ஊக்குவிப்புகள் | | 2,359,580 | 1,543,300 |
| வீதங்களும் வரிகளும் | | 276,231 | 276,231 |
| மின்சாரம் | | 10,176,759 | 11,889,330 |
| நீர் கட்டணங்கள் | | 728,539 | 679,142 |
| காப்புறுதி - பொது | | 79,650 | 145,158 |
| காப்புறுதி - வாகனங்கள் | | 1,181,244 | 1,116,048 |
| மோட்டார் வாகனம் திருத்தமும் பேணுதலும் | | 3,876,145 | 4,110,199 |
| வாகனங்களுக்கான எரிபொருள், உரா.நீக்கி | | 2,744,585 | 2,885,378 |
| கருவிகள் பராமரிப்பு | | 1,237,632 | 770,613 |
| பராமரிப்பு - நிர்வாகம் | | 2,571,917 | 3,373,539 |
| தேய்வு | | 16,374,644 | 18,441,808 |
| போக்குவரத்துக் கட்டணங்கள் | | 1,028,774 | 730,547 |
| தபால், தொலைநகல் | | 330,484 | 290,147 |
| தொலைபேசிக் கட்டணங்கள் | | 1,224,192 | 1,049,156 |
| பாதுகாப்புக் கட்டணங்கள் | | 1,544,737 | 993,552 |
| நன்கொடைகள் | | 9,468,973 | 619,803 |
| உரிமக் கட்டணம் - வாகனங்கள் | | 108,845 | 132,236 |
| உரிமக் கட்டணம் - மருந்துகள் | | 2,660,925 | 3,251,501 |
| உரிமக் கட்டணம் - ஏனையவை | | 745,410 | 6,161 |
| அச்சிடல், காகிதாதிகள் | | 2,979,426 | 1,992,543 |
| அலுவலகச் செலவு | | 319,934 | 146,849 |
| கணக்காய்வுக் கட்டணம் | | 611,097 | 640,625 |
| வாடகைக் கட்டணம் | | 12,753,602 | 4,480,611 |
| விளம்பரங்கள் | | 3,673,512 | 4,683,735 |
| சந்தா - பருவகால இதழ்கள் | | 262,095 | 273,647 |
| சட்ட, விசாரணைச் செலவுகள் | | 558,680 | 349,750 |
| தொழில்சார் கட்டணங்கள் | | 166,419 | 361,335 |
| கழியாட்டம் | | 1,135,510 | 756,779 |
| வருடாந்த சந்தா | | 52,500 | 40,000 |
| வருடாந்த மகாநாடு, கூட்டங்கள் | | 10,000 | 11,000 |
| முத்திரைக் கட்டணம் | | 42,350 | 41,975 |
| சேதமடைந்த பயன்படுத்தாத பொருள் செலவு | | 324,902 | 1,632,478 |
| பயிற்சி பள்ளியின் செலவுகள் - CTPPM | | 1,007,798 | - |
| காகிதாதிகள் சீராக்கம் - இருப்பெடுப்பு | | 67 | 8,339 |
| | | **204,579,086** | **165,788,553** |

## குறிப்பு - 18

| விற்பனை மற்றும் வினியோகச் செலவுகள் | 2017 ஆம் ஆண்டுக்கானது | 2016 ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|
| ஊக்குவிப்புக் கழிவுகள் | 24,701,981 | 15,642,548 |
| விற்பனை மேம்பாட்டுச் செலவுகள் | 38,092,942 | 32,735,666 |
| நிராகரித்த முலப்பொருட்களின் கிரயம் | 126,003 | 2,048 |
| 30வது ஆண்டு விழா | 4,709,477 | - |
| | **67,630,402** | **48,380,262** |

## குறிப்பு - 19

| ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள் | 2017 ஆம் ஆண்டுக்கானது | 2016 ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|
| வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 11,424,806 | 4,324,220 |
| இருப்பெடுப்பு சீராக்கம் - வ.திணைக்களம் | 2,821 | (144,934) |
| பரிமாற்ற நட்டம் | 498,900 | 318,143 |
| | **11,926,527** | **4,497,428** |

## குறிப்பு - 20

| நிதிச்செலவு | 2017 ஆம் ஆண்டுக்கானது | 2016 ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|
| வங்கிக் கட்டணங்கள் | 394,764 | 238,959 |
| வங்கி மேலதிகப்பற்று வட்டி | 11,328 | 2,000 |
| | **406,092** | **240,959** |

## குறிப்பு- 21

| நிதி வருமானம் | 2017 ஆம் ஆண்டுக்கானது | 2016 ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|
| பணியாளர் கடன் வட்டி | 986,470 | 836,586 |
| திறைசேரி உண்டியல் வட்டி | 73,534,273 | 85,783,178 |
| வட்டி வருமானம் - பணியாளர் கடன் | 2,880,351 | 1,009,515 |
| பயிற்சி பள்ளியின் கல்வி கட்டண வருமானம் - CTPPM | 206,000 | - |
| | **77,607,094** | **87,629,279** |

**குறிப்பு - 22**

| வருமான வரிச் செலவு | 2017 ஆம் ஆண்டுக்கானது | 2016 ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|
| நடைமுறை வரிச்செலவு குறிப்பு - 22அ | 81,019,139 | 112,684,115 |
| தாதித்த வரிச்செலவு குறிப்பு - 22ஆ | 2,072,361 | 14,713,865 |
| கருதப்பட்ட பங்கிலாப வரி | 14,983,082 | 17,120,193 |
| | **98,074,582** | **144,518,173** |

**குறிப்பு - 22 அ**

| நடைமுறை வரிச்செலவு | 2017 ஆம் ஆண்டுக்கானது | 2016 ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|
| ஆண்டுக்கான இலாபத்தின் வருமான வரி குறிப்பு 22அ (i) | 82,050,192 | 112,684,115 |
| வருமான வரிக்கான மிகை / குறை ஏற்பாடு | (1,031,053) | - |
| | **81,019,139** | **112,684,115** |

**குறிப்பு - 22 அ** (i)

| ஆண்டுக்கான இலாபத்தின் வருமான வரி | 2017 ஆம் ஆண்டுக்கானது | 2016 ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|
| வரிக்கு முந்திய இலாபம் | 321,982,521 | 441,164,887 |
| அனுமதிக்க முடியாத செலவுகள் | 124,056,791 | 130,936,087 |
| அனுமதிக்கக்கூடிய செலவுகள் | (131,993,120) | (145,148,228) |
| வரி விலக்களிப்பு வருமானம் | (73,534,273) | (85,783,178) |
| திறைசேரி உண்டியல் வட்டியிலிருந்து வரி வருமானம் | 81,704,748 | 95,314,642 |
| மதிப்பிடக்கூடிய வருமானம் | **322,216,667** | **436,484,210** |
| வரி விதிக்கக்கூடிய வருமானம் | **322,216,667** | **436,484,210** |
| வரி விதிக்கக்கூடிய வருமானத்தின் வரி வீதம் | 28% | 28% |
| வரி விதிக்கக்கூடிய வருமானத்திற்கான வருமான வரி | 90,220,667 | 122,215,579 |
| எண்ண நிலை வரி | (8,170,475) | (9,531,464) |
| மொத்த வருமான வரி | **82,050,192** | **112,684,115** |

**குறிப்பு - 22 ஆ**

| தாமதித்த வரி | 2017 ஆம் ஆண்டுக்கானது | 2016 ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|
| தாமதித்த வரிப் பொறுப்புகளில் தாமதித்த வரி | 146,863,646 | 144,692,969 |
| தாமதித்த வரி சொத்துகளில் தாமதித்த வரி | (11,539,788) | (11,441,473) |
| வருட இறுதியில் தாமதித்த வரிப்பொறுப்பு | 135,323,858 | 133,251,496 |
| வருட ஆரம்பத்தில் தாமதித்த வரிப்பொறுப்பு | 133,251,496 | 118,537,631 |
| இவ்வாண்டில் தாமதித்த வரியாக கட்டணம/(திரும்பல்) | **2,072,361** | **14,713,865** |

## குறிப்பு - 23

| நேரடி ஊழியம் (உற்பத்தி) | 2017 ஆம் ஆண்டுக்கானது | உபகுறிப்பு | 2016 ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|---|
| சம்பளங்களும் வேதனங்களும் | 6,098,836 | குறிப்பு 23 அ | 673,932 |
| அமய சம்பளங்கள் | 714,520 | குறிப்பு 23 அ | 165,777 |
| வாழ்க்கைச் செலவு | 2,671,253 | குறிப்பு 23 அ | 803,270 |
| போக்குவரத்து ஊக்குவிப்பு | 3,486,050 | குறிப்பு 23 அ | 421,469 |
| E.P.F. & E.T.F. - 15% | 3,429,875 | குறிப்பு 23 அ | 2,547,687 |
| மேலதிக நேர வேலை | 5,427,637 | குறிப்பு 23 அ | 1,797,901 |
| வருகை ஊக்குவிப்பு | 3,454,931 | குறிப்பு 23 அ | 1,358,711 |
| செயலாற்ற ஊக்குவிப்பு | 4,245,293 | குறிப்பு 23 அ | 5,207,544 |
| வருடாந்த மிகை ஊதியம் | 2,150,113 | | 1,871,914 |
| நடைமுறை சேவை செலவு | 1,018,451 | | 2,097,874 |
| ஊழியர் வட்டி செலவு | 1,548,027 | | 2,207,717 |
| சுழற்சி முறை வேலை ஊக்குவிப்பு | 2,160,646 | | 924,350 |
| பணியாளர் மருத்துவச் செலவு | 2,182,047 | | 1,689,176 |
| வீடமைப்புக் கடன் மீளளிப்பு | 5,525,703 | | 2,045,008 |
| மேலதிக மாதாந்தர ஊக்குவிப்பு | 259,000 | | 187,318 |
| மேற்பார்வையாளர் கொடுப்பனவு | 108,000 | | 9,000 |
| கடினமான வேலை நிலை கொடுப்பனவு | 3,315,937 | | - |
| தொழில்முறை கொடுப்பனவு | 48,000 | | - |
| ஓய்வுதிய கொடுப்பனவு | 240,000 | | - |
| பணியாளர் செலவு | 1,217,812 | | 432,678 |
| | **49,302,129** | | **24,441,327** |
| **நேரடியற்ற உற்பத்திச் செலவு (தரக்கட்டுப்பாடுஇ உ.ஆ.அஇ திட்டமிடல், பராமரிப்பு)** | | | |
| சம்பளங்களும் வேதனங்களும் | 24,901,275 | குறிப்பு 23 அ | 11,659,751 |
| அமய சம்பளங்கள் | 1,717,681 | | 481,822 |
| வாழ்க்கைச் செலவு | 7,406,654 | | 6,119,979 |
| போக்குவரத்து ஊக்குவிப்பு | 4,833,619 | | 3,896,194 |
| E.P.F. & E.T.F. - 15% | 6,074,664 | | 7,123,770 |
| மேலதிக நேர வேலை | 7,270,687 | | 3,218,605 |
| வருகை ஊக்குவிப்பு | 5,252,981 | | 4,336,108 |
| செயலாற்ற ஊக்குவிப்பு | 9,860,040 | | 5,900,362 |
| வருடாந்த மிகை ஊதியம் | 1,636,439 | | 1,375,801 |
| நடைமுறை சேவை கிரயம் | 781,463 | | 1,543,342 |
| ஊழியர் வட்டி செலவு | 1,047,237 | | 1,516,963 |
| சுழற்சி முறை வேலை ஊக்குவிப்பு | 620,184 | | 351,450 |
| பணியாளர் மருத்துவச் செலவு | 1,597,258 | | 2,107,156 |
| வீடமைப்புக் கடன் மீளளிப்பு | 3,448,823 | | 2,301,680 |
| மேலதிக மாதாந்தர ஊக்குவிப்பு | 259,000 | | 187,318 |
| மேற்பார்வையாளர் கொடுப்பனவு | 213,097 | | 18,000 |
| கடினமான வேலை நிலை கொடுப்பனவு | 1,541,942 | | - |
| தொழில்முறை கொடுப்பனவு | 54,000 | | - |
| பணியாளர் செலவு | 866,698 | | 358,378 |
| விசேட பதிற்கடமை ஊக்குவிப்பு | 117,151 | | 67,428 |
| தொலைபேசிப் பட்டியல் மீளளிப்பு | 314,494 | | 299,647 |
| சுகாதார காப்புறுதித் திட்ட தவணைக் கட்டணம் குறிப்பு - 27 | 84,864 | | 6,555,255 |
| பணியாளர் நலனோம்பல் | 16,755,682 | குறிப்பு 23 அ | 10,787,391 |
| பணியாளர் பயிற்சி | 6,655,910 | | 1,862,511 |
| சீருடைகளும் சப்பாத்துகளும் | 1,508,316 | | 990,052 |
| நீர் கட்டணங்கள் | 475,563 | குறிப்பு 23 அ | 14,490 |
| வீதங்களும் வரிகளும் | 646,216 | | 359,764 |
| மின்சாரம் | 2,580,997 | குறிப்பு 23 அ | 15,842 |
| காப்புறுதி - பொது | 343,977 | குறிப்பு 23 அ | 600,535 |
| பாதுகாப்பு கட்டணம் - உற்பத்தி | 5,157,472 | குறிப்பு 23 அ | 4,535,159 |
| உபகரணங்கள் பராமரிப்பு | 1,448,003 | குறிப்பு 23 அ | 30,926 |
| பராமரிப்பு - உற்பத்தி | 2,832,580 | குறிப்பு 23 அ | 1,345,396 |
| தேய்வு | 89,297,112 | | 92,444,583 |
| போக்குவரத்துக் கட்டணங்கள் | 1,705,749 | | 1,613,171 |
| நுகர்வு - உதிரிப்பாகங்கள் | 1,441,708 | குறிப்பு 23 அ | 2,726,864 |
| நுகர்வு - எரிபொருள், உரா.நீக்கி | 717,530 | குறிப்பு 23 அ | 565,007 |
| திருத்தங்களும் பராமரிப்பும தி & ப (P & M) | 1,602,711 | குறிப்பு 23 அ | 250,832 |
| தரக்கட்டுப்பாட்டுச் செலவுகள் | 2,249,654 | குறிப்பு 23 அ | 64,257 |
| மூ.ஃ.பொ. அழிப்புக் கட்டணங்கள் | 855,294 | | - |
| நிராகரிக்கப்பட்ட மூலப்பொருள் செலவு | 654,452 | | (322,688) |
| நிராகரிக்கப்பட்ட பொதியிடல் சாதனங்கள் செலவு | 3,261 | | 16,365 |
| நிராகரிக்கப்பட்ட நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை செலவு | 3,142,914 | | 1,415,341 |
| சேதமடைந்த மூலப்பொருட்களுக்கான செலவு | (24,000) | | (24,000) |
| மூலப்பொருள் சீராக்கம் - பொது மருந்துகள் | (12,685) | | 724 |
| மூலப்பொருள் சீராக்கம் - பெனிசிலின் மருந்து | (3,634) | | (84,283) |
| மூலப்பொருள் சீராக்கம் - இருப்பெடுப்பு | 244,207 | | (612,202) |
| பொதியிடும் சாதனங்கள் சீராக்கம் - இருப்பெடுப்பு | 43,986 | | (6,738) |
| இருப்பெடுப்பு சீராக்கம் - பிரதானமானது. | (160,048) | | 20,561 |
| நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை சீராக்கம் - இருப்பெடுப்பு | 47,159 | | 276,559 |
| **உற்பத்திச் செலவில் உள்ளீர்க்கப்படாத விற்பனைச் செலவுக்கு மாற்றப்பட்டது.** | **269,412,465** | | **202,746,756** |

## குறிப்பு 23 அ

| உற்பத்திச் செலவு | உள்ளீர்க்கப்படாத கிரயம் | விற்பனைச் செலவில் உள்ளீர்க்கப்பட்ட செலவினம் | மொத்தம் 2017 | மொத்தம் 2016 |
|---|---|---|---|---|
| **நேரடி ஊழியம் (உற்பத்தி)** | | | | |
| சம்பளங்களும் வேதனங்களும் | 6,098,836 | 32,851,316 | 38,950,152 | 38,538,099 |
| அமய சம்பளங்கள் | 714,520 | 1,674,064 | 2,388,585 | 2,184,770 |
| வாழ்க்கைச் செலவு | 2,671,253 | 6,972,168 | 9,643,421 | 9,424,691 |
| போக்குவரத்து ஊக்குவிப்பு | 3,486,050 | 2,457,898 | 5,943,947 | 4,772,572 |
| E.P.F. & E.T.F. - 15% | 3,429,875 | 4,346,684 | 7,776,559 | 9,602,724 |
| மேலதிக நேர வேலை | 5,427,637 | 1,228,762 | 6,656,398 | 4,872,280 |
| வருகை ஊக்குவிப்பு | 3,454,931 | 2,246,519 | 5,701,450 | 7,630,237 |
| செயலாற்ற ஊக்குவிப்பு | 4,245,293 | 7,987,959 | 12,233,251 | 10,346,700 |
| வருடாந்த மிகை ஊதியம் | 2,150,113 | - | 2,150,113 | 1,871,914 |
| நடைமுறை சேவை கிரயம் | 1,018,451 | - | 1,018,451 | 2,097,874 |
| ஊழியர் வட்டி செலவு | 1,548,027 | - | 1,548,027 | 2,207,717 |
| சுழற்சி முறை வேலை ஊக்குவிப்பு | 2,160,646 | - | 2,160,646 | 1,532,350 |
| பணியாளர் மருத்துவச் செலவு | 2,182,047 | - | 2,182,047 | 2,545,905 |
| வீடமைப்புக் கடன் மீளளிப்பு | 5,525,703 | - | 5,525,703 | 2,956,371 |
| மேலதிக மாதாந்தர ஊக்குவிப்பு | 259,000 | - | 259,000 | 187,318 |
| மேற்பார்வையாளர் கொடுப்பனவு | 108,000 | - | 108,000 | 9,000 |
| கடினமான வேலை நிலை கொடுப்பனவு | 3,315,937 | - | 3,315,937 | - |
| தொழில்முறை கொடுப்பனவு | 48,000 | - | 48,000 | - |
| ஓய்வூதிய ஆதாயம் | 240,000 | - | 240,000 | - |
| பணியாளர் செலவு | 1,217,812 | - | 1,217,812 | 432,678 |
| | 49,302,129 | 59,765,370 | 109,067,498 | 101,213,201 |
| **நேரடியல்லாத உற்பத்திச் செலவு(தரக்கட்டுப்பாடுஇ உ.அ.ஆ இ திட்டமிடல், பராமரிப்பு)** | | | | |
| சம்பளங்களும் வேதனங்களும் | 24,901,275 | 6,041,066 | 30,942,342 | 30,074,102 |
| அமய சம்பளங்கள் | 1,717,681 | - | 1,717,681 | 1,110,787 |
| வாழ்க்கைச் செலவு | 7,406,654 | - | 7,406,654 | 7,146,012 |
| போக்குவரத்து ஊக்குவிப்பு | 4,833,619 | - | 4,833,619 | 3,896,194 |
| E.P.F. & E.T.F. - 15% | 6,074,664 | - | 6,074,664 | 7,123,770 |
| மேலதிக நேர வேலை | 7,270,687 | - | 7,270,687 | 3,218,605 |
| வருகை ஊக்குவிப்பு | 5,252,981 | - | 5,252,981 | 4,336,108 |
| செயலாற்ற ஊக்குவிப்பு | 9,860,040 | - | 9,860,040 | 7,669,078 |
| வருடாந்த மிகை ஊதியம் | 1,636,439 | - | 1,636,439 | 1,375,801 |
| நடைமுறை சேவை செலவு | 781,463 | - | 781,463 | 1,543,342 |
| ஊழியர் வட்டி செலவு | 1,047,237 | - | 1,047,237 | 1,516,963 |
| சுழற்சி முறை வேலை ஊக்குவிப்பு | 620,184 | - | 620,184 | 351,450 |
| பணியாளர் மருத்துவச் செலவு | 1,597,258 | - | 1,597,258 | 2,107,156 |
| வீடமைப்புக் கடன் மீளளிப்பு | 3,448,823 | - | 3,448,823 | 2,301,680 |
| மேலதிக மாதாந்தர ஊக்குவிப்பு | 259,000 | - | 259,000 | 187,318 |
| மேற்பார்வையாளர் கொடுப்பனவு | 213,097 | - | 213,097 | 18,000 |
| கடினமான வேலை நிலை கொடுப்பனவு | 1,541,942 | | 1,541,942 | - |
| தொழில்முறை கொடுப்பனவு | 54,000 | | 54,000 | - |
| பணியாளர் செலவு | 866,698 | - | 866,698 | 358,378 |
| விசேட பதிற்கடமை ஊக்குவிப்பு | 117,151 | - | 117,151 | 67,428 |
| தொலைபேசிப் பட்டியல் மீளளிப்பு | 314,494 | - | 314,494 | 299,647 |
| சுகாதர காப்புறுதித் திட்ட தவணைக் கட்டணம் குறிப்பு - 27 | 84,864 | - | 84,864 | 9,188,266 |
| பணியாளர் நலனோம்பல் | 16,755,682 | 7,135,813 | 23,891,495 | 21,903,614 |
| பணியாளர் பயிற்சி | 6,655,910 | - | 6,655,910 | 1,862,511 |
| சீருடைகளும் சப்பாத்துகளும் | 1,508,316 | - | 1,508,316 | 990,052 |
| நீர் கட்டணங்கள் | 475,563 | 900,306 | 1,375,869 | 1,608,724 |
| வீதங்களும் வரிகளும் | 646,216 | - | 646,216 | 645,747 |
| மின்சாரம் | 2,580,997 | 21,116,455 | 23,697,452 | 27,777,101 |
| காப்புறுதி - பொது | 343,977 | 965,590 | 1,309,567 | 600,535 |
| பாதுகாப்பு கட்டணம் - உற்பத்தி | 5,157,472 | 2,004,353 | 7,161,825 | 4,535,159 |
| உபகரணங்கள் பராமரிப்பு | 1,448,003 | 3,315,344 | 4,763,348 | 1,774,619 |
| பராமரிப்பு - உற்பத்தி | 2,832,580 | 7,858,266 | 10,690,846 | 12,641,260 |
| தேய்வு | 89,297,112 | - | 89,297,112 | 92,444,583 |
| போக்குவரத்துக் கட்டணங்கள் | 1,705,749 | - | 1,705,749 | 1,613,171 |
| நுகர்வு - உதிரிப்பாகங்கள் | 1,441,708 | 11,891,810 | 13,333,518 | 9,450,832 |
| நுகர்வு - எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகள் | 717,530 | 10,287,674 | 11,005,204 | 12,779,810 |
| திருத்தங்களும் பராமரிப்பும் P & M | 1,602,711 | 1,290,862 | 2,893,572 | 556,218 |
| தரக்கட்டுப்பாட்டுச் செலவுகள் | 2,249,654 | - | 2,249,654 | 1,533,019 |
| மூ.ஃ.பொ. அழிப்புக் கட்டணங்கள் | 855,294 | - | 855,294 | - |
| நிராகரிக்கப்பட்ட மூலப்பொருள் செலவு | 654,452 | - | 654,452 | (322,688) |
| நிராகரிக்கப்பட்ட பொதியிடல் சாதனங்கள் செலவு | 3,261 | - | 3,261 | 16,365 |
| நிராகரிக்கப்பட்ட நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை செலவு | 3,142,914 | - | 3,142,914 | 1,415,341 |
| சேதமடைந்த மூலப்பொருட்களுக்கான செலவு | (24,000) | - | (24,000) | (24,000) |
| மூலப்பொருள் சீராக்கம் - பொது மருந்துகள் | (12,685) | - | (12,685) | 724 |
| மூலப்பொருள் சீராக்கம் - பெனிசிலின் மருந்து | (3,634) | - | (3,634) | (84,283) |
| மூலப்பொருள் சீராக்கம் - இருப்பெடுப்பு | 244,207 | - | 244,207 | (612,202) |
| பொதியிடும் சாதனங்கள் சீராக்கம் - இருப்பெடுப்பு | 43,986 | - | 43,986 | (6,738) |
| இருப்பெடுப்பு சீராக்கம் - பிரதானமானது. | (160,048) | - | (160,048) | 20,561 |
| நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை சீராக்கம் - இருப்பெடுப்பு | 47,159 | - | 47,159 | 276,559 |
| | 269,412,465 | 132,572,908 | 401,985,374 | 378,499,877 |

## குறிப்பு 24
## ஓய்வுப்பயன் கடப்பாடு

நிதியியல் நிலைமையில் காணப்பட்ட தொகைகள் பின்வருமாறு

| | 31.12.2017 | 31.12.2016 |
|---|---|---|
| ஆண்டின் ஆரம்பத்தில் தேறிய பொறுப்பு | 40,862,404 | 60,520,058 |
| நடைமுறை சேவை செலவு | 2,655,342 | 5,028,968 |
| வட்டிச் செலவு | 3,881,928 | 5,446,805 |
| ஊகித்த மாற்றங்களில் (இலாபம)/நட்டம் | (2,121,769) | (24,048,388) |
| அனுபவித்த (இலாபம்)/நட்டம் | (1,226,459) | (4,817,184) |
| | 44,051,446 | 42,130,259 |
| **கழிக்க** | | |
| இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் | (2,837,917) | (1,267,855) |
| | **41,213,529** | **40,862,404** |

கூட்டுத்தாபனத்தின் ஓய்வுப் பயன் பொறுப்பு பியல் எஸ். குணதிலக அசோசியேற்ஸ் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட நிபுணத்துவ மதிப்பீட்டின் அடிப்படையிலானதாகும். ஓய்வுப் பயன் செலவினத்தைக் கணிப்பதில் பயன்படுத்தப்பட்ட பிரதான ஊகங்கள்:

| | | |
|---|---|---|
| எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால சம்பள அதிகரிப்பு | 4% | 4% |
| கழிவு வீதம் | 10.4% | 9.5% |
| ஊழியர் புரள்வு காரணி | 2.67% | 2.67% |

வருமானக் கூற்றில் காணப்பட்ட தொகைகள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| நடைமுறை சேவை செலவினம் | 2,655,342 | 5,028,968 |
| வட்டிச் செலவினம் | 3,881,928 | 5,446,805 |

நிபுணத்துவ மதிப்பீடு 2017 டிசம்பர் 31இல் உள்ளவாறு தற்போதைய நிதியியல் நிலைமையை மதிப்பிட்டு அவற்றின் சிறந்த மதிப்பீட்டைப் பெறுவதற்காகும்.

## குறிப்பு25
## தொடர்பான தரப்பின் வெளிப்படுத்தல்கள்

முக்கியமான தொடர்பான தரப்பு வெளிப்படுத்தல்கள் பின்வருமாறு:

| நிறுவனம் | தொடர்பு | கொடுக்கல் வாங்கலின் தன்மை | இவ்வாண்டில் விற்பனை |
|---|---|---|---|
| மருத்துவ வழங்கல் பிரிவு | வாடிக்கையாளர் | பொருட்கள் விற்பனை | 2,484,217,605 |
| அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் - விநியோகம் மூலம் | வாடிக்கையாளர் | பொருட்கள் விற்பனை | 50,024,605 |
| ஒப்பந்தம் மூலம் | - வாடிக்கையாளர் | பொருட்கள் விற்பனை | 10,774,300 |

## குறிப்பு 26

### சேதமடைந்த சொத்துகளின் விற்பனை

இவ்வாண்டில் ரூபா.8,048,368 பெறுமதியான சொத்துகள் விற்கப்பட்டுப் பதிவளிக்கப்பட்டன. இதில் ரூபா. 7,793,950.00 பெறுமதியான சேதமடைந்த பொருட்கள் 2016ஆம் ஆண்டில் விற்கப்பட்டவையாகும

## குறிப்பு 27

### சுகாதார காப்புறுதித் திட்ட தவணைக் கட்டணம்

2016 ஆம் ஆண்டில் அறுவை சிகிச்சை சுகாதார காப்பீட்டின் செலவுகளில் ரூபா 5,784,963 தவறுதலாக மிகைப்படுத்தி மதிப்பிடப்பட்டது. அறுவை சிகிச்சை சுகாதார காப்பீட்டின் நிர்வாக செலவுகளின் கீழ் ரூபா.1,251,866 இனால் மிகையாகவும் இ அறுவை சிகிச்சை சுகாதார காப்பீட்டின் மறைமுக உற்பத்தி செலவின் கீழ ரூபா.4,533,097 இனால் மிகையாகவும் பதிவு செய்யப்பட்டது. 2016 ஆம் ஆண்டு தொடர்பான நிதி நிலை அறிக்கையின் படி பின்வருமாறு பதிவு செய்யப்பட்டுள்ளது :

### குறிப்பு 17

| நிர்வாகச் செலவுகள் | 2016 நிதி அறிக்கையின் படி | மிகைப்படுத்தப்பட்ட மதிப்பு | இருக்க வேண்டிய சரியான மதிப்பு |
|---|---|---|---|
| சுகாதார காப்புறுதித் திட்ட தவணைக் கட்டணம் | 2,577,917 | 1,251,866 | 1,326,051 |
| **குறிப்பு 23 மற்றும் குறிப்பு 23 அ** | | | |
| **நேரடியற்ற உற்பத்திச் செலவு (தூரக்கட்டுப்பாடுஇ உ.ஆ.அஇ திட்டமிடல், பராமரிப்பு)** | | | |
| சுகாதார காப்புறுதித் திட்ட தவணைக் கட்டணம் | 9,188,266 | 4,533,097 | 4,655,169 |

எனவே 2017 ஆம் ஆண்டில் அறுவைச்சிகிச்சை சுகாதார காப்பீட்டின் செலவுகள் ரூபா.5,784,963 இனால் குறைக்கப்பட்டுள்ளன.

### குறிப்பு 17

| நிர்வாகச் செலவுகள் | 2017 நிதி அறிக்கையின் படி | குறைத்து எழுதப்பட்ட மதிப்பு | இருக்க வேண்டிய சரியான மதிப்பு |
|---|---|---|---|
| சுகாதார காப்புறுதித் திட்ட தவணைக் கட்டணம் | 209,109 | 1,251,866 | 1,460,975 |
| **குறிப்பு 23 மற்றும் குறிப்பு 23 அ நேரடியற்ற உற்பத்திச் செலவு (தூரக்கட்டுப்பாடுஇ உ.ஆ.அஇ திட்டமிடல், பராமரிப்பு)** | | | |
| சுகாதார காப்புறுதித் திட்ட தவணைக் கட்டணம் | 84,864 | 4,533,097 | 4,617,961 |

## குறிப்பு 28

வரவுகள்

தியோபிலின் அன்ஹைட்ரஸ் 1000கிலோ வாங்குவதற்கு தந்தி பரிமாற்றத்தின் மூலம் எம்.ஃ.எஸ் ஜொய்செம் லிமிடட் - சீனாவுக்கு பணம் செலுத்தியதற்கான விசாரணை நடந்து வருகிறது. எனவே ரூபா. 1,577,780.29 இனை முன்கூட்டியே கட்டணம் பெறத்தக்க கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது

.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } எச்எஸ்எம்/ஏ/எஸ்பீஎம்ஸீ 1/17/43

ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2018 செப்டம்பர் 05

தலைவர்,
இலங்கை அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனம்,

**இலங்கை அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலங்கை அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் 29 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று கூட்டுத்தாபனத்தை தலைவருக்கு 2018 ஜூலை 26 திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தானத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, இலங்கை அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01**

நியமத்தின் 32 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒன்றிற்கு ஒன்று பதிலீடு செய்யக்கூடாது எனினும், கூட்டுத்தாபனத்தின் உழைக்கும் போதே செலுத்தும் வரிக் கணக்கில் ரூபா 166,155 இற்கான வரவு மீதி வியாபார மற்றும் ஏனைய கடன் கொடுத்தோர் கணக்கில் ரூபா 112,457,527 இற்கான செலவு மீதியில் இருந்து பதிலீடு செய்து நிதிக்கூற்றுக்களில் ரூபா 112,291,372 தொகை என காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

நியமத்தின் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்காக பயன்தரக் கூடிய வாழ்க்கைக் காலம் வருடாந்த மீளாய்வு செய்யப்படாமையினால் ரூபா 223,206,845 தொகைக்கான நிலையான சொத்துக்கள் முற்றாகப் பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டிருந்த

போதிலும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு காணப்பட்டது. அதன் பிரகாரம் காணப்பட்ட மதிப்பீட்டுவழு இலங்கை கணக்கீட்டு நியமம் 08 பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 24**

---

நியமத்தின் 17 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் பிரதான முகாமைத்துவ பதவியணிக்கான கொடுப்பனவுகள் (Key Management Personnel Compensation) தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தி இருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி அறிக்கையிடுவதற்கான கருதுகோள் சார் சட்டகத்தின் 4.56 பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் தனது நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது கூடுதலாக பயன்படுத்தும் அளவை முறை வரலாற்றுக் கிரயம் ஆயினும் அதனை ஏனைய அளவை முறைகளுடன் ஒன்றினைந்து காணப்பட்டது. அதிகார சபையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளுக்கு வெவ்வேறாக அளவை முறையினை இனங்காணாமல் நிதிக் கூற்றுகளில் கணக்கீட்டு கொள்கைகள் 2.2 இன் கீழ் வரலாற்று கிரயத்தை மாத்திரம் கடைபிடிப்பதாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 67 ஆம் பந்தியின் பிரகாரம், ஊழியர் பணிக்கொடை பொறுப்புக்களை கணிக்கும் போது எதிர்வுகூறப்பட்ட அலகு செலவு முறையும் (projected unit credit method) கடைபிடிக்க வேண்டுமெனினும், கூட்டுத்தாபனத்தினால் அந்த முறை கடைபிடிக்கப்பட்டதா என்பது தொடர்பாக கணக்கீட்டு கொள்கைகளில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்

---

2014 ஆண்டின் போது மருத்துவ வழங்கள் பிரிவுக்கு விற்பனை செய்திருந்த Folic Acid Tablets, இருப்பு ஒன்று தரத்தினால் தோல்விடைந்திருந்தவை என மருத்துவ வழங்கள் பிரிவு பணிப்பாளரின் 2017 அக்தோபர் 02 திகதிய MSD/SB11/SPMC/2017/QF இலக்கம் கொண்ட கடிதத்தில் குறிப்பிட்டிருந்த

போதிலும் அது தொடர்பாக அந்த பிரிவுக்கு செலுத்த வேண்டிய ரூபா 1,609,965 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

**2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

03 வழங்குனர்களுக்கு பணம் செலுத்தும் போது தடுத்து வைத்திருந்த ரூபா 429,955 தொகை 02 வருடங்களை விட மிகையான காலம் முதல் திருப்பி செலுத்துவதற்கு அல்லது வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழ்வருமாறு ஆகும்.

| | சட்டங்கள்விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 2009 நவம்பர் 13 திகதிய 438 ஆம் இலக்க பொதுநிதி சுற்றறிக்கை | 2017 திசெம்பர் 31 திகதியளவில் பயன்படுத்த முடியாத மொத்தக் கிரயத்தின் கூட்டுத்தொகை ரூபா 17,360,465 தொகைக்கான மூலப்பொருள் இருப்பு, முடிவுற்ற வேலை இருப்பு மற்றும் பொதி செய்யும் பொருட்களும் ஆக மொத்த கிரயம் ரூபா 56,788,918 தொகை மற்றும் புத்தக பெறுமதியும் சூனியமாக காணப்பட்ட 395 சொத்து அலகுகளை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | 2009 மார்ச் 09 ஆம் திகதிய டீஎம்எஸ்/ஈ4/10/4/090/02 இலக்க கொண்ட சுகாதார செயலாளரை விளித்த முகாமைத்துவ சேவை திணைக்கள கடிதத்தின் பந்தி இலக்கம் 02 – 01 | (i) குறிப்பிட்ட கடிதத்திற்கு முரணாக கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத உத்தியோகத்தர்களுக்கு தூரத்தின் அளவை கவனத்தில் எடுக்காமல் 2009 |

ஆண்டு முதல் மாதாந்தம் முறையே ரூபா 4,700 இற்கான மற்றும் ரூபா 3,000 இற்கான போக்குவரத்து படியொன்று செலுத்தப்பட்டிருந்தது. 2016 ஆண்டு முதல் பணிப்பாளர் சபை தீர்மானம் ஒன்றின் பிரகாரம் அந்த மாதாந்த கொடுப்பனவு முறையே ரூபா 5,450 மற்றும் ரூபா 3,750 தொகை வரை அதிகரித்து பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) கடிதத்தின் பிரகாரம் பதவியணி அங்கத்தவர்களுக்கு மாதாந்த உற்பத்தி ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ரூபா 4,000 தொகை மாத்திரம் செலுத்த இயலுமெனினும், அதற்கு இணங்காமல் 2011 ஜுலை 01 திகதி முதல் மாதந்தம் உச்ச அளவு ரூபா 12,000 என்ற அடிப்படையில் ஒட்டுமொத்த பதவியணி யாளருக்கும் உற்பத்தி ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்துப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது மிகையாகச் செலுத்தியிருந்த ரூபா 17,154,670 தொகையும் உட்பட 2011 ஜுலை முதல் 2017 திசெம்பர் 31 திகதி வரையான காலப்பகுதியில் மொத்த கூட்டுத்தொகை ரூபா 62,719,822 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்காக கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள் ரூபா 223,907,939 இற்கான தேறிய இலாபமொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் தேறிய இலாபம் ரூபா 296,646,714 தொகையாக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் தேறிய இலாபத்தில் ரூபா 72,738,775 இற்கான குறைவடைதல் ஒன்று காணக் கூடியதாக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது வரிச் செலவுகள் ரூபா 46,443,591 இனால் குறைந்திருந்த போதிலும், மொத்த இலாபம் ரூபா 38,323,331 இனால் குறைவடைதல், நிருவாகச்

செலவுகள் மற்றும் விற்பனவு மற்றும் வினியோகச் செலவுகள் முறையே மற்றும் ரூபா 38,790,533 இனால் மற்றும் ரூபா 19,250,140 இனால் அதிகரித்தல் நிதி விளைவுகளில் மேற்கூறிய குறைவடைதலுக்கு முக்கியமாக தாக்கியிருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது, 2013 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை இடையறாத தேறிய இலாபமொன்றினை காட்டிய போதிலும் அது வருடாந்தம் தளம்பலடைந்திருந்தது. எவ்வாறாயினும் நிதிவிளைவுகளுக்கு ஊழியர் வேதனங்கள், அரசவரி மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வு மீண்டும் சீராக்கல் செய்த போது கூட்டுத்தாபனத்தின் 2013 ஆண்டின் போது ரூபா 662,577,528 தொகையான பங்களிப்பு 2017 ஆண்டின் போது ரூபா 838,962,510 தொகை வரை 06 சதவீதம் முதல் 10 சதவீதம் வரையான தளம்பளுடன் வளர்ச்சியடைந்திருந்ததுடன் 2016 ஆண்டிற்கு ஒப்பாக 2017 ஆண்டின் பங்களிப்பு 4 சதவீத்தினால் குறைவடைந்திருந்தது.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்களை மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப மீளாய்வாண்டின் மொத்த இலாப விகிதம் மற்றும் தேறிய இலாப விகிதம் முறையே 6.4 சதவீதத்தினால் மற்றும் 8 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் கடன்பட்டோர் புரழ்வு விகிதம் 14.1 தடவைகளினால் குறைந்திருந்ததுடன் கடனை திருப்பில் பெறும் காலம் 15 நாட்களினால் அதிகரித்திருந்தது. கடன் கொடுத்தோர் புரழ்வு விகிதம் 6.8 தடவைகளினால் அதிகரித்திருந்ததுடன் கடன் கொடுத்தோர் புரழ்வு காலம் 05 நாட்களால் குறைந்திருந்தது. அது தொடர்பாக கவனம் செலுத்தி கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு அலுவல்கள் வினைதிறன் ஆக்கப்படவேண்டுமென அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 செயல் ஆற்றுகை மற்றும் மீளாய்வு

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கை திட்டத்திலுள்ள விற்பனை திணைக்களத்திற்குரிய 05 கருமங்களும், உற்பத்தி திணைக்களத்திற்குரிய

கருமங்கள் ஒன்றும், தரக கட்டுப்பாட்டு திணைக்களத்திற்குரிய 06 கருமங்களும், மனித வள திணைக்களத்திற்குரிய 02 கருமங்களும், பட்டியல் மற்றும் அபிவிருத்தி திணைக்களத்திற்குரிய 03 கருமங்களும், பொறியியல் திணைக்களத்திற்குரிய 02 கருமங்களும் மற்றும் தகவல் தொழில்நுட்ப திணைக்களத்திற்குரிய கருமம் ஒன்றையும் நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தனியார் நிறுவனமொன்றின் மூலம் மருந்துகள் உற்பத்தி செய்து கொள்வனவு செய்தல் மற்றும் மீண்டும் விற்பனவு செய்தல் என்பன கூட்டுத்தாபனத்தின் பிரதான குறிக்கோள்களில் அடங்காத குறிக்கோள் ஒன்றாக இருந்த போதிலும், முறைசார் விதமாக கூட்டுத்தாபனத்தின் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை திருத்தம் செய்யாமல் மற்றும் அமைச்சரவை அங்கீகாரத்தை பெறாமல் மருந்துகளை உற்பத்தி செய்து கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவதற்காக இந்திய கம்பனி ஒன்றுடன் 2016 ஏப்ரல் 05 உடன்படிக்கையொன்று மேற்கொண்டிருந்ததுடன் அந்த உடன்படிக்கை காலம் 2017 ஏப்ரல் 04 திகதி முடிவடைந்திருந்தமையால் 2017 திசெம்பர் 14 திகதி ஒரு வருட காலத்திற்கான புதிய உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) Theophylline Anhydrous USP 32 மருந்து வகையின் 1000 அலகுகள் மூலப்பொருள் கொள்வனவு செய்வதற்காக விலைகூறல் அழைப்பின் போது குறைந்த விலை சமர்பித்திருந்த விலைகூரல்தாரருக்கு 2017 மே 24 திகதி கட்டளையை வழங்கி 2017 மே 25 ஆம் திகதி Telegraphic Transfer முறையில பணம் செலுத்தியிருந்த போதிலும் 2018 ஜுன் 30 திகதி அளவில் 1000 அலகுகள் மூலப்பொருள் கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பெறுகையுடன் தொடர்புடைய உடன்படிக்கை மற்றும் விலைகூறல் ஆவணங்களிலுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் நாணயக் கடிதத்தின் மூலம் வழங்குனருக்கு பணம் செலுத்தப்பட வேண்டுமெனினும், அதற்கு முரணாக பெறுகை குழுவின் அங்கீகாரம் இன்றி மற்றும் நிதிப்பிரமாணம் 237(ஆ) இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக மூலப்பொருட்கள் பெறுவதற்கு முன்னர் Telegraphic Transfer முறையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) இந்த கட்டளை வழங்குவதற்கு முன்னர் 2016 அக்தோபர் 27 ஆம் திகதி வேறு வழங்குனர் ஒருவரிடம் இந்த மூலப்பொருளில் 3,000 கிலோ கிராமிற்கு கட்டளை அனுப்பப்பட்டிருந்தமையால் மற்றும் அல்லது இருப்பு 2017 ஜூன் மாதம் அளவில் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டியிருந்ததுடன், இருப்பு தட்டுப்பாடு ஒன்று ஏற்படக்கூடிய நிலைமை ஒன்று காணப்படவில்லை. எனினும், இந்த மூலப்பொருளில் 1,000 கிலோ கிராம் மீண்டும் கட்டளை இடுவதற்குரிய Telegraphic Transfer முறைப்படி அவசரக் கொடுப்பனவு செய்தற்குமான காரணத்தை கண்டிறியவில்லை.

(iii) வரி கணித்தல் ஒன்றின் காரணத்தினால் வங்கிக் கணக்கு இலக்கம் மாற்றப்பட்டதாகவும் அந்த புதிய கணக்கு இலக்கத்திற்கு பணம் செலுத்தும்படி அறிவித்து 2017 மே 25 ஆந் திகதி முகாமையாளர் (திட்டமிடல் மற்றும் பெறுகை) இற்கு கிடைத்திருந்த போலியான இலத்திரனியல் தபால் செய்தியை போலியல்லாததென உறுதிப்படுத்தாமல் பிரதி பொது முகாமையாளர் (நிதி) மற்றும் பிரதி பொது முகாமையாளர் (தரக் கட்டுப்பாடு) இன கையொப்பத்துடன் வங்கிக்கு இடப்பட்ட கட்டளையின் காரணமாக போலியான இலத்திரனியல் செய்தியில் குறிப்பிடப்பட்ட உண்மையான வழங்குனருக்கு சொந்தமில்லாத வங்கிக் கணக்கு ஒன்றிற்கு செலவு வைக்கும்படி 2017 மே 25 திகதி ரூபா 1,577,780 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iv) இரண்டாவது கையொப்பதாரர் என செயற்படும் பிரதி பொதுமுகாமையாளர்களுக்கு (தரக் கட்டுப்பாடு) வழங்கப்பட்டிருந்த அதிகாரக் கையளிப்பின் பிரகாரம் அவருக்கு அனுமதிக்கூடிய உச்சமட்ட வரையறை ரூபா 500,000 தொகை எனினும் அந்த வரையறையை மிகைத்து மேற்கூறிய கொடுப்பனவிற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(v) மொத்த நட்டம் ரூபா 1,577,780 இல் ரூபா 331,000 தொகை வழங்குனர்களின் செயலாற்றுகை மற்றும் விளைகூறல் பாதுகாப்பு முறிகளில் இருந்து அறவிடப்பட்டிருந்த போதிலும் 2018 ஜூலை 20 திகதி அளவிலும் மீதித் தொகை ஆகிய ரூபா 1,246,780 தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(vi) ஏற்பட்டுள்ள நட்டத்திற்கு பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலுள்ள ரூபா 391,250 கிரயத்தையுடைய 08 விடயங்களில் குறைவு 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட பௌதீக பண்டக் கணிப்பீட்டின் போது கண்டறியப்பட்டிருந்த போதிலும் ஆண்டுகள் பற்றாக்குறை ஏற்படுவதற்கு காரணத்தை இனங்கண்டு பரிகாரம் காண்பதற்கு மற்றும் நிதிப்பிரமாணம் 103 இன் பிரகாரம் தொடர்ந்து செயற்படுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) இந்திய கம்பனி ஒன்றிலிருந்து மருந்து வகைகளை இறக்குமதி செய்யப்படுவதினால் மீளாய்வாண்டின் போது 04 விடயங்களில் உற்பத்தி அலுவல்கள் நிறுத்தப்பட்டிருந்தமையால் 04 வகையான மருந்து வகைகளை உற்பத்தி செய்வதற்காக தருவிக்கப்பட்டிருந்த ரூபா 1,789,731 தொகையான கிரயத்தையுடைய 204 கிலோ கிராம் மூலப் பொருள் ஒரு வருட காலமாக பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

## 4.3 செயற்பாட்டு தொழிற்பாடுகள்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மருத்துவ வழங்கல் பிரிவினால் 2017 மற்றும் 2018 ஆண்டுகளின் போது Domperidone Malate BP மருந்து வகை 50 மில்லியன் அலகு வீதம் கட்டளை அனுப்பப்பட்டிருந்தது. அந்த மருந்தை உற்பத்தி செய்வதற்காக ரூபா 1,214,384 கிரயத்தையுடைய மூலப்பொருள் 100 கிலோ கிராம் 2017 அக்தோபர் மாதத்தில் கொள்வனவு செய்திருந்த போதிலும் 2018 ஜூன் 04 திகதி வரை 08 மாத காலப்பகுதியில் அந்த மருந்து உற்பத்தி செய்திருக்கவில்லை. 2018 மார்ச் மாதம் தொடர்பாக கணக்காய்விற்கு அனுப்பியிருந்த உற்பத்தி திட்டத்திலும் அந்த மருந்து உற்பத்தி செய்வதற்காக திட்டமிட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் அந்த மருந்தினை உற்பத்தி செய்வதற்குப் பதிலாக மொத்த கட்டளையையும் இந்தியாவின் Till Healthcare (Pvt) Ltd நிறுவனத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளின் மூலம் பூர்த்தி செய்திருந்தது.

(ஆ) 2017 ஆகஸ்ட் மாதம் அளவில் Microcrystalline Cellulose – 200XML மூலப்பொருளின் மீதித்தொகை 406 கிலோ கிராமாக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறு அந்த இருப்பு காலவதியாகியிருந்தது. அந்த

மூலப்பொருட்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் மருந்து 2017 ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் உற்பத்தி செய்திருக்காததுடன் 2018 ஜனவரி, பெப்ரவரி மற்றும் ஜுன் மாதங்களின் போது முறையே 3,000 கிலோ கிராம் 2000 கிலோ கிராம் மற்றும் 3000 கிலோ கிராம் வீதம் மொத்தக் கிரயம் ரூபா 7,943,351 தொகைக்கான மூலப்பொருள் இருப்பு கொள்வனவு செய்திருந்தது எவ்வாறாயினும், 2018 ஜுன் 18 திகதி அளவிலும் அந்த மூலப்பொருட்களை உற்பத்தி விடயங்களுக்காக பயன்படுத்தியிருக்கவில்லை.

(இ) மருத்துவ வழங்கள் பிரிவினால் மீளாய்வாண்டிற்கான கட்டளை அனுப்பப்பட்டிருந்த மருந்து வகைகளில் விற்பனவு விலை ரூபா 70,113,783 தொகைக்கான 08 வகையான மருந்துகளில் 39,174 மில்லியன் அலகுகள் மீளாய்வாண்டின் போது வழங்குவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடியாதிருந்தது.

**4.4 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

மீளாய்வாண்டின் போது ரூபா 595,000 தொகை செலவிடப்பட்டு வைத்தியர்களுக்கு 02 நாட்கள் இரவு உணவு வழங்கப்பட்டிருந்த போதிலும், இரவு உணவு வழங்கப்பட்ட வைத்தியர்கள் தொடர்பாகவோ அல்லது அந்த இரவு உணவு வழங்கப்பட வேண்டிய தேவை தொடர்பான விபரங்கள் சமர்பித்திருக்கவில்லை.

**4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

2017 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 2,438,354 தொகைக்கான 5 வகையான மூலப்பொருள் இருப்பு காலவதியான காரணத்தின் ஏற்பட்டிருந்த நட்டம் தொடர்பாக முறையான விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டு நட்டத்திற்கு பொறுப்பு சொல்ல வேண்டிய தரப்பினை இணங் காண்பதற்கு முறைசார் விதமாக அகற்றுவதற்கும் மற்றும் உரிய இருப்புப் பதிவேடுகளில் இருந்து பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.6 பதவியணி நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்வு திகதியாகிய 2018 ஜுன் 05 திகதி அளவில் 07 வருட காலம் முதல் வெற்றிடமாகக் காணப்பட்ட பிரதி பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) பதவியை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மிகைத்து 05 பதவிகளில் 05 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படாத பட்டியல் மற்றும் ஆய்வு நிறைவேற்றுனர், ஊடக கூட்டிணைப்பு உத்தியோகத்தர், நிகழ்ச்சித்திட்ட கூட்டிணைப்பு உத்தியோகத்தர், செயற்திட்ட கூட்டிணைப்பாளர் ஆகிய பதவிகளில் 2016 ஆண்டின் போது ஒரு நபரும் மற்றும் 2017 ஆண்டின் போது 04 பேருமாக ஒப்பந்த அடிப்படையில் 05 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன், அப்பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆள்சேர்ப்பு நடைமுறையொன்று காணப்படாமையால் பதவிகளுக்காக போதியளவு தகைமைகளுடன் உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனரா என்பதை பரிசோதனை செய்ய முடியாதிருந்தது.

(ஈ) பிரதி பொது முகாமையாளர் (மனித வள) பதவியில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2017 ஜுலை 02 ஆம் திகதி செய்தித்தாள் விளம்பரம் ஒன்று வெளியிடப்பட்டு கிடைத்திருந்த விண்ணப்பங்களில் மூன்று விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டதென அறிவித்திருந்த போதிலும் நேர்முகப் பரீட்சை சபையின் அறிக்கை நேர்முகப் பரீட்சை குழுவினால் சான்றுபடுத்தியிருக்கவில்லை. ஆள் சேர்ப்பு நடைமுறையிலுள்ள வயது எல்லையை மிகைத்திருந்த விண்ணப்பதாரி ஒருவரை கூட்டுத்தாபன தலைவரின் ஆலோசனையுடன் மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் 2017 செப்தம்பர் 20 திகதி முதல் 06 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்ததுடன் 2018 ஜுன் 05 திகதி வரை 08 மாத காலம் வரை அப்பதவியை நிரந்தர அடிப்படையில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமல் அந்த உத்தியோகத்தரின் சேவை நீடிக்கப்பட்டுள்ளது. நிரந்தர பதவியொன்றாக இந்த பதவி ஒப்பந்த அடிப்படையில் சேர்ப்பதற்குரிய காரணங்கள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

(உ) கூட்டுத்தாபனத்தின் சிற்றூழியர்களின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் செய்தித்தாள் அறிவித்தல் பிரசுரிப்பதன் மூலம் பதவி வெற்றிடங்கள் பகிரங்கப்படுத்தப்பட்டு நேர்முகப் பரீட்சை நடாத்தி தகைமைகளுக்காக புள்ளிகள் வழங்கி தெரிவு செய்யப்பட்ட நபர்கள் சேர்க்கப்பட வேண்டுமென்றும், அதற்கு இணங்காமல் மீளாய்வாண்டின் போது சாரதிகள், மருந்து நேர்த்தியாக்கல் உதவியாளர், தொழிலாளர் ஆகிய பதவிகள் தொடர்பாக நிரந்தர அடிப்படையில் 19 பேர்கள் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஒருவரும் ஆக 20 சிற்றூழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். மேலும் கடந்த ஆண்டுகளின் போது ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த தொழிலாளர் ஒருவர் மற்றும் சாரதி ஒருவர்

மீளாய்வாண்டின் போது ஆட்சேர்ப்பு நடைமுறையை கடைபிடிக்காமல் அப்பதவியில் நிரந்தரப்படுத்தப்பட்டிருந்தது.

(ஊ) கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று அல்லாத ஊழியர்கள் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் செய்தித்தாள் அறிவித்தல் வெளியிடுவதாக பதவி வெற்றிடங்கள் விளம்பரப்படுத்தி, எழுத்துமூல பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை நடாத்தி தகைமைகளுக்கு புள்ளிகள் வழங்குதல் இன்றி மீளாய்வாண்டின் போது முகாமைத்துவ உதவியாளர் மற்றும் மருந்து தொழில்நுட்பவியலாளர் ஆகிய பதவிகளுக்கு 09 உத்தியோகத்தர்கள் நிரந்தர அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 5 நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டி இருந்ததுடன் மீளாய்வாண்டு தொடர்பாக இலங்கை அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தினால் தனது நோக்கெல்லையின் கீழ்வரும் கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டுமென அறிந்திருந்த போதிலும் நிலைபேறாக அபிவிருத்தியின் குறிக்கோள்களை செயற்படுத்துவது தொடர்பாக இலங்கை அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தின் செய்பணிகள் தொடர்பாக அக்கரை செலுத்தும் தரப்பினர் இனங்கண்டிருக்கவில்லை.

## 6 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த வேலை செயற்பாடுகள்

#### 6.1.1 பெறுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரித்திருந்த பிரதான பெறுகை திட்டம் தொடர்பாக பெறுகை நேர் அட்டவணை முறைசார் விதமாக தயாரித்திருக்கவில்லை.

(ஆ) பொது பரிசோதனை ஆய்வுகூடமொன்று மற்றும் பயிற்சி பாடசாலை ஒன்றினை நிறுவும் குறிக்கோளுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 88 மில்லியன் தொகைக்குச் செலவிடப்பட்டு, அரச வங்கியொன்றில் ஈடுவைக்கப்பட்டிருந்த கழுத்துறை மாவட்டத்திலுள்ள புலத்சிங்கல பகுதியில்

நான்கு மாடி கட்டிடத்துடனான காணி கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பொது பரிசோதனை ஆய்வுகூடமொன்று மற்றும் பயிற்சி பாடசாலை ஒன்று நிறுவும் குறிக்கோள் செயல்நடவடிக்கை திட்டத்தில் உட்படுத்தியிருக்கவில்லை.

(ii) மேற்கூறிய கொள்வனவு தொடர்பாக நிதி மற்றும் சாத்தியக்கூறு அறிக்கை தயாரிப்பதற்காக விஷேட தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு ஒன்று நியமனம் செய்யப்பட வேண்டுமென பணிப்பாளர் சபை தீர்மானத்திருந்த போதிலும் விஷேட தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு ஒன்றின் நியமனம் செய்வதற்கு அல்லது நிதி மற்றும் சாத்தியக்கூறு அறிக்கை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) கூறுவிலை அழைப்பதற்காக பிரசுரிக்கப்பட்ட செய்தித்தாள் அறிவித்தலில் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்த்த ஆதனம் கழுத்துறை மாவட்டத்தில் புலத்சிங்கலவுக்கு 5 கிலோ மீற்றர்கள் உள்ளே செய்யவேண்டும் என பிரசுரிக்கப்பட்டிருந்ததாக தகைமையுடைய அக்கரை செலுத்தும் தரப்பினருக்கு பெறுகையில் பங்குபற்றுவதற்காக நியாயமான, சமமான மற்றும் உச்சமட்ட சந்தர்ப்பங்கள் வழங்குவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதே போல் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 5.3.1 இன் பிரகாரம் நியம விலைகோரல் ஆவணங்கள் (Standerd Bidding Documents) பயன்படுத்தாமை மற்றும் அதன் காரணமாக சமர்பிக்கப்பட்ட இரண்டு விலைகூறல்களையும் ஒன்றுடன் ஒன்றை இணக்கஞ் செய்யமுடியாமை மற்றும் அது தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பாய்வு மற்றும் பெறுகை குழுக்களினால் கவனம் செலுத்தியிருக்கவில்லை. மேலும், அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல்கள் 6.3.3 மற்றும் 6.3.6 இன் பிரகாரம் முறையே விலைகூறல் திறக்கும் குழு ஒன்று நியமனம் செய்திருக்காததுடன் விலைகூறல் திறத்தல் தொடர்பான அலுவல்கள் குறிப்பிட்ட படிவத்தில் பதிந்திருக்கவில்லை. மேற்கூறிய காரணங்களின் மேற்கூறிய பெறுகை போட்டித் தன்மை மற்றும் வெளிப்படையான தன்மை என்பவற்றிலிருந்து விளக்கி நடைபெற்றுள்ளது என அவதானிக்கப்பட்டது.

(vi) மேற்கூறிய கொள்வனவு மேற்கொள்வதற்கு முன்னர் செய்ய வேண்டியவை என தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவினால் வழங்கியிருந்த சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் சட்டப்பிரிவினால் குறிப்பிட்ட ஆதனங்கள் தொடர்பாக

அபிப்பிராயம் ஒன்று தெளிவு ஒன்று பெற்றுக் கொள்ளல், விற்பனையாளரின் மூலம் குறிப்பிட்ட உள்ளூராட்சி நிறுவனத்தினால் கட்டிடம் தொடர்பாக இணக்கச் சான்றிதழ்(Certificate of Completion - COC) பெற்றுக்கொள்ளல் குறிப்பிட்ட வங்கிக் கிளையில் இருந்து கட்டிடத்துடன் காணியின் ஈடுதொடர்பாக விபரங்கள் பெற்றுக் கொள்ளல் மற்றும் கட்டிடம் தொடர்பான அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு அல்லது மத்தியப் பொறியியல் உசாத்துனை பணியத்தின் கட்டமைப்பு பொறியியல் அறிக்கை (Structural Report) பெற்றுக்கொள்ளல் ஆகிய விதப்புரைகளை கடைபிடிக்காமல் திணைக்கள பெறுகைகள் குழுவினால் குறைந்த விலைகூறல் சமர்பித்திருந்த விலைகூறல்தாரர் வெற்றிகரமான விலைகூறல்தாரர் என தெரிவு செய்யப்பட்டிருந்தது.

(v) கட்டிடத்துடன் காணியை ஈடுவைத்திருந்த அரச வங்கிக் கிளையுடன் கலந்துரையாடினால் இந்த ஈட்டிற்கான வங்கியினால் சமர்பித்திருந்த இறுதி இணைக்கத்தினால் பெறுமதி ரூபா 66 மில்லியன் ஆக இருந்ததுடன் இந்த காணி குறிப்பிட்ட வங்கியினால் ஏலவிற்னை செய்வதற்கு தீர்மானித்திருந்தாகவும் அறியக்கூடியதாக இருந்தது. எனினும் அவ்வாறு செய்யாமல் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 88 மில்லியன் விடக் குறைவாக அந்த ஆதனத்தை கொள்வனவு செய்வதற்காக விற்பனையாளருடன் கலந்துரையாடுவதற்கு இருந்த சந்தர்ப்பத்தை நழுவியுள்ளது.

(vi) கொள்வனவு செய்வதற்கு திட்டமிட்டிருந்த கட்டிடம், ஆய்வுகூடம் மற்றும் பயிற்சி பாடசாலை நடாத்துவதற்கு பொருத்தமானதா என்பது தொடர்பாக பரிசோதனை செய்வதற்காக விற்பனையாளரின் கூட்டமைப்புசார் பொறியியலாளர் ஒருவரிடம் பெற்று கூட்டுத்தாபனத்திற்கு சமர்பிக்கப்பட்டிருந்த அறிக்கையின் பிரகாரமும், கூட்டுத்தாபனத்தினால் பெற்றிருந்த கட்டமைப்புசார் பொறியியல் பொறியியலாளர் அறிக்கை (Structured Report) இன் பிரகாரமும் கணக்காய்வினால் பௌதீக ரீதியாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் பிரகாரமும் இந்த கட்டிடத்திற்காக roof slab பகுதியில் நீர் ஒழுகுவதற்காகவும் முறைகள் அமைத்திருக்காததுடன், அப் பிரதேசம் நேரடியாக காலநிலைக்கு மூடப்படாத நிலையில் காணப்படாமையால் அதிக உஷ்ணத்தின் காரணத்தினால் கீழ் மாடிகளின் சுவர்கள் வெடிப்படைந்து காணப்பட்டது. மூன்றாம் மாடியின் சுவர்களில் கீறல் ஏற்பட்டிருந்ததுடன் படிகளில் கைவேலி பொருத்தப்பட்டிருக்கவில்லை. இந்த குறைபாடுகளை சரி

16

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

செய்வதற்கும் பயிற்சி பாடசாலைக்கு ஏற்ற விதமாக நவீனமயப்படுத்துவதற்கும் திணைக்கள பெறுகை குழுவினால் 2018 மே 08 ஆம் திகதி ரூபா 33,460,608 தொகைக்கு ஒப்பந்த வேலை ஒன்று வழங்கப்பட்டிருந்தது.

(vii) விற்பனையாளரினால் இந்த கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு முடிவடைந்தவுடன் குறிப்பிட்ட உள்ளூராட்சி நிறுவனத்திலிருந்து இணக்கச் சான்றிதழ் (Certificate of Completion - COC) பெற்றிருக்கவில்லை.

(இ) கூட்டுத்தாபனத்தினால் சந்தை விலையை ஒப்பீட்டு முறையினை கடைபிடித்து ரூபா 1,680,550 தொகை கிரயத்தையுடைய 10 மடிக் கணினிகளும், ரூபா 307,812 தொகை கிரயத்தையுடைய 2 வாயு சீராக்கிகளும், ரூபா 5,907,895 தொகை கிரயத்தையுடைய மின்(இலக்டிக்) Forklift இயந்திரங்களும், ரூபா 850,000 தொகை 02 சேவிஸ் தொட்டிகளும், ரூபா 559,417 தொகை கிரயத்தையுடைய Analytical Balance உபகரணமொன்றும் கொள்வனவு செய்திருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 5.3.1 , 6.3.3 மற்றும் 6.3.6 இன் பிரகாரம் முறையே விலை ஒப்பீட்டு முறையில் பண்டங்கள் கொள்வனவு செய்த போது பயன்படுத்த வேண்டிய NPA/SBD/GOODS/01 இலக்கம் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட விலைகூறல் அழைப்பு பதிவேட்டை பயன்படுத்துதற்கும், விலைகூறல் திறத்தல் குழு ஒன்று நியமனம் செய்வதற்காக விலைகூறல் திறத்தல் தொடர்பாக அலுவல்களை உரிய படிவங்களில் பதிவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 8.9.1(ஆ) பிரகாரம் ரூபா 500,000 இனை மிகைக்கும் மேற்கூறிய பண்டங்கள் மற்றும் சேவை ஒப்பந்த வேலைகள் தொடர்பான முறையான உடன்படிக்கை ஒன்றினை அணுகியிருக்கவில்லை.

(iii) மின் (இலட்ரிக்) குழசமடகைவ இயந்திர பெறுகையின் போது விலைகூறல்தாரர்கள் ஆறுபேரிடம் விலைகூறல் அழைப்பின் பிரகாரம் இரண்டு விலைகூறல்தாரர்கள் மாத்திரம் கூறுவிலைகள்

சமர்பித்திருந்ததுடன் சமர்பிக்கப்பட்டிருந்த கூறுவிலைகள் மிகையாக இருந்தமையால் அந்த விலைகூறல்கள் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது. மீண்டும் விலைகூறல்கள் அழைத்த போது அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 7.12.3 இன் பிரகாரம் போட்டித் தன்மையில் குறைவு ஒன்று காணப்படின் மற்றம் பெற்றிருந்த எல்லா விலைகூறலும் இரத்துச் செய்யப்பட்டிருந்த விசாலமான பிரசாரம் ஒன்று வழங்கப்பட வேண்டும். விசாலமான பிரச்சாரம் ஒன்று வழங்குவதற்கு பதிலாக அதே விலைகூறல்தாரரிடம் கூறுவிலை அழைப்பதற்கு தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு விதப்புரைந்து இரண்டாம் முறை கூறுவிலைகள் அழைப்பதற்கு பதில் அனுப்பிய ஒரே வழங்குனருக்கு ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்தது. விசாலமான பிரச்சாரம் ஒன்று வழங்குவதற்கும், புதிய வழங்குனர்களிடம் கூறுவிலைகள் அழைப்பதற்கும் நடவடிக்கை எடுக்காமையால் போட்டித்தன்மை வரையறுக்கப்பட்டிருந்தது.

(ஈ) Fluid Bed Granulator Dryer இயந்திரத்திற்காக ரூபா 1,258,211 தொகை கிரயத்தையுடைய உதிரிப் பாகங்கள் மற்றும் New Capsule Filling இயந்திரத்திற்காக ரூபா 2,560,495 தொகை கிரயத்தையுடைய உதிரிப் பாகங்கள் அவ் இயந்திரங்களின் உற்பத்தி நிறுவனங்களிலிருந்து நேரடியாக கொள்வனவு செய்யும் முறையின் கீழ் பெறுகை செய்திருந்த போதிலும் வழங்குனர்களுடன் உடன்படிக்கைக்கு அணுகியிருக்காததுடன், வங்கி பாதுகாப்பு முறியும் பெற்றிருக்காமல் Telegraphic Transfer இன் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்ட நாள் முதல் கணக்காய்வுத் திகதியாகிய 2018 ஜூன் 08 திகதி வரை முறையே 06 மாதங்கள் மற்றும் 05 மாதங்கள் கடந்திருந்த போதிலும் கூட்டுத்தாபனத்திற்கு பண்டங்கள் வழங்கியிருக்காததுடன் ஒப்பந்த வேலை உடன்படிக்கைக்கு அணுகியிருக்காமையினால் பண்டங்கள் வழங்காமை மற்றும் தாமதத்தினால் ஏற்படும் நட்டத்திற்கு எதுவித நடவடிக்கையும் எடுப்பதற்கு முடியாதிருந்தது.

## 6.1.2 ஒப்பந்த வேலை நிருவாகத்தில் குறைபாடுகள்

மொத்த கிரய மதிப்பீடு ரூபா 242,268,015 தொகைக்கான கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக 2015 ஆகஸ்ட் 27 திகதி மதியுரை நிறுவனம் ஒன்று தெரிவு செய்திருந்ததுடன், 2017 செப்டம்பர் 01 திகதி கட்டிடத்தின் Pilling Works இற்காக ரூபா 22,755,500 இற்காக ஒப்பந்தக்காரர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்த நிர்மாண வேலைகளுக்காக தெரிவு செய்யப்பட்டிருந்த மதியுரை நிறுவனத்தின் சேவைகளில் திருப்தியின்மையினால் அந்த மதியுரை நிறுவனத்துடன் காணப்பட்ட உடன்படிக்கையை இரத்து செய்வதற்கு 2018 ஏப்ரல் 06 திகதி பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. மதியுரை நிறுவத்துடன் மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கை கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கட்டிடத்தின் Pilling Works களுக்கான ஒப்பந்தக்காரர் ஒருவர் தெரிவு செய்யும் போது அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 6.3.3 இன் பிரகாரம், கூறுவிலை திறக்கும் குழு ஒன்று நியமனம் செய்திருக்காததுடன் அவ்வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 6.3.6 இன பிரகாரம் விலைகூறல் திறத்தல் தொடர்பான அலுவல்கள் குறிப்பிட்ட படிவத்தில் அறிக்கை இடப்பட்டிருக்கவில்லை. மேலும், அந்த வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 8.9.1(அ) இன் பிரகாரம் இந்த ஒப்பந்த வேலை தொடர்பாக முறையான உடன்படிக்கை ஒன்றினை அணுகியிருக்கவில்லை.

(iii) 2017 செம்டம்பர் 01 ஆம் திகதிய ஒப்பந்த வேலையை வழங்கும் கடிதத்தின் பிரகாரம் கட்டிடத்தின் Pilling Works 2018 ஜனவரி 20 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனினும் 2018 மே 15 திகதி அளவிலும் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 6.1.3 தாமதமாகிய செயற்திட்டங்கள்

மொத்த ஒப்பந்த வேலை பெறுமதி ரூபா 144,805,967 தொகை பெறுமதியான 02 கட்டிடங்களின் நிர்மாண வேலைகளின் ஒப்பந்த வேலை வழங்கும் கடிதத்தின் பிரகாரம் முறையே 2017 மார்ச் 06 திகதி மற்றும் 2017 ஆகஸ்ட் 02 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனினும் 2018 மே 20 திகதி வரை வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 6.2 வருடாந்த அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்படாமை

2016 ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை 2018 ஜூன் 29 திகதி அளவிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை.

### 6.3 தீர்க்கப்பட்டிருக்காத கணக்காய்வு பந்திகள்

கடந்த ஆண்டின் போது இறக்குமதி செய்யப்பட்ட ரூபா 827,873 கிரயத்தையுடைய “Cloxacillin Caps BP 500mg” 210 கிலோ கிராம் இற்கான இருப்பில் நார்கள்

(Fiber) பகுதியொன்று அடங்கியிருந்ததென 2016 ஜூன் 07 திகதி கண்டறியப்பட்டிருந்தமை காரணத்தினால் அந்த இருப்பினை பயன்படுத்த முடியாதிருந்தது. எனினும், கூட்டுத்தாபனத்தினால் 2017 பெப்ரவரி 07 திகதி அளவில் வழங்குனர்களிடம் நட்டத்தை மீளளிப்பு செய்ய வேண்டுமென அறிவித்திருக்காததுடன் நட்டத்தை இனங்கண்டு 08 காலத்திற்கு பின்னர் உள்நாட்டு முகவரிடம் நட்டத்தை மீளளிப்பு செய்யும் படி அறிவித்திருந்த விண்ணப்பத்தில் உள்நாட்டு முகவரினால் மறுக்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட வழங்கும் கம்பனியின் வர்த்தக நடவடிக்கைகளை நிறுத்தப்பட்டுள்ளதாகவும், உள்நாட்டு முகவரினால் அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிட்ட வழங்குனருடைய நட்டத்தை அறவீடு செய்வதற்காக அடிப்படை இணக்கத்திற்கு வந்துள்ளதாக 2017 ஜூன் 20 திகதி கூட்டுத்தாபனத்தின் தலைவரினால் கணக்காய்விற்கு அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 ஜூலை 13 திகதி அளவிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

## 7 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | நடைமுறை அல்லாத சொத்துக்கள் | பயன்படுத்த முடியாத சொத்துக்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை. |
| (ஆ) | இருப்புக் கட்டுப்பாடு | உச்சமட்ட இருப்பு மட்டம் பேணப்பட்டிருக்காமை. |
| (இ) | பதவியணி நிருவாகம் | திறைசேரியின் அனுமதி இன்றி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படல் மற்றும் உரிய முறையில் உள்வருதல் மற்றும் வெளிச்செல்லல் பதிவு செய்யப்படாமை. |

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்க
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம். காமினி விஜேசிங்க

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# 2017 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை பற்றிய தவிசாளரின் கருத்துகள்

2. நிதிக் கூற்றுகள்

**2.1 உருதிசெய்யப்பட்ட கருத்துகள்**

**2.2 நிதிக் கூற்றுகள் பற்றிய கருத்து வெளியீடு**

**2.2.1 இலங்கை கணக்காய்வுத் தரம்**

**(அ) இலங்கை கணக்காய்வுத் தரம் 1**

ஈட்டலின்போதான செலுத்துகை வரி கணக்கின் செலவு மீதி வர்த்தக மற்றும் வேறு செலுத்துகையின் கீழ் நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டுள்ளபோதிலும் அதனை அடுத்துவரும் நிதிக் கூற்றுகளில் சரியான முறையில் முன்வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**(ஆ) இலங்கை கணக்காய்வுத் தரம் 16**

அசையா சொத்துக்கள் அல்லாத சொத்துக்களை கண்காணிப்பதற்காக மேற்பார்வை கூட்டுத்தாபன பொது முகாமையாளரின் செயற்பாட்டின்மூலம் சொத்துக்கள் ஆய்வுக் குழுவொன்றும் (Survey Board) அதேபோல் சொத்துக்கள் மதிப்பீட்டு குழுவொன்றும் Valuation Board நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக் குழுக்களின் ஊடாக சேதமடைந்துள்ள மற்றும் பயன்பாட்டுக்கு பொருத்தமற்ற அசையா சொத்துக்கள் அல்லாத சொத்துக்கள் தொடர்பில் அதேபோல் விளைத்திறனுடைய ஆயுள் காலத்தை வருடாந்தம் மீளாய்விற்கு உட்படுத்தல் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் செயல்முறை துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

**(இ) இலங்கை கணக்காய்வுத் தரம்24**

எதிர்வரும் நிதிக் கூற்றுகளின்போது கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுகளின் பிரதம முகாமைத்துவ பணியாட்றொகுதிக்கான செலுத்துகைகள் Key Management Personnel Compensation பற்றிய தகவல்களை வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### 2.2.2 கணக்காய்வுக் கொள்கைகள்

(அ) நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கும்போது கையாளப்படும் அளவுக் கூறுகள் பற்றிய சரியான குறிப்பொன்று கணக்காய்வுக் கொள்கைகளின் கீழ் எதிர்வரும் நிதிக் கூற்றுகள் தொடர்பில் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ஆ) ஊழியர் பணிக்கொடை பற்றிய பொறுப்பினை தற்கால பெறுமதியுடன் சீர்செய்யும்போது ஏற்கனவே குறிப்பிடப்பட்ட அலகுகளை கணக்குவைக்கும் முறை Projected Unit Credit Actuarial Cost Method கூட்டுத்தாபனத்தினால் பயன்படுத்தப்படுவதுடன் அது பற்றி இதன் பின் கணக்குக் கூற்றுகளில் வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### 2.2.3 கணக்காய்வுக் குறைபாடுகள்

தொகை தரமற்றதாக மதிப்பிடப்படும்போது அத்தொகை குறிதத கூட்டுத்தாபனத்திற்கு திருப்பி அனுப்பப்படல் பொதுவாக பின்பற்றப்படும் பொறிமுறையாகும். இதுவரை அவ்வாறான தொகை கூட்டுத்தாபனத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டில்லை. ஆகவே கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கணக்குவைக்க முடியாது.

### 2.3 கிடைக்கவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மூன்று வழங்குநர்களுக்கு நிதி செலுத்தப்படும்போது தக்கவைத்திருந்த ரூபா429,955 தொகை 2018 ஆம் ஆண்டில் கணக்குவைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### 2.4 சட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இசையாமை

(அ) கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மொத்தம் மற்றும் சொத்துக்கள் பொது முகாமையாளரினால் நியமிக்கப்பட்டுள்ள குழுவின் ஊடாக சரியான முறையில் நீக்கப்படும்..

(ஆ) (i) அரச வைத்தியசாலைகளில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக அந் நிறுவனத்தில் மு.ப.6.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரை பணி வேலை முறையொன்று செயற்படுத்தப்படுவதுடன் பொது போக்குவரத்து வசதிகள் இல்லாத இடத்தில் நிறுவனம் அமைந்துள்ளது. இந்நிலையில் அப்பணி தொடர்பில் ஊழியர்களை சரியான நேரத்திற்கு நிறுவனத்துக்கு அழைத்துக்கொள்வது பிரதானமாகும். அதற்கமைய நிறுவனத்துக்கு அருகில் வசித்துவரும் ஊழியர்களின் பங்களிப்பு முக்கியமானதாக கருதப்படுகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் நிறுனத்துக்கு அருகில் வசித்துவரும் ஊழியர்களுக்கு பணிப்பாளர் சபையின் அங்கிகாரத்தின் கீழ் பிரயாண கொடுப்பனவுகள் செலுத்தப்படும்.

(ii) முகாதைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2009/03/09 திகதியுடைய (DMS/E4/10/490/2) இலக்க கடிதத்திற்கு அமைய உற்பத்தி ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் தொடர்பிலான விதிமுறைகள் (Norms) மாற்றமடைய வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய நிலவிரும் விதிமுறைகள் (Norms) குழுவொன்றின் ஊடாக ஆராயப்பட்டதுடன் உற்பத்திகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடனும் காலத் தேவைக்கு ஏற்ப உற்பத்தி ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை செலுத்துதல் பற்றிய பிரேரணையொன்று குழுவொன்றின் ஊடாக பணிப்பாளர் சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அப் பிரேரணைக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன் அதற்கமைய கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டன.

## 3' நிதியியல் மீளாய்வு

### 3.1 நிதியியல் பெறுபேறுகள்

நிதியியல் பெறுபேறுகள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட எல்லா விடயங்களும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

### 3.2 தள்ளுபடி நிதி மீளாய்வு

(அ) கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

(ஆ) கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலற்றுகை

#### 4.1.1 செயற்பாட்டு மீளாய்வு

செயற்பாட்டுத் திட்டத்துக்கு அமைய முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

(அ) 2018.05.09 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின்போது சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சர் கௌரவ ராஜித சேனாரத்ன அவர்களினால் அனுப்பிவைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்துக்கு அமைய அரச மருந்துகள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் முக்கிய நோக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாராக வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக திருத்தங்களை ஏற்படுத்துவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டின் இறுதி அரையாண்டின்போது ஜய்கா JICA நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் உற்பத்தி நிலையத்தின் புனரமைப்புப் பணிகள் பூர்த்தி செய்யப்படாத காரணத்தால் 2017 திசெம்பர் மாதம் மீண்டும் இந்திய கம்பனி ஒன்றுடன் மேலும் ஒரு வருட காலத்திற்கான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

(ஆ) (i,ii மற்றும் iii)

அப்போது குற்றப் புலனாய்வுப் பிரிவின் (CID) ஆலோசனைகளுக்கு அமைய உள்நாட்டு முகவருக்கு எதிராக சட்டத்தரணியின் (Lawyer) ஊடாக Letter of Demand அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய உள்நாட்டு முகவருக்கு அது தொடர்பான பொறுப்பிலிருந்து விடுபட முடியாது.

(iv,v மற்றும் vi)
இச் சம்பவம் தொடர்பில் பொறுப்பு கூறவேண்டிய உத்தியோகத்தர்களை அடையாளம் காணுவதற்கான விசாரணையொன்று சுகாதார அமைச்சின் அவசர சுற்றிவளைப்புப் பிரிவினால் நடாத்தப்பட்டுவருவதுடன் ஊழல்கள் புலனாய்வுப் பிரிவினாலும் புலனாய்வொன்று நடாத்தப்படும். .

(இ) 2018 ஆம் ஆண்டில் அக் குறைபாடுகள் ஏற்படாத வகையில் அலுவல்கள் மேற்கொள்ளப்படும்.

(ஈ) இக் காலகட்டத்தில் உற்பத்தி நிலையத்தின் புனரமைப்புப் பணிகள் நடைபெற்றுவந்ததுடன் அப் புனரமைப்புப் பணிகள் பூர்த்தி செய்யப்படவிருந்த காலஎல்லை எதிர்ப்பாராத விதத்தில் கடந்து சென்றுள்ளது
அதனால் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு பெற்றுக்கொடுக்க வேண்டிய கட்டளையுடன் தொடர்புடைய பிரிவுகள் வழங்கல் நடபடிமுறையின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.
மூலப்பொருட்களை பயன்படுத்துவதற்காக எதிர்கால திட்டங்கள் தயாரிக்கப்பட்டுவருகின்றது.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

(அ) 2018 ஆம் ஆண்டின் இறுதி அரையாண்டின்போதும் 2018 ஆம் ஆண்டின் ஆரம்ப அரையாண்டின்போதும் JICA கருத்திட்டத்தின்உற்பத்தி அலுவல்கள் இடைநிறுத்தப்பட்டன. அதனால் திட்டமிடப்பட்ட சில மூலப்பொருட்கள் மேலதிகமாக

காணப்பட்டன. குறித்த மூலப்பொருட்களைக் கொண்டு உற்பத்திகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்படவேண்டிய கட்டளைகள் சம்பந்தப்பட்ட மருந்துகள் வழங்கல் பொறிமுறையின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது..

(ஆ) 406 கி.கிராம் தொகை மழையினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான பெறுமதியை காப்புறுதித் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(இ)

| கட்டளை இலக்கம் | மருந்து | விண்ணப்பிக்கப்பட்ட அளவு(மில்லியன்) | வழங்கப்படாத அளவு (மில்லியன்) | நிதி(ரூபா) | வழங்கப்படாததற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| 2017/SPM/N/R/P/00003 | Amoxicillin Capsules BP 250mg | 100 | 16.275 | 30,027,375.00 | மூலப் பொருட்கள் குறித்த காலப்பகுதியில் கிடைக்காததால் கட்டளைகளை பூர்த்தி |
| 2017/SPM/N/R/P/00002 | Theophylline S.R Tablets 125mg. | 30 | 3.7360 | 3,747,208.00 | மூலப் பொருட்கள் இல்லாமை |
| 2017/SPM/N/R/P/00009 | Spironolactone Tablets USP 25mg | 36 | 1.8590 | 6,562,270.00 | மூலப் பொருட்கள் குறித்த காலப்பகுதியில் கிடைக்காததால் கட்டளைகளை பூர்த்தி |
| 2017/SPM/A/R/P/00012 | Gliclazide Tablets BP 40mg | 34 | 6.1845 | 5,733,031.50 | மூலப் பொருட்கள் இல்லாமை |
| 2017/SPM/N/R/P/00003 | Amoxicillin Tablets USP 125mg. | 8 | 1.4280 | 1,565,088.00 | பொதியளவு களஞ்சிய வசதிகள் இல்லாததால் குறைந்தகொள்ளளவில் இயந்திரங்கள் இயங்கல் |
| 2017/SPM/N/C/P/00010 | Ascorbic Acid Tablets BP 100mg. | 20 | 3.0340 | 1,559,476.00 | மூலப் பொருட்கள் இல்லாமை |
| 2017/SPM/N/R/P/00005 | Tolbutamide Tablets BP 500mg | 5 | 1.2710 | 2,045,039.00 | மூலப் பொருட்கள் இல்லாமை |
| 2017/SPM/N/R/P/00007 | Ciprofloxacin Tablets USP 500mg | 10 | 5.3865 | 18,874,296.00 | மூலப் பொருட்கள் இல்லாமை |
| | | | 39.174 | 70,113,783.50 | |

**4.4 சர்ச்சைக்குறிய கொடுக்கல் வாங்கல்கள்**

பணிப்பளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் ரூபா 595,000,00 செலுத்தப்பட்டுள்ளது

**4.5 அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள்**

Chloroquine Phospate BP மூலப்பொருட்கள் மலேரியா நோய் தொடர்பில் தயாரிக்கப்பட்ட மருந்தினை தயாரிப்பதற்குத் தேவைப்படுவதுடன் தற்போது மலேரியா ஒழிக்கப்பட்டுள்ளதால் குறித்த மருந்து உற்பத்தி செய்யப்படுவதில்லை.

Microcrystaline cellulose BP 200Kg மழையினால் சேதமடைந்துள்ளதுடன் இழப்பினை பெற்றுக்கொள்வதற்காக காப்புறுதி நிறுவனங்களுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

Erythrosine Red Lake ----P 27
இது காலாவதியான மூலப்பொருளாகும். உற்பத்தியின்போது நிகழும் பொதுவான வீண் விரயமாக கருதப்படுகின்றது. (Wastage).

Polysorbate BP
இம் மூலப்பொருட்களைக் கொண்டு உற்பத்தி செய்வதற்கு எதிர்ப்பார்க்கப்பட்ட மருந்துகள் செய்முறை தோல்விகண்டுள்ளதால் அது பயன்படுத்தப்படவில்லை.

Zinc stearate BP
உற்பத்தி நிலையத்தின் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் உற்பத்தி நடவடிக்கைகள் எதிர்ப்பார்க்கப்படாத வகையில் பின்தங்கியதால் குறித்த மூலப்பொருட்கள் பயன்படுத்தப்படவில்லை. .

## 4.6 பணியாட்றொகுதியின் நிருவாகம்

(அ) பிரதி முகாமையாளர் (விற்பனை) பதவி வெற்றிடத்தினை நிரப்புவதற்காக ஒருமுறை விண்ணப்பங்கள் கோரப்பட்டதுடன் ஆட்சேர்ப்பதற்கு பொறுத்தமான விண்ணப்பதாரிகள் இருக்கவில்லை.

(ஆ) மற்றும் (இ)

i செய்முறை மற்றும் ஆராய்ச்சிகள் நிறைவேற்றதிகாரி

செய்முறை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி அலுவல்கள் தொடர்பில் பட்டதாரிகள் இருவர் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் தற்போது தொழில்நுட்ப உதவியாளர்களாக பயிற்சிபெற்று வருகின்றனர்.

ii **SPMC ஊடக ஒருங்கிணைப்பாளர்கள்**

எமது கூட்டுத்தாபனத்தின் புதிய உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காக கௌரவ அமைச்சரின் ஊடக ஒருங்கிணைப்புப் பிரிவின் பிரிவின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ளும் தேவை எழுந்ததால் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யயப்பட்டுள்ளது.

iii நிகழ்ச்சித் திட்ட ஒருங்கிணைப்பாளர்

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பயிற்சிப் பாடசாலையின் நிகழ்ச்சித் திட்ட அலுவல்கள் தொடர்பில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் ஆசேர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

iv **கருத்திட்ட ஒருங்கிணைப்பாளர்**

JICA மற்றும் Joint Venture கருத்திட்டம் தொடர்பில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளம்) பதவி தொடர்பிலான நேர்முகப் பரீட்சை சபையின் அறிக்கையை பூரணப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறித்த உத்தியோகத்தர் இலங்கை கடற்படையில் முன்னய சிரேட்ட உத்தியோகத்தர் ஆவார். அவர் யுத்தகாலத்தில் நாட்டின் ஒருமைப்பாடு மற்றும் இறைமை தொடர்பில் மிகவும் பங்களிப்புடன் செயற்பட்ட அறிவிலும் ஒழுக்கத்திலும் அனுபவமிக்க உத்தியோகத்தர் ஆவார்.

ஓய்வு பெறும் உச்ச வயதெல்லையான 55 வயதில் ஓய்வு பெறச்செய்த முப்படையின் சிரேட்ட உத்தியோகத்தர்களின் சேவையை, அரச நிறுவனங்களின் மேம்பாட்டுக்காக உகந்த முறையில் பயன்படுத்துதல் தொடர்பிலான சேனாதிராசா மேதகு சனாதிபதி அவர்களின் எண்ணக்கருவை செயற்படுத்துவதன் ஊடாக, அவரின் அறிவு மற்றும் ஒழுக்கமுடைய அனுபவத்தினை நிறுவனத்தின் மேம்பாடு தொடர்பிலும் நிறுவனத்தின் புதிய எடுத்துக்காட்டுகளுக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்யும் நடபடிமுறையை தயாரிக்கும் மிக முக்கியமான செயற்பாடுகள் உட்பட்ட பல முக்கியமான விடயங்கள் இவரின் விடயப் பரம்பலில் உள்ளடங்கும்.

ஆகவே, மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் பணிப்பாளர் சபையினால் பரவலாக ஆராயப்பட்டு குறிப்பிட்டவரின் சேவை தொடர்ந்தும் நிறுவனத்துக்குத் தேவைப்படுவதாக தீர்மானிக்கப்பட்டு அவரது சேவை மேலும் 06 மாதகாலத்திற்கு நீடிக்கப்பட்டது.

(உ)

(ஊ)

5.0 நிலையான அபிவிருத்தி

5.1 **நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்**

நிலையான அபிவிருத்தி பற்றிய ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சிநிரலுக்கு அமைய எமது நிறுவனத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்புகள் தொடர்பில் ஊக்கமுடைய தரப்பினர்கள் அடையாளம் காணப்படுவர்.

6.0 கணக்கு அலுவல்கள் மற்றும் நல்லாட்சி

6.1.1 **வழங்கல் மற்றும் ஒப்பந்த பொறிமுறை**

(அ) அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த மாதிரிப் படிவத்துக்கு அமைய சம்பந்தப்பட்ட வழங்கல் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அத்துடன் காலாண்டின் அடிப்படையில் நேர அட்டவணையும் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ)

**(i)** மருந்துகள் உற்பத்தி தொடர்பிலான மனிதவள பயிற்சிப் பாடசாலையொன்றின் அவசியம் பற்றி 2017-2021 ஆம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைப்புத் திட்டத்தின் (Corporate Plan) 32 ஆம் பக்கத்தில் (Corporate Social Responsibility - CSR) குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சரவை தீர்மானத்துக்கு அமைய இலங்கை மருந்துகள் உற்பத்தியை விஸ்தரிக்கும் நோக்கத்துடன் தொழிற்சாலைகளை அமைத்தல். 2017-2021 ஆம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைப்புத் திட்டத்தின் (Corporate Plan) 18 ஆம் பக்கத்தில் Major Goal இன் கீழ் increase product portfolio through joint ventures குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் Corporate Plan - SWOT Analysis இற்கு அமைய 19 ஆம் பக்கத்தில் Strength கீழ் new state of the art laboratory and pharma training school பொது ஆய்வுகூடமொன்றை ஆரம்பிக்கும் தேவை எழுந்துள்ளது.

மருந்துகளை உற்பத்தி செய்வது பற்றிய பயிற்சிப் பாடசாலையொன்றை ஆரம்பிக்கும் தேவை 2016 ஆம் ஆண்டின் இறுதியின்போது எழுந்ததுடன் அது தொடர்பில் மாணவர்களை சேர்த்துக்கொள்ளுவது பற்றிய விளம்பரமொன்று 2016.12.04 ஆம் திகதி

Daily News பத்திரிகையில் வெளியிடப்பட்டது. அதன் முதலாவது பாடநெறி 2017 சனவரி 25ஆம் திகதி இரத்மலானை தொழிற்பயிற்சி நிலையத்தை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டு அங்கு நடாத்தப்பட்டதுடன் அதில் 24 மாணவர்கள் கலந்துகொண்டார்கள். தற்போது முதலாவது பாடநெறி பூர்த்தி செய்யப்பட்டு இரண்டாவது பாடநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இரத்மலானை தொழிற்பயிற்சி நிலையத்துக்கு செலுத்தப்பட்டுவரும் வாடகை தொகை குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் கருத்திட்ட அறிக்கையொன்றைத் தயாரிக்கும் தேவை எழவில்லை,

**(ii)** இது எமது Corporate Plan அமைய CSR கருத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததால் நிதிசார்ந்த பிரதிலாபம் மற்றும் Return on Investment எதிர்பார்க்கப்படவில்லை. ஆகவே விசேட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றை நியமிக்கவேண்டிய அவசியம் இல்லை .

தற்போது இலங்கையில் மருந்து உற்பத்தியாளர்களுக்கு பயிற்சியளிக்கும் பாடசாலையொன்று இல்லாத அதேநேரம் பயிற்சி பெற்றவர்கள் போதியளவு ஆட்சேர்ப்பு செய்யப்படாததால் தனிப்பட்ட மருந்து உற்பத்தி முதலீட்டாளர்கள் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு முன்வருவதற்கு தயங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே அத் தேவையை நிவர்த்தி செய்வதற்காகவும் தனியார்த்துறை மருந்து உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் மருந்துகளின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்கான பொது ஆய்வுகூடமொன்றை தாபிக்கும் கோரிக்கை எமது 2020 நோக்கின் கீழ் முன்வைக்கப்பட்டுள்ளது. அல்லாதவிடத்து, தனியார்த்துறை சார்ந்த மருந்து உற்பத்தி முதலீட்டாளர்களின் ஊக்கநிலை இழக்கப்பட்டு தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படாதவிடத்து நாட்டில் குறைந்த விலைக்கு , தரமான மருந்துகள் உற்பத்தி ஒழியும் நிலை ஏற்பட்டிருக்கும்.

அத்துடன், எமது நாட்டின் மருந்துகள் சட்டத்துக்கு அமைய மருந்துகளை நியமிக்கும்போது அவற்றின் பெயரில் மட்டும் குறிப்பிடவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மருந்துகளின் தரத்தினை கட்டாயம் நிர்ணயிக்க வேண்டும். மருந்துகள் உற்பத்தி செய்யப்படும் இரசாயகூடத்துக்கு அருகில் பொது பரிசோதனை கூடமொன்றையும் தாபிப்பதன் ஊடாக தரமான மருந்துகளை தயாரிப்பதற்கு வசதியாக அமையுமென்பது எமது கருத்தாகும்.

**(iii)** பயிற்சிப் பாடசாலையையும் பொது பரிசோதனைக்கான இரசாயனகூடத்தையும் கலுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த ஹொரனை மற்றும் புலத்சிங்கள பிரதேசத்தில் தாபிப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான காரணமும் ஏனைய காரணங்களும் பின்வருமாறு

1. Joint venture கருத்திட்டத்துக்கு அமைய தனியாரத்துறையின் ஒருங்கிணைப்புடன் புலத்சிகள மற்றும் ஹொரண பிரதேத்தில் 31 தொழிற்சாலைகள் அண்மையில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆகவே அப்பிரதேசத்தில் பயிற்சிப் பாடசாலை மற்றும் பொது ஆய்வு கூடத்தினை தாபிப்பதற்காக அப்பிரதேசத்தில் உள்ள பொறுத்தமான காணி அல்லது கட்டிடமொன்றைப் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்க்பட்டுள்ளது.

2. உத்தேச தொழிற்சாலையை தற்போது ஹொரண பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுவரும் தொழிற்சாலையையும் பொது இடத்தில் தாபிக்கும் தேவை இருந்துவந்தது.

3. அடிப்படைத் தேவைகள் பற்றிய பத்திரிகை விளம்பரங்கள் வெளியிடப்பட்டுள்ளதால் இக் கொள்வனவு தொடர்பில் Standard Bidding Document அவசியமில்லை.

4. எமது தேவைக்கான காணி அல்லது கட்டிடமொன்றை பொருத்தமான இடத்தில் பெற்றுக்கொள்வதற்காக வெளியடப்பட்ட பத்திரிகை விளம்பரத்துக்கு இரண்டு விலைச்சுட்டிகள் மட்டுமே முன்வைக்கப்பட்டிருந்தன. அது பற்றி மேலும் ஆராயும்போது எமக்குத் தேவையான இடத்திலுள்ள கட்டிடமொன்று மருத்துவ பிணிமனை ஒன்றுக்காக பயன்படுத்தப்பட்டிருந்ததால் (Nrusing Home) அதனை எமது தேவைக்காக பயன்படுத்துவதற்கான வசதி மற்றும் அதற்கான செலவு ஆகியவையும் புதிதாக நிர்மாணிப்பதற்குத் தேவையான செலவு மற்றும் செலவிடப்படும் காலமும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

5. இணைப்பு 9 இல் விலைமனுக்களை திறந்துவைத்தல் தொடர்பான ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**(iv)** கூட்டுத்தாபனத்தின் சட்டத்தரணிகள் சபையைச் சேர்ந்த சட்டத்தரணியினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை(Title Report) , காணியின் உரித்து தொடர்பிலான குறைபாடுகள் இருந்ததால் இக் கட்டிடத்தைப் பெற்றுக்கொண்டு பயிற்சிப் பாடசாலையொன்றையும் பொது பரிசோதகைள் கூடமொன்றையும் துரிதமாக நிர்மாணிக்கும் அவசியம் இருந்துவருவதால் இரண்டாம் கருத்தைப்

பெற்றுக்கொள்வதற்காக, குறித்த உரித்து தொடர்பான உண்மை நிலையை உறுதிப்படுத்துவதற்கு இரண்டாம் சட்டத்தரணியின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இது அரச வங்கியொன்றில் (இலங்கை வங்கி) அடகு வைக்கப்பட்டிருந்த சொத்தாகவிருப்பதால் அதன் உரித்து தொடர்பில் பிரச்சினைகள் காணப்படுமாயின் வங்கி யினால் அச் சொத்து அடகாக பெறப்படாதெனவும் இரண்டாவது சட்டத்தரணியின் சிபாரிசுக்கு அமைய அத் தீர்வு தொடர்பில் திருப்தியடைந்ததுடன் சுகாதார அமைச்சைச் சேர்ந்த சட்டப் பிரிவினால் ஆலோசனைகள் பெறப்படவில்லை.

சாதக நிலை பற்றிய சான்றிதழ் (COC) பெறப்பட்டுள்ளது. (இணைப்பு 10)

இரண்டு அரச நிறுவனங்களிடமிருந்து Structural Report பெற்றுக்கொள்ளுவதற்கு நீண்டகாலம் செல்வதாக அவதானிக்கப்பட்டதால் கூட்டுத்தானத்தைச் சேர்ந்த தற்போதைய நிர்மாணிப்பு அலுவல்கள் தொடர்பான ஆலோசனைக் கம்பனியின் Structural Engineer ஒருவரின் Structural Report பெறப்பட்டது.

எமது விலைமனுக்கோரரல் நடபடிமுறையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட வேண்டிய நிலை இருப்பதால் சம்பந்தப்பட்ட வங்கிக் கிளையுடன் கலந்தாலோசித்து கொள்வனவு செய்ய முடியாது. இக் கட்டிடத்தை கடைசி ஏலவிற்பனையில் பெற்றுக்கொள்ள முனையும்போது பின்வரும் பிரச்சனைகள் எழும்.

1 திறந்த ஏலவிற்பனை யொன்றில் விலைமனுக் கோரப்படல் எமது விமைனுக்கோரும் நடபடிமுறைக்கு அமைய மேற்கொள்ள முடியாது .

2 திறந்த ஏலவிற்பனை ஒன்றின்போது அதிகூடிய விலைகோரலுக்கு கட்டிடம் விற்பனை செய்யப்படுவதால் நாம் பெற்றுக்கொண்டுள்ள அரச மதிப்பீட்டுத் தொகைக்கு அதனைப் பெற்றுக்கொள்ள முடியாது.

3 அவ்வாறு நிகழ்ந்தால், எமது 2020 நோக்கிற்கு அமைய நாட்டில் குறைந்த விலைக்கு தரமான மருந்து உற்பத்தியை மேம்படுத்தும் செயற்பாட்டில் காலதாமதம் ஏற்படும் நிலை ஏற்பட்டிருக்கும்.

**(v)** அரச விலை மதிப்பீட்டாளரினால் விலை மதிப்பீடு செய்யப்பட்டபோது இக் கட்டிடத்தில் காணப்பட்ட குறைபாடுகள் அவதானிக்கப்பட்டு விலை தீர்மானிக்கப்பட்டுள்ளதால் எம்மால் கொள்வனவு செய்யப்பட்டபின் மீண்டும் எமக்குத் தேவையான முறையில் புனரமைக்கப்படுவதால், கட்டிடத்தில் காணப்பட்ட குறைபாடுகள் அவதானிக்கப்பட்ட நிலையில் கட்டிடம் எம்மால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

**(vi)** கட்டிடத்தின் 3 மற்றும் 4ஆம் மாடிகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் இருப்பதால் விற்பனையாளருக்கு COC பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எமது பயிற்சிப் பாடசாலை மற்றும் பொது ஆய்வுகூடம் தொடர்பிலான மாற்றங்கள் செய்யப்பட்டபின் COC இனை பெற்றுக்கொள்வதில் ஆபத்தான நிலை காணப்படாது. அந்நிலை பின்வரும் காரணங்களால் தவிர்க்கப்படுகின்றது.

1 நாம் பெற்றுக்கொண்டுள்ள கட்டிடம் தனியார் வைத்தியசாலை (Nursing Home) ஒன்றுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.அது எமது செயற்பாட்டுடன் தொடர்புடையதாக இருத்தல் விசேடமாகும்.

2 வைத்தியசாலையொன்றில் பயன்படுத்தப்பட்டுவரும் X-ray lab ஹ Operation Theater அடிப்படை கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருப்பதால் எமது அலுவல்களின்போது அது தொடர்பில் குறைந்தளவு ஆபத்துள்ள Laboratory Instrument பயன்படுத்தப்படுவதால் எமது மாற்றத்தின் பின் COC பெற்றுக்கொள்ளல் ஆபத்தானதல்ல, 3ஆம் 4ஆம் மாடிகள் COC பெறப்பட்டுள்ளது.

**(இ)**

**(i)** அரச மருந்துகள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் வழங்கல் அலுவல்கள் இதுவரை மேற்கொள்ளப்பட்ட முறையில் விலைமனுக்களை திறந்துவைக்கும் குழு பின்வருபவர்களைக் கொண்டதாக அமையும்

1 உள்ளக கணக்காய்வுப் பிரிவின் உத்தியோகத்தர்கள்

2 வழங்கல் குழுவின் செயலாளர்

3 சம்பந்தப்பட்ட வழங்கல் பிரிவின் அங்கத்தவர்கள்

சம்பந்தப்பட்ட வழங்கல் தொடர்பில் கலந்துகொண்டவர்கள் மற்றும் அவகளால் முன்வைக்கப்பட்ட விலைகள் பற்றிய விபரங்கள் குழுவினால்

குறித்துக்கொள்ளப்படுவதுடன், அது அரச மருந்துகள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் விலைமனுக்களை திறந்துவைக்கும் ஆவணமாகக் கருதப்படும். .

**(ii)** அரச மருந்துகள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் வழங்கல் நடபடிமுறைகளின்போது பெறுமதி ரூபா 500,000.00 வை விஞ்சிய சில பொருட்கள் தொடர்பில் வழங்கலின்போது முறையான ஒப்பந்தமொன்று செய்துகொள்ளப்பட்டிருக்கவில்லை. பொருளின் விலையில் 10 வீத செயலாற்றுகை முறி (Performance Bond) ஒன்று மட்டும் பெரப்பட்டிருந்தது. எதிர்வரும் வழங்கல் செற்பாடுகளின்போது அரச வழங்கல் வழிகாட்டலுக்கு அமைய செயற்படுவதற்கு எதிர்ப்பார்க்கின்றோம்.

**(iii)** இவ்வாறான இயந்திரம் ஊடாக வழங்கலின்போது ஏற்கனவே வெற்றியடைந்துள்ள மற்றும் பொறுப்புடைய உள்நாட்டு வழங்குநர்களைக் கண்டுபிடிப்பது சிரமமாகவிருந்ததாலும் அவ்வாறு செயற்றிறனுடன் வழங்குவதற்குத் தேவைப்பட்டதாலும் மின் இயந்திரங்களை வழங்கிய, ஏற்கனவே வெற்றிகண்டுள்ள பொறுப்புடைய உள்நாட்டு வழங்குநர்கள் மற்றும் Yellow Pages மூலமாக கண்டுபிடிக்கப்பட்ட வழங்குநர்களின் பட்டியலொன்றின் (07 பேரைக் கொண்ட) ஊடாக விலைமனுக் கோரப்பட்டுள்ளது.

Forklift இயந்திரம் தொடர்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட வழங்குநர்களின் பட்டிலொன்று முன்வைக்கப்பட்டது.

**(இ)** நிறுவனத்தில் தற்போது பயன்படுத்தப்பட்டுவரும் பல்வேறு இயந்திரங்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள் திறந்த சந்தையில் பெற்றுக்கொள்ள முடியாத நிலை இருப்பதால் குறித்த உதிரிப்பாகங்களை ஆரம்ப உரிமையாளரிடமிருந்து பெறவேண்டிய நிலை எற்பட்டுள்ளது.

அப்போது அவர்கள் அது தொடர்பில் ஒப்பந்தங்களை செய்துகொள்ள முன்வராத காரணத்தினால் அடுத்துவரும் கொள்வனவு சந்தர்ப்பங்களின்போது ஒப்பந்தங்களை செய்துகொள்வது தொடர்பில் முயற்சி செய்வோம்.

6.1.2 **ஒப்பந்த அடிப்படையிலான நிருவாகத்தின் குறைபாடுகள்**

**(i)** ஆலோசனை வழங்கிய நிறுவனத்தின் சேவை திருப்தியடையக்கூடிய நிலையில் இல்லாத காரணத்தால் அவர்களுடன் செய்துகொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்கானஆலாசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக குறித்த ஒப்பந்தம் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பின் குறித்த ஒப்பந்தம் காணாமல் போயுள்ளது. கூட்டுத்தாபனத்தின் சட்டத்தரணிகள் சபையைச் சேர்ந்த சட்டத்தரணியினால் தயாரிக்கப்பட்ட இரத்துச் செய்வதற்கான ஒப்பந்தத்திற்கு அமைய கோவை தயாரிக்கும் ஒப்பந்த வேலைகள் வரை ஆலோசனை சேவைக்கான கட்டணங்கள் செலுத்தப்பட்டு அவர்களின் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

**(ii)** விமைனுக்களை திறக்கும்போது பின்பற்றப்பட்ட நடபடிமுறையை பின்பற்றுவதற்காக திட்டமிடல் மற்றும் கொள்வனவுப் பிரிவிற்கு அறிவுறுததப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட ஒப்பந்த நிறுவனத்துடன் ஒப்பந்தங்களை தயாரிக்கும் பணிகள் ஆலோசனைக் கம்பனியினால் காதாமதம் செய்யப்பட்டுள்ளது.

**(iii)** கட்டிடத்தை நிர்மாணிக்கும் பணிகளில் மாற்றங்கள் செய்யப்பட்டதால் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

6.1.3 **காலதாமதமடைந்த கருத்திட்டங்கள்**

**Four Storied Facility Building**

குறித்த கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டபோது ஏற்பட்ட நடைமுறைரீதியான பிரச்சினைகளின் காரணமாக காலதாமதம் ஏற்பட்டுள்ளதுடன் நிர்மாணிக்கப்படும் நிலத்தடி வழங்கல் தொகுதிகள் உட்பட்ட ஏனைய அமைப்புகளை நீக்குவதற்காக காலதாமதம் ஏற்பட்டது.

**Two Storied Steel structure warehouse**

குறித்த கட்டிட நிர்மாணிப்புத் திட்டத்திற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அங்கீகாரம் வழங்கப்படாத காரணத்தால் திட்டங்கள் மாற்றப்பட்டு நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்பட்டதால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

6.2 **ஆண்டறிக்கைகளை சமர்ப்பித்தல்**

2016 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக 2019 ஆம் ஆண்டின்போது அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

6.3 **தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வுப் பிரிவுகள்**

வழங்குநர்களுக்கு அறிவிப்பதற்கு காலதாமதம் ஏற்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்ளும் அதேநேரம் சம்பந்தப்பட்ட நட்டங்களை அறவிடுவது தொடர்பில் வழங்குநருடன் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நட்டத்தை பெற்றுக்கெடுப்பதற்கு ஆரம்ப வழங்குநர் இணக்கம் தெரிவித்துள்ளதுடன் அதனை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன..

7.0

**(அ) நிலையான சொத்துக்கள்**

நிலையான சொத்துக்களை செயற்றிறனுடன் நீக்கல் தொடர்பில் பொதுமுகாமையாளர் உட்பட்ட குழுவினால் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**(ஆ) மொத்தம்**

குறித்த காலத்தில் உற்பத்திக் கூடத்தின் புனரமைப்புப் பணிகள் நடைபெற்றுவந்ததுடன் புனரமைப்புப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த காலம் எதிர்பார்க்காத விதமாக அதிகரித்துள்ளது. ஆகவே சில மூலப்பொருட்கள் மேலதிகமாக இருந்தன.

இதன் பின் அந்நிலை தொடர்பில் பரவலாக ஆராய்ந்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

**(இ) பணியாட்றொகுதி ஆள்சேர்ப்பு**

ஆட்சேர்ப்பு தொடர்பில் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல், சமூகம் மற்றும் வெளியேறலை குறிப்பிடல் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# வரைபடமீள்நோக்கு

## மனித வளங்கள்




## தரக்கட்டுப்பாடு



## உற்பத்தி


உற்பத்தி வெளியீடு
2500
2000
1500
1000
500
0
அளவு
2008
2009
2010
2011
2012
2013
2014
2015
2016
2017
ஆண்டு


உற்பத்தியின் பிரதான பங்களிப்புகள் - 2017
259.2
215.6
151.2
118.758
114
66
63
58.1
50.4
42.7
பரசிடமோல் குளிகைகள் பீபி 500மிகி
பிறெட்னிசொலோன் குளிகைகள் பீ 5மிகி
சல்பியுடமோல் குளிகைகள் பீபி2மிகி
அமொக்சிசிலின் கூ.குளிகை 250மிகி
க்ளிக்ளசைட் குளிகைகள் பீ 40மிகி
பென்செக்சோல் குளிகைகள் பீபி2மிகி
கிளிக்ளசைட் குளிகைகள் பீ 80மிகி
குளொக்சசிலின் கூ. குளிகைகள் பீபி 250மிகி
விற்றமின் டீ குளிகைகள் வோர்கு
குளொக்சசிலின் கூ. குளிகைகள் பீபி 500மிகி

## விற்பனை


புரள்வு பகுதி 2017
19.13
0.34
78.25
கூ.சே.தி.
அ.ம.கூ
வினியோகம்


புரள்வு
3500
3000
2500
2000
1500
1000
500
0
2008
2009
2010
2011
2012
2013
2014
2015
2016
2017

## நிதி


தேறிய இலாபம் / (நட்டம்)
ரூபா (மில்)
300
250
200
150
100
50
0
2008
2009
2010
2011
2012
2013
2014
2015
2016
2017
ஆண்டு


மொத்த சொத்துக்கள்
ரூபா .000
3,350,000
3,150,000
2,950,000
2,750,000
2,550,000
2,350,000
2,150,000
1,950,000
1,750,000
1,550,000
1,350,000
1,150,000
950,000
750,000
2008
2009
2010
2011
2012
2013
2014
2015
2016
2017
ஆண்டு

## பராமரிப்பு


மின்வலு பயன்பாடு
கிலோவாற்று மணி
3,000,000
2,500,000
2,000,000
1,500,000
1,000,000
500,000
-
1,550,285
1,616,464
1,775,660
2,096,330
2,159,566
2,268,250
2,308,930
2,426,792
2,387,538
2,044,165
2008
2009
2010
2011
2012
2013
2014
2015
2016
2017
ஆண்டு

# கடந்த பத்து ஆண்டுகளில் நிலவிய நிதி தொடர்பான முக்கிய தகவல்கள்

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பணப்புரள்வு | 890,244 | 1,152,684 | 1,379,652 | 1,431,655 | 1,414,546 | 1,941,182 | 1,712,105 | 2,054,363 | 2,434,508 | 3,174,612 |
| விற்பனைச் செலவு | 750,281 | 932,212 | 1,030,545 | 1,127,409 | 1,220,523 | 1,513,899 | 1,319,715 | 1,539,441 | 1,888,256 | 2,666,683 |
| மொத்த இலாபம் | 139,963 | 220,472 | 349,107 | 304,246 | 194,023 | 427,283 | 392,391 | 514,921 | 546,252 | 507,928 |
| தொழிற்பாட்டு இலாபம் | 63,403 | 121,423 | 266,166 | 222,469 | 85,292 | 304,176 | 224,758 | 364,845 | 353,776 | 244,781 |
| நிர்வாக செலவு | 62,127 | 60,243 | 62,869 | 72,730 | 82,390 | 106,096 | 133,933 | 125,469 | 165,788 | 204,579 |
| வட்டி வருமானம் | 60,904 | 33,479 | 30,752 | 23,702 | 34,251 | 28,059 | 44,196 | 53,586 | 87,629 | 77,607 |
| வரிக்கு முன் தேறிய இலாபம் | 120,572 | 151,827 | 292,317 | 244,792 | 117,136 | 329,968 | 266,481 | 414,501 | 441,164 | 321,982 |
| வரிக்கு பின் தேறிய இலாபம் | 78,372 | 98,688 | 154,538 | 193,029 | 98,561 | 209,154 | 183,848 | 262,323 | 296,646 | 223,907 |
| நிலையான சொத்துகள் | 408,129 | 815,342 | 914,716 | 864,779 | 804,305 | 762,641 | 780,718 | 762,560 | 798,657 | 802,775 |
| குறுகிய கால முதலீடு | 265,893 | 201,529 | 243,264 | 331,779 | 210,691 | 429,896 | 913,443 | 1,027,388 | 1,175,754 | 926,461 |
| மொத்த சொத்துகள் | 1,251,026 | 1,718,461 | 1,887,430 | 1,945,347 | 2,003,258 | 2,294,113 | 2,386,449 | 2,700,885 | 2,902,284 | 3,073,471 |
| ஊழியர் எண்ணிக்கை | 195 | 209 | 209 | 208 | 199 | 211 | 226 | 229 | 248 | 274 |

மொத்த சொத்துகள் = மொத்த நடைமுறையற்ற சொத்துகளின் தேறிய புத்தகப் பெறுமதி + மொத்த நடைமுறைச் சொத்துகள்

## ලියාපදිංචි කාර්යාලය

11, සර් ජෝන් කොතලාවල මාවත,
කඳවල වත්ත,
රත්මලාන.

දුරː 2635353, 2637574, 2636966,
2636967 (ADSL)
ෆැක්ස් : 2634771, 2626621, 2623553
වි - තැපැල : spmclanka@sltnet.lk
වෙබ් අඩවිය : www.spmclanka.lk

**සභාපති**
දුර : 2623238 (සෘජු)
2635353, 2714771 (පොදු)

**කළමනාකාර අධ්‍යක්ෂ**
දුර : 2636368 (සෘජු)
2635353, 2637574 (පොදු)

**සාමාන්‍යාධිකාරිණී**
දුර : 3153835 (සෘජු)
2635353, 2637574 (පොදු)

**නිෂ්පාදන දෙපාර්තමේන්තුව**
**නියෝජ්‍ය සාමාන්‍යාධිකාරී - නිෂ්පාදන**
දුර : 2623521 (සෘජු)

සැලසුම් හා ප්‍රසම්පාදන දෙපාර්තමේන්තුව
නියෝජ්‍ය සාමාන්‍යාධිකාරී
- සැලසුම් හා ප්‍රසම්පාදන
දුරː 2623298 (සෘජු)

කළමනාකාරිණී - සැලසුම් හා ප්‍රසම්පාදන
දුරː 2637124 (සෘජු)

අලෙවි දෙපාර්තමේන්තුව
අලෙවි කළමනාකාරිණී
දුර : 3163308 (සෘජු)

තත්ව පාලන දෙපාර්තමේන්තුව
නියෝජ්‍ය සාමාන්‍යාධිකාරී - තත්ව පාලන
දුර : 5012945 (සෘජු)

වට්ටෝරු, පර්යේෂණ හා සංවර්ධන දෙපාර්තමේන්තුව
නියෝජ්‍ය සාමාන්‍යාධිකාරී
- වට්ටෝරු, පර්යේෂණ හා සංවර්ධන
දුර : 5012950 (සෘජු)

මූල්‍ය දෙපාර්තමේන්තුව
නියෝජ්‍ය සාමාන්‍යාධිකාරිණී - මූල්‍ය
දුර : 2626630 (සෘජු)

මූල්‍ය කළමනාකරු
දුර : 2623276 (සෘජු)

නඩත්තු දෙපාර්තමේන්තුව
නියෝජ්‍ය සාමාන්‍යාධිකාරී - ඉංජිනේරු
දුර : 2623246 (සෘජු)

කළමනාකරු - ඉංජිනේරු
දුර : 2623239 (සෘජු)

අභ්‍යන්තර විගණක දෙපාර්තමේන්තුව
අභ්‍යන්තර විගණක
දුර : 2626619 (සෘජු)

මානව සම්පත් දෙපාර්තමේන්තුව
මානව සම්පත් කළමනාකාරිණී
දුර : 2636234 (සෘජු)

## பதிவு செய்யப்பட்ட அலுவலகம்

11,சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை,
கந்தவெல எஸ்ரேட்,
இரத்மலானை

தொ.பே.: 2635353, 2637574 , 2636966 , 2636967
(ADSL)
தொலைநகல் : 2634771, 2626621, 2623553
மின்னஞ்சல் : spmclanka@sltnet.lk
வலையமைப்பு : www.spmclank.lk

**தலைவர்**
தொ.பே. : 2623238 (நேரடி)
2635353, 2714771 (பொது)

**முகாமைத்துவ பணிப்பாளர்**
தொ.பே : 2636368
2635353, 2637574 (பொது)

**பொது முகாமையாளர்**
தொ.பே : 3153853 (நேரடி)
2635353, 2637574 (பொது)

**உற்பத்தித் திணைக்களம்**
**உற்பத்தி பொது முகாமையாளர்**
தொ.பே : 2623521 (நேரடி)

**திட்டமிடல், கொள்வனவு, சந்தைப்படுத்தல்**
**திட்டமிடல், கொள்வனவு பொது**
**முகாமையாளர்**
தொ.பே : 2623298 (நேரடி)

**திட்டமிடல், கொள்வனவு முகாமையாளர்**
தொ.பே : 2637124 (நேரடி)

**சந்தைப்படுத்தல் திணைக்களம்**
**சந்தைப்படுத்தல் முகாமையாளர்**
தொ.பே : 3163308 (நேரடி)

**தரக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்**
**தரக்கட்டுப்பாட்டு பொது முகாமையாளர்**
தொ.பே : 5012945 (நேரடி)

**உருவாக்கல், ஆய்வு, அபிவிருத்தித் திணைக்களம்**
**உருவாக்கல், ஆய்வு, அபிவிருத்தி பொது**
**முகாமையாளர்**
தொ.பே : 5012950 (நேரடி)

**நிதித்திணைக்களம்**
**நிதி பொது முகாமையாளர்**
தொ.பே : 2626630 (நேரடி)

**நிதி முகாமையாளர்**
தொ.பே : 2623276 (நேரடி)

**பராமரிப்புத் திணைக்களம்.**
**பராமரிப்பு பொது முகாமையாளர்**
தொ.பே : 2623246 (நேரடி)

**பராமரிப்பு முகாமையாளர்**
தொ.பே : 2623239 (நேரடி)

**உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம்**
**உள்ளகக் கணக்காய்வாளர்**
தொ.பே : 2626619 (நேரடி)

**மனிதவள திணைக்களம்**
**மனிதவள முகாமையாளர்**
தொ.பே : 2636234 (நேரடி)

## Registered Office

11,Sir John Kotelawala Mawatha,
Kandawala Estate,
Rathmalana.

Tel: 2635353 , 2637574 , 2636966 , 2636967(ADSL)
Fax : 2634771,2626621,2623553
email : spmclanka@sltnet.lk
Web : www.spmclanka.lk

**Chairman**
Tel : 2623238 ( Direct )
2635353, 2714771 (General)

**Managing Director**
Tel : 2636368 (Direct)
2635353, 2637574 (General)

**General Manager**
Tel : 3153835 (Direct)
2635353, 2637574 (General)

**Production Dept.**
**DGM Production**
Tel : 2623521 (Direct)

**Planning & Procurement Dept.**
**DGM Planning & Procurement**
Tel : 2623298 (Direct)

**Manager Planning & Procurement**
Tel : 2637124 (Direct)

**Marketing Dept.**
**Manager Marketing**
Tel : 3163308 (Direct)

**Quality Control Dept.**
**DGM Quality Control**
Tel : 5012945 (Direct)

**Formulation, Research & Development Dept.**
**DGM Formulation, Research & Development**
Tel : 5012950 (Direct)

**Finance Dept.**
**DGM Finance**
Tel : 2626630 (Direct)

**Finance Manager**
Tel : 2623276 (Direct)

**Maintenance Dept.**
**DGM Engineering**
Tel : 2623246 (Direct)

**Manager Engineering**
Tel : 2623239 (Direct)

**Internal Audit Dept.**
**Internal Auditor**
Tel : 2626619 (Direct)

**Human Resources Dept.**
**Manager Human Resources**
Tel : 2636234 (Direct)

www.spmclanka.lk